

**வடமாகாண**
**மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்"

– லியூசி லார்கோம்–
(அமெரிக்கக் கவிஞர்)


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 க்திர் 349 ஐப்பசி 24ஆம் நாள் சனிக்கிழமை 10 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


## நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதா? நீதிமன்றின் கருத்தை அறிந்தே முடிவு

### தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகின்றது

கொழும்பு, நவ. 10
நாடாளுமன்றத்தை நேற்று நள்ளிரவு கலைக்கும் அரசிதழை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ளார். ஆயினும் நாடாளுமன்றத் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அரச தலைவரின் அரசிதழ் அறிவிப்புத் தொடர்பில் உயர் நீதிமன்றின் கருத்து அறிந்தே நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய லங்கா ஈ நியூஸ் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக, அரச தலைவர் நாடாளுமன்றத்தை 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் கலைக்க முடியாது. ஆனால் அதையும் மீறி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் அறிவிப்பை அரச » 25

### எட்டு அமைச்சர்கள் நேற்று பதவியேற்பு

கொழும்பு, நவ.10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்று அமைச்சுப் பதவிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன. » 25

# கலைக்கப்பட்டது நாடாளுமன்றம்

- ஜனவரி 5ஆம் திகதி தேர்தல்
- நவ.19 - நவ.26 வேட்புமனுத் தாக்கல்
- ஜனவரி 17இல் புதிய அமர்வு

யாழ்ப்பாணம், நவம்பர் 10
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது நாடாளுமன்றம் நேற்று நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டுள்ளது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசிதழ் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இந்த அரசிதழில் நேற்று இரவு 8.30 மணிக்கு மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டார். அரசிதழ் அறிவிப்பு நேற்றிரவு 11.30 மணிக்கு வெளியானது. அரச தலைவரின் இந்தத் திடீர் அறிவிப்புப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. » 25

### மைத்திரி – மகிந்த மந்திராலோசனை

கொழும்பு, நவ. 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச இடையே நேற்று இரண்டு தடவைகள் மந்திராலோசனை » 25

### நாடாளுமன்று செல்லாத தலைமை அமைச்சர்

கொழும்பு, நவ. 10
தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சர்கள் ஒரு நாடாளுமன்ற » 25

## ஐ.தே.கட்சி போர்க்கொடி

கொழும்பு, நவ. 10
19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக, அரச தலைவரால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. அரசமைப்புக்கு முரணாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. » 25

### தேர்தல் முறைகேட்டுக்கு தயாராகிறார் மைத்திரி

ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று அவசர அவசரமாக எஞ்சியுள்ள அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கியமை நாடாளுமன்றத் தேர்தலின் போது முறை » 25

## பொலிஸ் மைத்திரி கையில்

கொழும்பு, நவ. 10
சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சின் கீழும், பொருளாதார அமைச்சின் கீழ் இருந்த இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச நிர்வாக அமைச்சின் கீழ் இருந்த அரச வங்கிகள் என்பன நிதி அமைச்சின் கீழும் கொண்டு வரப்பட்டுள்ளன. » 22

### 2018 வாக்காளர் பட்டியலின்படி தேர்தல்

கொழும்பு, நவ. 10
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் 2018ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கு அமைவாகவே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
2018ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் ஆரம்பமாகின. ஒக்ரோபர் மாதம் » 22

### கூர்ந்து கவனிக்கிறது இந்தியா

கொழும்பு, நவ.10
தற்போது இலங்கையில் உள்ள நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. ஜனநாயகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பண்புகள் பின்பற்றப்பட வேண்டும். இது இலங்கை » 25

### அச்சகத் திணைக்களமும் மைத்திரியிடம்

கொழும்பு, நவ. 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிரடியாக நேற்றிரவு விடுத்த சிறப்பு அரசிதழ் ஊடாக அரச அச்சகத் திணைக்களத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார். ஊடகத்துறை » 25

## மைத்திரியின் முடிவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

அரச தலைவர் சட்டத்தரணி சுமந்திரன்

கொழும்பு, நவ. 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிட்ட அரசிதழ் அறிவிப்புக்கு எதிராக வழக்குத் » 25

## ரணில் பக்கம் சாய்ந்தால் 3 கூறாகும் கூட்டமைப்பு

அச்சுறுத்துகிறார் எஸ்.பி.

கொழும்பு, நவ. 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரணில் விக்கி ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினால் அந்தக் கட்சி மூன்றாக உடையும் என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா தெரிவித்தார். அரச தகவல் » 25

## வழக்குகளிலிருந்து தப்பிக்க

# ஆட்சியை பலாத்காரமாக தக்க வைக்கவே முயற்சி

## சாடுகிறார் அஜித் பி.பெரேரா

கொழும்பு, நவ. 10

தேர்தல்கள் அடுத்தடுத்து நடைபெறவிருக்கும் நிலையில் மகிந்த தரப்புக்கு எதிராகவுள்ள குற்றச்சாட்டுகள், வழக்குகள் மற்றும் விசாரணைகளில் இருந்து தப்பித்துக்கொள்ளவே ஆட்சியை பலாத்காரமாகக் கொண்டுசெல்ல முற்படுகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசின் காலத்தில் இடம்பெற்றிருந்த ஊழல் மோசடிகளை துரித கதியில் விசாரணைக்கு உட்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்காக மூன்று சிறப்பு மேல் நீதிமன்றங்களை அமைத்திருந்தோம். ஒரு மேல் நீதிமன்றம் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

முன்னாள் அரசின் காலத்தில் இடம்பெற்ற நூற்றுக்கணக்கான ஊழல் மோசடிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. இவற்குக்கு எதிராக தாக்கல் செய்யப்படவிருக்கும் வழக்குகள் மற்றும் விசாரணைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே மகிந்த ராஜபக்ச தரப்பு பலவந்தமாக அதிகாரத்தைக் கொண்டுசெல்ல முற்படுகிறது.

சட்டவிரோத நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சுசில் பிரேமஜயந்தவின் முதலாவது அறிவிப்பாக சிறப்பு மூன்று நீதிமன்றங்களையும் நீக்குவதாகக் கூறியுள்ளார். இதிலிருந்தே அவர்களின் நிலைப்பாடு தெளிவாகிறது. சுசிலுக்கு எதிராக பல ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. அரச தலைவர் சட்டவிரோதமாக சுசில் பிரேமஜயந்தவை நீதி அமைச்சராக நியமித்தமை பாரதூரமானது.

பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் நீண்டகாலமாக விசாரணை செய்து ஊழல் மோசடிகளுக்கு எதிராக ஆதாரங்களைத் தேடியுள்ளனர். எமது நாட்டின் சட்டவாட்சி சவாலுக்கு உட்படுத்தப்படுவது நீதித்துறையைக் கேள்விக்குறியாகிவிடும். ஆட்சிக்கவிழ்ப்பு சதித் திட்டம் எதற்கு நடந்ததென சுசிலின் வாயில் வெளியாகியுள்ளது.

இதேவேளை, அரச தலைவர் இரண்டாவது முறையாக போட்டியிடுவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு மகிந்த தரப்பு ஆதரவளிப்பாதாக அளித்துள்ள உறுதிகள் என்பவற்றின் பிரகாரமே எமது ஆட்சியை ஜனநாயகத்துக்கு விரோதமாக கவிழ்க்க முற்படுகின்றனர் - என்றார். (5,10)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மகிந்தவுடன் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, நவ. 10

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும்புதியதலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அந்தச் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பல விடையங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளதோடு, அதிகாரிகள் தொடர்பில் சில கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளது. எதிர்வரும் பாதீட்டில் அரச சேவைச் சம்பள மீளமைப்பு, அரச சேவையில் நிறுத்தப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை மீண்டும் வழங்குதல், நிறுத்தப்பட்ட வரிச்சலுகைப் பாத்திரங்களை மீள வழங்குதல் ஆகிய கோரிக்கைகளை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைத்துள்ளது. அத்தோடு மருத்துவசேவையில்வடக்கு மாகணத்தில்அரசியல்தலையீடுகள் இருப்பதாகவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது "வடக்கு மாகாணத்தில் மருத்துவ சேவையில் அரசியல் தலையீடுகள் இடம்பெறுவதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. சாவகச்சேரி தாள வைத்தியசாலைக்கு கொழும்பு அரசால் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த மருத்துவ அத்தியட்சகரை பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர், மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனையையும் மீறி ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் கொழும்பு அரசு நிலையானது இல்லை எனக் காரணம் குறிப்பிட்டு முன்னாள் அரசின் முகவர்களைத் திருப்பப்படுத்த பொருத்தமற்ற முறையில் தலையீடு செய்து நிறுத்தி உள்ளார். இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அரசதலைவரால் அமைக்கப்பட்ட அரசு நிலையானது இல்லை எனக் குறிப்பிட ஆளுநரின் செயலாளருக்கு அதிகாரம் உள்ளதா? அரச ஊழியர்கள் அரசியல் சார்ந்த அறிக்கைகளை எவ்வாறு இட முடியும்?. சாவகச்சேரி தள வைத்தியசாலை மருத்துவர் அவ்வாறு செய்யாமல் அரசியல் பலத்தைக் கொண்டு கதிரையை விட்டு நகர மறுத்தல் கண்டிக்கத் தக்க விடயமாகும் அதற்காகத் தன்னிடம் உள்ள அரசியல் பலத்தை ஆளுநரின் செயலாளரூடாகப் பிரயோகிப்பது அரச சேவையில் அரசியல் தலையீடாகவே நாம் கருதுகின்றோம். அவருக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றுள்ளது. (21)



## நாட்டின் குழப்பத்துக்கு நாடாளுமன்றை கூட்டினால் ஒரு மணி நேரத்தில் தீர்வு

### கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 10

நாட்டில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்கு நாடாளுமன்றத்தைக் கூட்டி ஒரு மணித்தியாலத்துக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஆனால், அதற்கு தயாரில்லாது பலவந்தமாக அரசை கொண்டுசெல்லப் பார்க்கின்றனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்சன ராஜகருணா தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் இல்லாது ஜனநாயகத்தைக் காலால் உதைத்து பலவந்தமாகப் புதிய அரசைக் கொண்டுசெல்கின்றனர். ஜனநாயகம் தொடர்பில் குரல் கொடுத்திருந்த வாசுதேவ நாணயக்கார, தினேஸ் குணவர்தன போன்றோர் எங்கே?. நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் கருத்தை வரவேற்கின்றோம். சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள ஆட்சிக்கு எதிராக அவர் மாத்திரமே குரல் எழுப்பியுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் என்று உலக நாடுகள் முழுவதும் இன்று எமது நாட்டில் இடம்பெற்றுவரும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயலுக்கு எதிராக அணிதிரண்டுள்ளன. நாடாளுமன்றத்தைக் கூட்டி ஜனநாயக முறைப்படி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு உலக நாடுகள் தெரிவித்து வருகின்றன. அதனைதான் நாங்களும் தெரிவிக்கின்றோம்.

ஒருவர், இருவரின் அதிகார பேராசையால் நாட்டு மக்களே பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கூட்டி வேறு வேறு நிகழ்ச்சி நிரலில் ஈடுபடாது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு 15ஆம் திகதி முதல் அமைதியான சூழலை ஏற்படுத்த வேண்டும். எமக்குப் பெரும்பான்மை இல்லாதுபோனால் எதிர்க்கட்சியில் அமர்வோம் - என்றார். (5,10)

## சிங்கப்பூருடனான உடன்படிக்கையை முடிந்தால் முறித்துக் கொள்ளுங்கள்

### சவால் விடுகிறார் ஹர்ச டி சில்வா

கொழும்பு, நவ. 10

சிங்கப்பூருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை நாட்டின் பொருளாதாரத்தை பாரதூரமாகப் பாதிக்கும் என்று தெரிவித்திருந்த பந்துல குணவர்தன, சட்டவிரோதமாக பன்னாட்டு வர்த்தக அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் சிங்கப்பூருடனான உடன்படிக்கையை முறித்துக் கொள்வது தொடர்பில் மீளப் பரிசீலிக்கப்படுமென தெரிவிக்கிறார். பொய்யான தரவுகளையும், தகவல்களையும் கூறி மக்களை இவர்கள் ஏமாற்றியுள்ளமை தெளிவாகிறது. முடிந்தால் சிங்கப்பூருடனான உடன்படிக்கையை முறித்துக் காட்டட்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

டொலருக்கான ரூபாயின் பெறுமதி பெரிய வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது. கடந்த 25ஆம் திகதி 172 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி இன்று 175ரூபாவை எட்டியுள்ளது. பொருளாதார ரீதியில் பெரிய வீழ்ச்சியை நோக்கி நாடு நகர்கிறது. பன்னாட்டுச் சமூகம் மைத்திரி மகிந்த தரப்பு மீது நம்பிக்கை கொண்டுள்ளது என்றார்கள். பெரியளவான மூலதனம் மீண்டும் நாட்டுக்கு வரும் என்றார்கள். ஆனால், கடந்த 25ஆம் திகதி முதல் நேற்றுவரையான 14 நாள்களில் 101 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மீளக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

பங்குச்சந்தையும் கடுமையான வீழ்ச்சியை நோக்கி நகர்கிறது. ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகளில் எமக்கு கடனை மீளச் செலுத்த முடியுமா? என்று பன்னாட்டுச் சமூகமும் நம்பிக்கையை இழந்துள்ளன. வெளிநாட்டுக்கையிருப்பும் வீழச்சியைச் சந்தித்தால் அடுத்தவருடம் பெரிய சவால்களை நாம் எதிர்க்கொள்ள நேரிடும். 5 பில்லியன் டொலர்களை அடுத்த வருடம் கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது.

சட்டவிரோத பன்னாட்டு வர்த்தக அமைச்சராக பொறுப்பேற்றுள்ள பந்துல குணவர்தன, சிங்கப்பூர் உடனான உடன்படிக்கை நாட்டுக்கு ஆபத்தானது. தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அதனை இல்லாமல் செய்வோம் என்று கூறியிருந்தார். தற்போது அதனை மீள பரிசீலித்துப் பார்க்க வேண்டும் எனக் கூறுகிறார். இதிலிருந்து அவரின் கருத்துகள் அனைத்தும் பொய்யானவையென அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

சிங்கப்பூர் உடன்படிக்கை நாட்டுக்கு ஆபத்தானது என்றால், ஏன் அதனைத் தொடர்ந்து கொண்டுசெல்ல முற்படுகின்றீர்கள். நாட்டுக்கு இது பாரதூரமானது என்றால் இல்லாமல் செய்யுங்கள். மக்களை ஏமாற்றியே இவர்கள் அரசியல் செய்கின்றனர் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (5,10)

## அலரிமாளிகைக் குழுவுக்கு எங்கள் பலத்தைக் காட்டுவோம்

### சீறுகின்றன சு.கவின் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, நவ. 10

எமது தேவைகளைக் கருத்திற்கொள்ளாது செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவும், மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாகவும் தொழிற்சங்கங்களின் பலத்தை நிரூபிக்கும் வகையில் நாளை மறுதினம் திங்கட் கிழமை 'நாட்டைப் பாதுகாப்பதற்கான உழைக்கும் மக்களின் பலம்' எனும் தொனிப்பொருளில் சுகததாச விளையாட்டரங்கில் ஒன்றுகூடவுள்ளோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் அந்தக் கட்சியின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது தொழிற்சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த மூன்று ஆண்டுகளாக அனைத்துத் துறை சார்ந்த தொழிலாளர்களும் வீதிகளில் இறங்கித் தமது தேவைகளுக்காகப் போராடி வருகின்றனர். கூட்டு அரசில் எமது தேவைகள் எவையும் முழுமை செய்யப்படவில்லை. மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்த போது எமது பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வளிக்கப்பட்டதுஎனக்கூறமுடியாவிடினும், அவர் எமது தேவைகள் தொடர்பில் எம்முடன் கலந்துரையாடினார். தற்போது மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றோம் - என்றார்கள். (5)

# மைத்திரியின் உரையை யாரும் எதிர்பார்க்கவில்லை

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

நாடாளுமன்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி கூடும் பொழுது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சிம்மாசன பிரசங்கத்தினை நாட்டு மக்களும் , பன்னாட்டுச் சமூகமும் எதிர்பார்க்கவில்லை.

தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு இந்த உரை எவ்விதத்திலும் தீர்வாக அமையாது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தினை நிரூபித்து அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து அரச தலைவர் மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க காலவகாசத்தினை ஏற்படுத்த முயற்சித்தால் பெரியளவில்அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம் தோற்றம் பெறும்.

தங்களுக்கு பெரும்பான்மை பலம் காணப்படுகின்றது என்று குறிப்பிடுபவர்களே நாடாளுமன்றத்திற்கு வர அஞ்சுகின்றனர்.

மகிந்த தரப்பினரால் ஒரு போதும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தினை வெளிப்படுத்த முடியாது. 19 நாள்களாக நாடாளுமன்றத்தினை ஒத்திவைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் சம்பவங்கள். கடந்த நாள்களில் பகிரங்கமாக இடம் பெற்றன.

இடைப்பட்ட காலத்தில் ஆட்சேர்ப்பு போதாமையின் காரணமாகவே மேலும் காலதாமதத்தினை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

அரச தலைவரின் செயற்பாடு அரசமைப்பிற்கு முரணானது என்று அரச தரப்பினர் அறியா விடினும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

நாடாளுமன்றத்தினைக் கூட்டி அரசமைப்பினை செயற்படுத்துங்கள் என்றே அனைவரும் குறிப்பிடுகின்றனர்.

ஒருவேளை எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அரச தலைவரின் சூழ்ச்சிகள் இடம் பெற்று நியாயம் நிலைநாட்டப்படவில்லை எனின் நாடாளுமன்றத்திற்கு வெளியில் பெரியளவிலான மக்கள் போராட்டம் தோற்றம் பெறும் -என்றார். (ஐ)



# பின்வாசலால் பதவியேற்ற மகிந்தவை ஒருபோதும் ஏற்கோம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு.நவ. 10

தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனநாயகத்தை மதித்து செயற்படுவதால் மகிந்த ராஜபக்சவிற்கு பின் வாசல் வழியாக வழங்கிய தலைமை அமைச்சர் பதவியை எதிர்ப்பதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக மலையக மக்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் ஹட்டனில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

அண்மையில் அரசதலைவர், முற்போக்கு கூட்டணி உறுப்பினர்கள் ஆறு பேரையும் அழைத்து நாடாளுன்றத்தில் எமக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் அல்லது நடுநிலை வகிக்க வேண்டும். அல்லது ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சியமைக்கும் பட்சத்தில் ரணில் விக்கரம சிங்கவுக்கு தலைமை அமைச்சுப் பதவியை வழங்க ஒத்துழைப்பு வழங்க கூடாதென மூன்று விடயங்களை கோரிக்கையாக முன்வைத்தார். எனினும் அந்தக் கோரிக்கைகளை நிராகரித்தோம்- என்றார். (ஐ)

# சூழ்ச்சிகள், சதிகளை முறியடிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு.நவ.10

சூழ்ச்சிகளையும், சதிகளையும் முறியடிப்பதற்குறிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அந்த கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"அவமரியாதைகளுக்கு மக்கள் விடுதலை முன்னணியினருக்கு அச்சமில்லை. சூழ்ச்சிகளைத் தோற்கடிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எமது கட்சி முன்னெடுக்கும்.

நாட்டின் ஜனநாயகம் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில். மூன்று வேளை உணவு குறித்து சிலர் பேசுகின்றனர்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அண்மையில் ஜனநாயகத்தை விட நாட்டு மக்களுக்கு மூன்று வேளை சாப்பாடுதான் முக்கியம் என தெரிவித்திருந்தார். (ஐ)



# அரச தலைவருக்கு எதிரான கண்டனத் தீர்மானங்களுக்கு ஆதரவளிக்கமாட்டோம்

## கூறுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு. நவ. 10

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக கொண்டுவரப்படும் கண்டனத்தீர்மானங்களுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவளிக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் தனது உத்தியோகபூர்வ கீச்சகத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் நெருக்கடி நிலைமையை மேலும் அதிகரிக்க நாங்கள் விரும்பவில்லை" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பாலித்த தெவரபெருமவிற்கு எதிராக பொலிஸில் நிலையத்தில் முறைப்பாடு

கொழும்பு.நவ.10

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தெவரபெருமவிற்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அகலவத்த பிரதேச சபையின் உறுப்பினர் விந்திக கருணாசேனவினால் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாலித்த தெவரபெருமவும் அவருடைய ஆதரவாளர்களும் தம்மீது தாக்குதல் மேற்கொண்டார்கள் என்று தெரிவித்தே அவர் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தநிலையில் தாக்குதலுக்கு உள்ளானதாக கூறப்படும் அகலவத்த பிரதேச சபையின் உறுப்பினர் விந்திக கருணாசேன, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# சிந்தனைக்குரிய கருவியாக முகநூலை பயன்படுத்துங்கள்

## சரவணபவன் எம்.பி மாணவருக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், நவ.10

கல்வியில் உயர்ந்தவர்களும் -பெரும் பதவிகளில் உள்ளவர்களும் முகநூலை சிந்தனைக்குரிய கருவியாகவும், அறிவார்ந்த விடயங்களுக்கு மட்டுமே. பயன்படுத்துவதனை எனது ஆய்வின் மூலம் கண்டுகொள்ளப்பட்ட உண்மையாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

சுழிபுரம் ஐக்கிய நாணய சங்க சைவ வித்தியாசாலை பரிசளிப்பு விழா நேற்று பாடசாலை முதல்வர் திருமதி மலர்விழி குணபாலன் தலைமையில் இடம்பெற்றது. பரிசளிப்பு விழாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ், முன்னாள் கிராம அதிகாரி ம.ஸ்ரீமுருகவேள் பிரதேச சபை உறுப்பினர்களான உமாபதி, ஜெயந்தன் மற்றும் பழைய மாணவர் சங்கத் தலைவர் நிறைஞ்சன் கல்வி அதிகாரி சூ.நோ.உதயகுமார், ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உரையாற்றும்போது:




இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் எதிர்வரும் 14ஆம் திகதியை உன்னிப்பாக அவதானித்த வண்ணம் உள்ளனர். 14ஆம் திகதி தீர்மானமே புதிய கொள்கையிலா அல்லது பழைய கொள்கையிலா செல்வது என்பது குறித்து முடிவு தெரியும். அதுவரையில் மக்களும் அரசியல்வாதிகளும் பொறுமையாக உள்ளனர். இன்று வடக்கில் கல்வி பின்னடைந்து செல்கின்றது இதற்குப் பல விதகாரணங்கள் கூறப்பட்டாலும் மாணவர்கள் தொலைக்காட்சியில் கூடுதலான நேரத்தை மிக அதிகமாகச் செலவிடுகின்றனர். அதனைவிட முழுமையாகப் பயன்படுத்துகின்றனர். கல்வியில் உயர்ந்தவர்களும், பெரும் பதவிகளில் உள்ளவர்களும், அறிவார்ந்தவர்களும் முகநூலைப் பயன்படுத்தினாலும் சிந்தனையை உருவாக்கக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கே அதனைப் பயன்படுத்துவர். தராதரம் குறைந்தவர்கள் அதனைமட்டமாகப் பயன்படுத்துவதனை அவதானிக்கலாம். இனி வரும் காலம் எலக்ரோனிக் யுகம் அதிகரித்த காலம். எனவே பிள்ளைகள் உங்கள் கல்வியை அதை நோக்கியே கொண்டு செல்ல வேண்டும். மருத்துவர், பொறியியலாளர், சட்டத்தரணிகள் மற்றும் பெரும் அரச பதவிகளில் உள்ளோர் முகநூலை சிந்தனைக்குரிய விடயமாக பயன்படுத்துகின்றனர். நான் இப்பாடசாலைக்கு அடுத்த வருடம் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கி வழங்குகின்றேன் அதேபோல உட்கட்டுமான அபிவிருத்திக்கும் உதவுவேன் - என்றார். (21.50)

விசேட பொதுக்கூட்டம்
வீமன்காமம் வடக்கு அருள்மிகு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்

காலம் :- 18.11.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி

இடம் :- வீமன்காமம் வடக்கு காந்திசேவா சனசமூகநிலைய மண்டபம் (வெண்காயச் சங்கத்தின் முன்பாக)

மேற்படி ஆலயத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் தலைவர் டாக்டர் வை.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதால் குறித்த நேரத்துக்கு சகல அடியார்களையும் நலன்விரும்பிகளையும். ஊர்மக்களையும். அங்கத்தவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளவும்.

Dr.V.யோகேஸ்வரன் தலைவர்

கு.இரவீந்திரநாதன் செயலாளர்

# மகிந்த- மைத்திரி தரப்புகளிடையே அரசியல் நகர்வில் உரசல் ஆரம்பம்





கொழும்பு,நவ.10

ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக ஒன்றிணைந்த மகிந்த தரப்பும், மைத்திரி தரப்பும், அடுத்த கட்ட அரசியல் நகர்வு விடயத்தில் முட்டிக் கொள்ளத் தொடங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவது தொடர்பில் கடந்த புதன்கிழமை, தீவிரமாக ஆராயப்பட்ட நிலையில், திடீர்த் தேர்தல் நடத்தப்பட்டால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுவதா?, பொதுமக்கள் முன்னணியில் போட்டியிடுவதா? என்ற குழப்ப நிலை தீவிரமடைந்துள்ளது.

தமது கட்சி தாமரை மொட்டு சின்னத்தில் மட்டுமே போட்டியிடும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் செயலர், சாகர காரியவசம், வெளியிட்ட கருத்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்குக் கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, முன்னைய அரசுக்கு ஆதரவு அளித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில், மகிந்த அமரவீரவிடமும், துமிந்த திசநாயக்கவிடமும் முறையிட்டுள்ளனர்.

புதிய அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் என்ன உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என்று அறிந்து கொள்ள விரும்புவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள், பொதுமக்கள் முன்னணியின் கீழ் போட்டியிட வேண்டியிருக்கும். அவர்களுக்கு போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டாலும், திட்டமிட்டு அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர, மகிந்த ராஜபக்சவின் முன்பாக மண்டியிட்டு வணங்கும் படம் ஒன்றைப் பசில் ராஜபக்சவின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றப் பகுதியில் கடந்த 5ஆம் திகதி நடத்தப்பட்ட பேரணியின் போது, தமது தரப்பினர் ஓரம் கட்டப்பட்டமை குறித்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் கவலையடைந்துள்ளனர்.

மகிந்த அமரவீர மாத்திரமன்றி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் பேராசிரியர் றோகண லக்ஸ்மன் பியதாச, கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசநாயக்க மற்றும் அரச தலைவரின் ஆதரவாளர்கள் எவரும், இந்தப் பேரணியில் உரையாற்ற அனுமதிக்கப்படவில்லை.

இருந்த போதிலும், பவித்ரா வன்னியாராச்சி, விமல் வீரவன்ச, றோகித அபேகுணவர்த்தன, உதய கம்மன்பில ஆகியோர் உரையாற்றியிருந்தனர். பேரணி இடம்பெற்ற போது, கோட்டைப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த சுவரொட்டிகள், பதாதைகள் அனைத்திலுமே, மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் படங்களே இருந்தன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரான மகிந்த அமரவீர, அந்தப் பேரணியில் பேசத் தயாரான போது, பொதுஜன முன்னணியின் தலைவர் ஒருவர், அவருக்கு வாய்ப்பு வழங்க மறுத்துள்ளார். இது தமது கட்சியின் பேரணி என்று அவர் கூறியிருக்கின்றார். (ஐ)

## அரச ஊழியர்களின் சம்பள உயர்வு பறிபோனது?

கொழும்பு, நவ. 10


பாதீட்டில் அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

புதிய அரசினால் அந்த அறிக்கைகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக தொழில் சங்கத்தின் முதன்மைச் செயலர் அஜித் திலக்கரத்ன தெரிவித்துள்ளார்.

பதவி கவிழ்க்கப்பட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்படவிருந்த பாதீட்டில் அரச-ஊழியர்களுக்கு பல சலுகைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அரச ஊழியர்களின், சம்பள முரண்பாடுகளை அகற்றுவதற்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன புதிய ஆணைக்குழு நியமித்து . அதன் அறிக்கை கடந்த மாதம் 28 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அது தாமதமாகியதனால் அரச ஊழியர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது இந்தப் பாதீட்டு அறிக்கை இல்லாமைச் செய்யப்பட்டமையினால் இடைக்கால வரவு - செலவு திட்டம் நிதியமைச்சர் மகிந்த ராஜபக்சவினால் எதிர்வரும் 16ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஐ)




## ஜனநாயகத்தை விட சாப்பாடுதான் முக்கியம் என்று சமூக உணர்வற்ற முட்டாளால் மட்டுமே கூறமுடியும்

### முரளியின் கருத்துக்குப் பதிலடிகொடுத்த மனோ

கொழும்பு,நவ.10

மூன்று வேளை சாப்பாடு என்பது ஜனநாயக்த்தை விட பெரிது என்று ஒரு சமூக உணர்வற்ற முட்டாளால் மட்டுமே இவ்வாறு கூறமுடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பிபிசிக்கு வழங்கிய செவ்வியில் ஜனநாயகத்தை விட நாட்டு மக்களுக்கு மூன்று வேளை சாப்பாடுதான் முக்கியம் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த கருத்து பல ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியாகி பல விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பில் விமர்சிக்கும் வகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது கீச்சகத்தில் மேற்படி பதிவை இட்டுள்ளார்.

## இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா, பிரிட்டன் தலையீடு

### அமைச்சர் வாசுதேவ சீற்றம்

கொழும்பு,நவ.10

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவும் பிரிட்டனும், தலையிடுவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகளை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் சந்தித்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தமது நாட்டுத் தேர்தல் மற்றும் அரசியல் முறைகளில் வேறு நாடுகள் தலையிடுவதாக அண்மையில் அமெரிக்காவும் பிரிட்டனும் கவலை வெளியிட்டன.

இத்தகைய நிலையில் அமெரிக்க, பிரிட்டன் தூதுவர்கள் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்கின்றனர்.

2015 ஆம் ஆண்டில் ஆட்சி கவிழ்க்கப்பட்டதில் மேற்கு நாடுகள் சில தொடர்புபட்டிருந்தன என்பது வெளிப்படையான இரகசியமாகி விட்டது - என்றார்.

# அரசியல் சபையை உருவாக்க முடிவு

கொழும்பு,நவ.10

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மையச் செயற்குழுவைக் காட்டிலும் சிறந்த செயற்பாடுடைய அரசியல் சபையை உருவாக்க தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயற்குழு கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் நகர்வுகள் மற்றும் கட்சியின் யாப்புத் திருத்தங்கள் ஆகியவை தொடர்பிலும் ஆராயப்பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்துக்காகத் தேர்தலை நடத்துதல், நாடாளுமன்றத்தைக் கலைத்தல் அல்லது மக்கள் கருத்து கணிப்புக்கு விடுதல் உள்ளிட்ட எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படாது என அரச தலைவர் கூறியுள்ளதாகச் சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலர் பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார். (ஐ)

# சீனா, இந்தியாவுடனான உறவுகள் தொடர்பில் தவறாக வழிநடத்தல்

## கூறுகின்றார் நாமல்

கொழும்பு,நவ.10
சீனா, இந்தியாவுடனான இலங்கையின் உறவுகள் தொடர்பில் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
'இந்தியா ருடே'க்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் பல உட்கட்டமைப்புத் திட்டங்களுக்குச் சீனா உதவியுள்ளது. இந்தத் திட்டங்கள் முற்றிலும் வணிக் நோக்கம் கொண்டவை.
அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் மத்தள வானூர்தி நிலையத் திட்டங்கள் முதலில் இந்தியாவிடம் தான் கொடுக்கப்பட்டன. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.
அரசியல்வாதிகள் என்ற வகையில், எமது மக்களின் நலனை நாங்கள் கவனிக்கவேண்டும். நாங்கள் சீனாவுக்குச் சென்றோம். அவர்கள் முன்வந்தனர். உடனடியாகத் திட்டங்களை அறிவித்தனர். ஆனால் இவை எல்லாமே வணிக நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. எனது தந்தை (மகிந்த ) அரச தலைவராக இருந்தபோது, சீனாவுடன் மாத்திரமன்றி, பல நாடுகளுடன் பலமான இருதரப்பு உறவுகளை ஏற்படுத்தியிருந்தார்.
ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியா, சீனாவும் கூட இலங்கையில் அதிக முதலீடுகளைச் செய்தன.
சீனா, இந்தியாவுடனான இலங்கையின் உறவுகள் தொடர்பில் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர்.
புதிய அரசு, இந்தியாவுடன் வலுவான நெகிழ்வான உறவுகளைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தும் "என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பெரும்பான்மை இருப்பதாகக் கூறினால் போதாது அதனை நிரூபிக்கவேண்டும்

## கூறுகின்றார் முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ்

கொழும்பு,நவ.10
பெரும்பான்மை தம்மிடம் இருப்பதாகக் கூறும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தைக் கூட்டி அந்தப் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் சவால் விடுத்துள்ளார்.



தற்போது இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"வெளியுலகத்துக்கும், ஊடகங்களுக்கும் தங்களிடம் பெரும்பான்மை இருப்பதாக அரச தலைவர் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்.
அந்தப்பெரும்பான்மை உண்மையென்றால் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அரச தலைவர் ஏன் தயங்க வேண்டும்?" என அகிலவிராஜ் காரியவசம் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த 5 ஆம் திகதி மகிந்தவுக்கு ஆதரவாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் கொழும்பில் பேரணி நடத்தப்பட்டது.
இதன்போது அரச தலை வர் மைத்திரிபால சிறிசேன தமக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.
இதேவேளை, அரச தலைவரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் கொழும்பில் வாகனப் பேரணியொன்றை நடத்தியது. (ஐ)

# கொலை செய்யப்பட்டவர்களின் மூடுந்து 72 துண்டுகளாக வெட்டப்பட்டது

## சாட்சிகளை மறைக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டதாக சி.ஐ.டி தெரிவிப்பு

கொழும்பு,நவ:10
கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாக நம்பப்படும் இருவர் பயணித்த மூடுந்தை 72 துண்டுகளாக வெட்டியமையானது சாட்சிகளை மறைக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை என்று சி.ஐ.டி. அறிவித்துள்ளது.
கொட்டாஞ்சேனையில் இருந்து வெல்லம்பிட்டியவுக்குச் செல்லும்போது வடிவேல் பக்கிளிசாமி லோகநாதன், இரத்னசாமி பரமானந்தன்ஆகிய இருவரும் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்த விவகாரம் தொடர்பிலான வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் காஞ்சனா நெரஞ்சனா டி சில்வா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.
இதன்போது சி.ஐ.டி.யினரால் மன்றில் தெரிவிக்கப்பட்டதாவது:
மூடுந்து துண்டு துண்டாக வெட்டப்படும் போது அங்கு இந்த வழக்கின் முதல் சந்தேக நபரான தற்போது பிணையில் உள்ள கொமாண்டர் தர அதிகாரியான அனில் மாபா மற்றும் விளக்கமறியலில் உள்ள இரண்டாம் சந்தேக நபரான லெப்டினன் கொமாண்டர் சம்பத் தயாநந்த ஆகியோர் உடனிருந்தனர்.
சந்தேக நபர்கள், காணாமல் ஆக்கப்பட்டுள்ள இருவரினதும் உடமைகளைப் பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் ஏற்கனவே விசாரணையாளர்கள் கண்டறிந்த நிலையில், மூடுந்தைத் துண்டுகளாக வெட்டியதற்கான காரணமாகச் சந்தேக நபர்களால் அதில் குண்டு இருப்பதாகத் தகவல் கிடைத்தமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.
அது பொய்யான காரணம் என்பதை வெளிப்படுத்த போதிய சான்றுகளை சி.ஐ.டி.யினர் மன்றில் சமர்ப்பித்தனர்.
மூடுந்து வெட்டப்பட்ட முறைமை, அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள உபகரணம் மற்றும் தொழில் நுட்பம் உள்ளிட்டவை தொடர்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதன்படி கிரைன்டர் மற்றும் நெருப்புடன் கூடிய வெட்டும் இயந்திரம் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது.
குண்டு இல்லை என்பதை தெரிந்தே அவ்வாறு வெட்டி இருக்க வேண்டும் எனவும் அவ்வாறு குண்டு இருந்தால் இவ்வாறான உபகரணங்களால் வெட்டும்போது ஏற்படும் இரசாயனத் தாக்கங்களால் அது வெடித்திருக்கும் என்றும் சி.ஐ.டி. மன்றின் அவதானத்துக்கு கொண்டு வந்தது.
மூடுந்தில் குண்டு இல்லை என்பது நன்கு தெரிந்தே, சாட்சியங்களை மறைக்கும் நோக்கில் இந்த மூடுந்து 72 துண்டுகளாக வெட்டப்பட்டிருக்க வேண்டும் என சி.ஐ.டி. சந்தேகம் வெளியிட்டுள்ளது. அத்துடன் சி.ஐ.டி. மன்றில் முன்வைத்த சிறப்புக் கோரிக்கைக்கு அமைய சந்தேகநபர்களைச் சிறையில் வைத்து நேற்று தொடக்கம் 20ஆம் திகதிக்கு இடைப்பட்ட நாள்களில் விசாரணைகளை முன்னெடுக்கவும் நீதிவான் அனுமதித்தார். (ஐ)



# ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த 12 எம்.பிக்களும் மக்காவுக்குப் பயணம்

## அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

கொழும்பு,நவ.10
ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு அளித்து வந்த, இரு கட்சிகளின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றமை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களே ஹஜ் யாத்திரைக்குப்புறப்பட்டுச் சென்றுள்ளனர்.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை அரச தலைவர் செயலகத்தில், கடந்த புதன்கிழமை மாலை 6 மணியளவில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பில் இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.
இந்தக் கலந்துரையாடலை முடித்துக்கொண்டு, ஹக்கீம் தலைமையிலான, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அன்றையதினம் இரவு 10 மணியளவில் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றனர். அதேவேளை, அகில இலங்கை மக்கள் காங்கிரசின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதன் தலைவர் ரிசாத் பதியுதீன் தலைமையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.
ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு அளித்து வந்த, இந்த இரண்டு கட்சிகளினதும், 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்காவுக்குச் சென்றமை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
எதிர்வரும் 13ஆம் திகதி இவர்கள் ஹஜ் யாத்திரையைமுடித்துக்கொண்டு நாடு திரும்புவர் என்று கூறப்படுகிறது. அதற்கு மறுநாள், 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில், மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# மகேந்திரனை விரைவில் கைது செய்து நாட்டுக்கு அழைத்து வருவோம்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,நவ.10
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை விரைவில் கைது செய்து நாட்டுக்கு அழைத்து வரவுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப்பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேக நபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ள அர்ஜூன் மகேந்திரன் எதிர்வரும் சில நாள்களில் கைது செய்யப்படவுள்ளதாகப் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அர்ஜூன் மகேந்திரனைக் கைது செய்யும் பொறுப்பைப் பன்னாட்டுப் பொலிஸார் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. வெளிநாடுகளுக்குத் தப்பிச்செல்ல முடியாதவகையில் வானூர்தி நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அர்ஜூன் மகேந்திரன் எங்கிருந்தாலும் கைது செய்யப்படுவார் எனப் பன்னாட்டுப் பொலிஸார், இலங்கை பொலிஸாருக்கு உறுதியளித்துள்ளனர் எனவும் அந்த ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# அரசியல் நெருக்கடி தொடர்பில் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் கவலை

கொழும்பு,நவ.10
இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிநிலைமை தொடர்பில் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் ப்ரைஸ் ஹட்ச்சன் கவலை வெளியிட்டுள்ளார்.
அத்துடன் எதிர்வரும் 14 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வின்போது நம்பிக்கை வாக்கெடுப்புக்கான சந்தர்ப்பம் நிராகரிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டதை அடுத்து இலங்கை அரசியலில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையில் பெரும்பான்மையை நிரூபிக்க விரைவில் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பல்வேறு கட்சிகளும் கோரிக்கை விடுத்த போதும். அரசு 14 ஆம் திகதியே நாடாளுமன்றத்தைக் கூட்ட நடவடிக்கை எடுத்தது. இவ்வாறே நம்பிக்கை வாக்கெடுப்புக்கான சந்தர்ப்பமும் நிராகரிக்கப்படும் என்றார். (ஐ)

## பருவமழைக் காலத்தில்

# ஒரு லட்சம் பனம் விதைகளை நெடுந்தீவில் நடுவதற்குத் திட்டம்



யாழ்ப்பாணம், நவ. 10

நெடுந்தீவுப் பிரதேசத்தில் இந்தப் பருவமழைக் காலத்தின் போது கூடுதலானபனம்விதைகளைநடுகைசெய்வதற்குத்திட்டமிடப் பட்டுள்ளது. குறைந்தது ஒரு லட்சம் வரையிலான பனம் விதை களாவதுநடப்படும்என்றுநெடுந்தீவுப்பிரதேசசெயலர்என்.சி.சத்தியசோதி தெரிவித்தார்.

இந்தவிடயம்தொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது: பனம் விதைகளை நடுகை செய்வதற்கு என்று அதற்குரிய இடங்கள் தீர்மானிக்கப் பட்டுள்ளன. பனம் விதைகளை நடுகை செய்யும் வளாகங்களைப் பனம் தோட்டமாகப் பராமரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தத்திட்டத்துக்காகப்பொது மக்களிடம் இருந்தும் கூடுதலான பனம் விதைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. நெடுந்தீவில் கூடுதலான பனைகள் அழிந்த நிலையில் உள்ளன. அவற்றைஈடுசெய்யும் முகமாகவே இம்முறை அதிகளவான பனம் விதைகளைநடுகைசெய்கின்றோம் - என்றார். (ம-17)

## தென்னந் தோப்புகளில் மணல் திருட்டு

தென்மராட்சி, நவ. 10

தென்மராட்சி தெற்கில் அழிவடைந்த தென்னந் தோட்டங்களின் மீள் நடுகைத் திட்டத்துக்காகத் துப்புரவு செய்யப்பட்ட காணிகளில் இரவு வேளைகளில் சட்டவிரோதமாகமணல்அகழப்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

அழிவடைந்த தென்னந் தோட்டங்களில்தென்னைமரங்களை மீள்நடுகைசெய்வதற்காகயாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் நிதி வழங்கப்பட்டு பற்றைக் காடுகளாக காணப்பட்ட தென்னந் தோட்டங்கள் வாகனங்கள் மூலம்துப்பரவுசெய்யப்பட்டுவருகின்றன. அவ்வாறுதுப்பரவுசெய்யப்பட்ட காணிகளில் இருந்தே வகைதொகையின்றி மணல் அகழ்ந்துசெல்லப்படுகிறதுஎன்று தெரிவிக்கப்பட்டது. (ம-9,159)

## கொழும்பு விவசாய அமைச்சின் ஏற்பாட்டில்

# 10 லட்சம் பலாக் கன்றுகள் நாடளாவியரீதியில் நடுகை



யாழ்ப்பாணம், நவ. 10

கொழும்பு விவசாய அமைச்சு, நாடளாவிய ரீதியில் 10 லட்சம் பலாக் கன்றுகளை நடுகை செய்யும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

'நாம் பயிரிட்டு நாமே உண்போம்' என்ற தொனிப்பொருளில் இந்தத் திட்டம் தற்போது முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக நெடுங்கேணி மருதோடை பிள்ளையார் கோவில் ஆலயத்தில் நேற்று முன்தினம் சில பலாக் கன்றுகள் நடுகை செய்யப் பட்டன.

இந்த நிகழ்வில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், மருதோடை அ.த.க. பாடசாலை அதிபர் சே. சுதாகரன், விவசாய உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-160,422)



## தண்டம்

சாவகச்சேரி, நவ. 10

பொதுமக்களுக்குத் தீங்கு இழைக்கக்கூடிய உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்தமைக்காகவும், சுகாதாரத்தைக் கடைப்பிடிக்காமல் உணவு உற்பத்தியில் ஈடுபட்டமைக்காகவும் சாவகச்சேரி நீதிமன்றம் கடந்தபுதன்கிழமைசிலருக்குத் தண்டம் விதித்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட உணவு, மருந்துகள் பரிசோதகர், கைதடிப் பிரிவில் நடத்திய திடீர்ப்பரிசோதனையின்போது, பொருத்தமான உற்பத்தி - காலாவதித்திகதிகள்குறிப்பிடப்படாமல் இருந்த நல்லெண்ணைப் போத்தல்களைக் கைப்பற்றி அவற்றின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கைவிசாரித்தநீதிமன்றம் உற்பத்தியாளருக்கு 4 ஆயிரம் ரூபாதண்டம் விதித்தது.

மந்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்பிரிவிலுள்ளமிக்சர் உற்பத்தி நிலைய உரிமையாளர்மற்றும்பணியாளர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும்அன்றையதினம் விசாரணைக்கஎடுத்துக்கொள்ளப்பட்டன. சுகாதாரசீர்கேடான முறையில் கழிவு நீர்த் தொட்டியினை திறந்து வைத்திருந்தமை, மேலங்கி அணியாமல் உற்பத்தியில் ஈடுபட்டமை மற்றும்சுகாதாரமருத்துவஅதிகாரியினால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழின்றி உணவுகளைத் தயாரித்தமை ஆகிய குற்றச் சாட்டுக்கள் தொடர்பிலான வழக்குகளை விசாரித்த நீதிமன்றுஉரிமையாளருக்கும் பணியாளர்களுக்கும் தலா 8 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ம-9,159)

## கோயிலில் திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, நவ. 10

கைதடி ஞானவைரவர் ஆலயத்தின் கதவை உடைத்து அங்கிருந்த ஒலிபெருக்கிச் சாதனங்களையும், உண்டியலை உடைத்துஅதிலிருந்தபணத்தையும் திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம்நேற்றுமுன்தினம்உத்தரவிட்டது.

கடந்தமாதம்14ஆம்திகதி இந்தத் திருட்டுஇடம்பெற்றதுஎன்றுஆலயத்தின்நிர்வாகத்தினர்பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுசெய்திருந்தனர். விசாரணைகளில் நாவற்குளி புதிய வீட்டுத் திட்டத்தைச்சேர்ந்தநபரொருவர்கைது செய்யப்பட்டு மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் எதிர்வரும் 21ஆம்திகதிவரைசந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)




ஜேர்மனியின் ஸ்ருட்காட் நகரில் இயங்கும் 'உறவுகளுக்குக் கரம் கொடுப்போம்' அமைப்பின் ஊடாக கல்விக்குக் கரம் கொடுக்கும் நோக்கில், லண்டனில் வசிக்கும் ரகுபதி சாம்பவியின் முதலாவது பிறந்த நாளை முன்னிட்டு அவரின் பெற்றோரால் மூங்கிலாறு தெற்கு உடையார்கட்டைச்சேர்ந்த லெனின் கயல்விழி என்ற மாணவிக்கு அண்மையில் துவிச்சக்கர வண்டியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. - (ம-9,159)

## விபத்து!

சாவகச்சேரி, நவ. 10

மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியின் ஏ-9 முதன்மைச் சாலையில் வேகமாகச் சென்ற உந்துருளியின் ரயர் வெடித்ததில்அதில்பயணித்தஇருபெண்கள் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். கடந்தபுதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது. பளை -பேராலையைச்சேர்ந்த 22வயது, 23வயதுடைய இளம் பெண்களே விபத்தில் காயமடைந்தவர்கள். அவர்கள் இருவரும் சிகிச்சைக் காக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-9)

# வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்குக் கோழிகள்

### கஜதீபன் வழங்கி வைத்தார்

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்பா. கஜதீபன். இந்தவருடத்துக்கான தனது குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து வறுமைக் கோட்டுக்குட்பட்ட 12 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிகளைவழங்கினார். கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரியின் பணிமனையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை கோழிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபை உறுப்பினர் சி. அகீபன், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊரெழுபகுதிச்செயற்பாட்டாளர்முகுந்தன் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம)



# ஆசை வார்த்தைகள் கூறி பெருந்தொகைப் பணம் மோசடி!

## சூத்திரதாரிகளைக் கைது செய்யுமாறு மன்று உத்தரவு

**யாழ்ப்பாணம், நவ. 10**

**பெறுமதியான பரிசில் கிடைத்துள்ளது. அதனை உரிய முகவரியில் சேர்ப்பிப்பதற்கு வங்கியில் உடனடியாக பணம் வைப்பிலிடுமாறு கோரி மோசடியில் ஈடுபட்டோரைக் கைது செய்யுமாறு யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.**

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவருக்கு, "பெறுமதியான பரிசில் உங்களுக்குக் கிடைத்துள்ளது'' என்று அலைபேசியில் குறுந்தகவலொன்று வந்துள்ளது. அவரும் அதை நம்பி பதில் தகவல் அனுப்பியுள்ளார். இதையடுத்து அவருக்கு அழைப்பொன்று வந்துள்ளது. அதில் "பெறுமதியான பரிசில் உங்களுக்குக் கிடைத்துள்ளது. அதனை உரிய முகவரியில் சேர்ப்பிப்பதற்கு, 93 ஆயிரத்து 800 ரூபா பணத்தை வங்கியில் உடனடியாக பணம் வைப்பிலிட வேண்டும்" என்று தெரிவித்து தனியார் வங்கிக் கணக்கொன்று கொடுக்கப்பட்டுள்ளது. குடும்பத் தலைவரும் பணத்தை வைப்பிலிட்டுள்ளார். பின்னர் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாடு தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் அறிக்கையைத் தாக்கல் செய்தனர்.

அதனை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், வங்கியின் கணக்கு அறிக்கையைப் பெற்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து மோசடியின் பின்னணியில் உள்ளோரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டார். (ம-37)

## பரிசளிப்புக்களும் ஒளிவிழாக்களும்

### சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. விழாவில் விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி தாகுணி கிருசாந்தன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்



கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அதிபர் சி.கணராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமாரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு.கேதீஸ்வரனும் மதிப்புறு விருந்தினராக சுன்னாகம் சிங்கன் நிறுவன உரிமையாளர் பூ.கோபிநாதனும் கலந்து கொண்டனர்.

### சாவகச்சேரி மகளிர் கல்லூரி



சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஒளிவிழா பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பங்குத் தந்தை அருட்பணி றெக்சவுந்தரா அடிகள் கலந்து கொண்டார். அருட்பணி ஜெபநேசன் அடிகளாரும் நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரையை வழங்கினார். (ம-9,159)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 10

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் குடமுழுக்கு மலர் வெளியீட்டு விழா ஆலய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் த.நடராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆலய தலைமைக் குரு பிரம்மஸ்ரீ இராசேந்திர சுவாமிநாதக் குருக்கள் ஆசியுரை வழங்கவுள்ளனர். வாழ்த்துரைகளை கலாநிதி ஆறு.திருமுருகன், வித்தியாபூசணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) ஆகியோர் ஆற்றவுள்ளார். நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபரும் விரிவுரையாளருமான ச.லலீசனும் நூல் நயப்புரையை இந்துசாதனம் ஆசிரியர் பிரம்மஸ்ரீ தியாக மயூரகிரிக் குருக்களும் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை ஆலய தலைமைக்குரு வெளியிட்டு வைக்க கலாநிதி ஆறு.திருமுருகன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ம)

## மரநடுகையும் மலர்க் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், நவ. 10

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மரநடுகையும், மலர்க் கண்காட்சியும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக தமிழகம் - விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## நாடகப் போட்டி

சாவகச்சேரி, நவ. 10

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு இடையிலான வலய நிலை சிறுவர் அரங்க நாடகப் போட்டிகள் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ம-9,159)

## மின்தடை

யாழ்ப்பாணம், நவ.10

மின்விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு, மறுகட்டமைப்பு வேலைகளுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று சில இடங்களில் மின் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்தது.

குருநகர், பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, பாசையூர், கொழும்புத்துறை வீதியின் ஒரு பகுதி, இலந்தைக்குளம் வீதி, புங்கக்குளம் வீதி, சந்தனமாதா கோவில் வீதி, வலன்புரம், துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன் தோட்டம், பெரியதோட்டம், உதயபுரம், குருசோ வீதி, அச்சுக்கூட வீதி, முதன்மை வீதியின் ஒருபகுதி ஆகிய இடங்களில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை மின் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை மேலும் அறிவித்தது. (ம)

## பரிசளிப்பு நிகழ்வு

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களுக்கிடையில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இரா.நடராசா தலைமையில் இம்பெறும் இந்த நிழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் து.ராமதாஸூம் சிறப்பு விருந்தினராக வயாவிளான் மகா வித்தியாலய நூலக ஆசிரியர் நி.பவனந்தசார்மாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

## கூட்டுறவுதின விழா

சாவகச்சேரி, நவ. 10

சாவகச்சேரி பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் 96ஆவது பன்னாட்டு கூட்டுறவு தின விழாவை சங்க மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு முன்னெடுக்கவுள்ளனர்.

இன்றைய விழாவில் சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள், பணியாளர்களின் மதிப்பளிப்பு, கடந்த வருடம் சிறப்பாகப் பணியாற்றிய அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கான மதிப்பளிப்பு, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு, பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன.

சங்கத் தலைவர் வ.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாகக் கூட்டுறவு ஆணைக் குழுவின் செயலர் ந.திருல, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பரின்ஷஸ்ஸானா அப்துல் சமீயு, வடபிராந்திய மதுவரி உதவி ஆணையாளர் நா.சோதிநாதன், யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வீ.கே.அருந்தவநாதன், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலர் திருமதி வே.செல்வரத்தினம், வட மாகாண பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் பொ.செல்வராசா, பனை அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9,159)



கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயத்தில் 1992ஆம் ஆண்டில் ஐந்தாம் தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் வித்தியாலயத்துக்கு என்று நிழற்பிரதியாக்கல் இயந்திரமொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. (ம)





## முல்லைத்தீவில் வயல் வேலைக்குச்சென்று

# வெள்ளத்தால் திரும்பமுடியாது தத்தளித்த 6 பேர் உலங்குவானூர்தி மூலம் நேற்று மீட்பு

## இடர் முகாமைத்துவப் பிரிவின் அதீத முயற்சியில் இடம்பெற்றது

முல்லைத்தீவு, நவ. 10
முல்லைத்தீவு நித்திய வெட்டைப் பகுதியில் வயல் வேலைக்குச் சென்று திரும்ப முடியாது தவித்த 6 பேர் உலங்கு வானூர்தி மூலமாக நேற்றுக்காலையில் மீட்கப்பட்டனர். தரை வழியாக மீட்க முடியாத நிலை ஏற்பட்டதால் அவர்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் இரவிரவாக வயலில் தவித்தனர். சிரமத்தின் மத்தியில் செயலகத்தினர் வரைபடம் தயாரித்தனர். இறுதியில் உலங்கு வானூர்தியில் 6 பேரும் மீட்கப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்றுமுன்தினம் காலையில் 18 பேர் வயல் வேலைக்குச்சென்றிருந்தனர். வயல் உரிமையாளர் ஒருவர் வயல் வேலைக்காக அவர்களை அழைத்துச் சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்குள்ள நித்தகைக் குளம் நேற்றுமுன்தினம் உடைப்பெடுத்தது என்று தெரிவிக்கப்பட்டது. அதிகரித்த மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

**தடைப்பட்டது பாதை**

வெள்ளம் பாதையை மூடியது வயல்வேலைக்குச் சென்றவர்கள் வீடு திரும்ப முடியாத நிலமை ஏற்பட்டது. அவர்கள் சிக்கிய பகுதி மக்கள் குடியிருப்புகளோ மக்கள் நடமாட்டமோ குறைந்த பகுதியென்பதனால் வேறு எவருமே அவர்களைக் காண வாய்ப்பு இருக்கவில்லை. வெள்ளத்தால் அனைத்துப் பாதைகளும் மூடப்பட்ட நிலையில் தரைத் தொடர்புகள் எவையும் இன்றித் தனித்து விடப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 அளவில் வயல் உரிமையாளர் தாம் மீளமுடியாதுள்ள நிலையை மாவட்டச் செயலகத்துக்கு தெரிவித்தார். இது தொடர்பில் ஆராய்ந்த மாவட்டச் செயலகத்தினர் உடனடியாக அந்தப் பகுதிக்குச் செல்ல முயன்றும் முடியாமல் போனது.

**வரைபடம் தயாரிப்பு**

இதனையடுத்துப் பிரதேச செயலகத்தினர், பிரதேசத்திலுள்ள மூத்தவர்கள், காடுகளில் முன்னர் பரீட்சயமானவர்கள் ஆகியோரை அழைத்து இடர் முகாமைத்துவப் பிரிவினருடன் பெரும் திட்டமிடலுக்குத் தயாராகினர்.

அவசர அவசரமாக ஒரு வரைபடம் தயாரிக்கப்பட்டு அங்கே செல்வதற்காகக் கடற்படையினரின் உதவி கோரப்பட்டது.

**12 பேர் மட்டுமே மீட்பு**

இறுதியில் அங்கு ஓர் இடத்தில் இருந்த 12பேரை மட்டும் நேற்று முன்தினம் இரவு வரையில் மீட்கமுடிந்தது. பிறிதொரு இடத்தில் சிக்கியிருந்த 6 பேரையும் மீட்க முடியவில்லை.

**உலங்கு வானூர்தி**

அவர்களை மீட்கும் நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது. காலையில் மாவட்டச் செயலாளர் விமானப் படையினரின் உதவியை நாடினார். சம்பவ இடத்துக்கு விரைந்த எம்.ஐ.17 ரக உலங்கு வானூர்தியில் சென்ற படையினர் அங்கே தனித்திருந்த 6 விவசாயிகளையும் மீட்டனர்.

கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த ரி.சிவராசா (வயது-34), அவரது மனைவி சி.இராமேஸ்வரி (வயது - 33), குமாரபுரம் தண்ணீரூற்றைச் சேர்ந்தவர்களான ந.திலீபன்(வயது- 36), கு.புவனேந்திரன்(வயது- 29), கணுக்கேணி மேற்கைச்சேர்ந்த வி.கமலகாந்தன் (வயது - 68), புதுக்குடியிருப்பு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆர்.சயிந்தன்(வயது-21) ஆகியோரே உலங்கு வானூர்தியில் நேற்று மீட்கப்பட்டனர்.

**மரத்திலிருந்த பறணில் இரவைக் கழித்தோம்!**

"நித்தகைக் குளம் வயல் வெளியில் வேலைக்காகவும் வயலைப் பார்க்கவும் சென்றவர்களே குளம் உடைப்பெடுத்ததால் குறித்த பகுதிக்குள் சிக்கியிருந்தனர்.

பெருமழை பெய்து கொண்டிருந்தது. வயல்நிலங்கள் பெருக்கெடுத்து ஓடின. ஆனால் குளம் உடைத்தது பற்றி எமக்குத் தெரியாது. எங்களில் மூவரிடம் அலைபேசி இருந்ததால் அயல் கிராமமான குமுழமுனை கிராம மக்களிடம் தொடர்பு கொண்டு எங்கள் நிலையைத் தெரியப்படுத்தினோம். பின்னர் அங்கு மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த 'பறண்' ஒன்றில் இரவிலிருந்து நேற்றுக்காலைவரை தங்கியிருந்தோம்" என்று நேற்று மீண்டவர்கள் தெரிவித்தனர். (4.105.ரி3)



## மட்டக்களப்பிலும் பெருமழை பல வீதிகளை மேவி வெள்ளம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து அடைமழை பெய்து வருவதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முதன்மை வீதிகள் பலவற்றையும் ஊடறுத்து வெள்ள நீர் பாய்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

பட்டிருப்பு - பெரியபோரதீவு முதன்மை வீதி பெரியபோரதீவு பழுகாமம் முதன்மை வீதி, வெல்லாவெளி - மண்டூர் முதன்மை வீதி, மண்முனை - கொக்கட்டிச்சோலை முதன்மை வீதி, மாடிமுன்மாரி - தாந்தாமலை முதன்மை வீதி, ஆனை கட்டியவெளி காக்காச்சுவட்டை முதன்மை வீதி, வலையிறவு வவுணதீவு முதன்மை வீதி, மட்டக்களப்பு பிள்ளையாரடி முதன்மை வீதி, போன்றவற்றை ஊடறுத்து வெள்ளநீர் பாய்கின்றது.

தாழ் நிலக் கிராமங்களான முனைத்தீவு, பட்டாபுரம், பெரிய போரதிவு, பழுகாமம், உள்ளிட்டவை நீரில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு நகரில் மாத்திரம் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை காலை 8.30 மணி வரை 75.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட நிலையப் பொறுப்பத்திகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்தார். (4)


## வடக்கில் நேற்று மழை குறைந்தது வயல்கள், தாழ்நிலங்கள் வெள்ளத்தில்

யாழ்ப்பாணம், நவ. 10
வடக்கு மாவட்டங்களில் நேற்றுஅதிகாலை வரையில் அதிக மழை வீழ்ச்சி பதிவான நிலையில் நேற்றுக் காலையிலிருந்து மழை ஓய்ந்துள்ளது. எனினும் வெள்ளம் சில வீதிகளில் பாய்ந்துகொண்டிருக்கிறது. வயல்நிலங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளன. சில இடங்களில் வயல்களிலிருந்து தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கின்றன.

முல்ல்லைத்தீவில் பல ஆறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. நீர்வரத்து அதிகரிக்குமாயின் இன்னும் பாதிப்பு ஏற்படும் என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

முல்லைத்தீவு பேராறு கிராமத்தில் ஆறுகள் பெருக்கெடுத்ததால் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. வீதிகளில் வெள்ளம் பாய்கின்றன. முத்துஐயன் கட்டுப் பகுதியில் கால்நடைகளை மேய்ப்பவர்கள் குளத்தின் தண்ணீர் மட்டம் உயர்வதால் பலரும் தத்தமது கால்நடைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தி வருகிறார்கள். வழமையான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இந்தநிலையே என்று தெரிவிக்கப்படுகிறது. (4.101.500)







# மாணவிகளுக்கு ஈருருளிகள் வழங்கல்

வவுனியா கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் இரண்டு மாணவிகளுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுவிஸில் வசிக்கும் கோண்டாவிலைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்மசீலன் தனது மகன் தர்மிஷானின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் அவற்றை வழங்கினார்.

பாடசாலை மாணவிகள் இருவரும் தூர இடங்களில் இருந்து பாடசாலைக்கு நடந்து வந்தனர். அவர்கள் மேலும் உத்வேகத்துடன் கற்பதற்கு இது உந்து தலாக இருக்கும் என்று பாடசாலையின் பிரதி அதிபர் சுகந்தன் தெரிவித்தார். (4,222)



வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவி பத்மலோஜினிக்கு ஈருருளி வழங்கப்பட்டது.

புளியங்குளம் இந்துக்கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் சித்தியடைந்ததைப் பாராட்டி, கனடாவில் வசிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவிகள் நந்தினி புஸ்பதேவி சிவதேவி சந்திரிகா ஆகியோர் வீ 3 பவுண்டேசனூடாக அதை வழங்கினார். (4,222)



பெண் தலைமை தாங்கும் இரண்டு குடும்பங்கள் வசிக்கும் வீடுகளுக்கு கிடுகு மற்றும் கூரைவிரிப்பு ஆகியன வழங்கப்பட்டன. நகரசபை உறுப்பினர் எம்.லரீப் அவற்றை வழங்கினார். (110)

### கட்டுக்கரைக் குளத்தின் கீழான

# சட்டவிரோத விவசாயச் செய்கையை உடன் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

**மன்னார், நவ. 10**

**மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் காலபோகம் செய்யும் காலங்களில் சட்டவிரோதமாக புலவுக் காணிகளில் சிலர் விவசாய மற்றும் நெற் செய்கையில் ஈடுபடுகின்றனர். இதனால் ஏனைய விவசாயிகள் வருடந்தோறும் பாதிக்கப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இனியாவது இதற்கு உரிய நடவடிக்கை எடுங்கள்.**

இவ்வாறு கட்டுக்கரைக்குளத்தின் திட்ட முகாமைத்துவக் குழுத் தலைவர் எம்.எஸ்.சில்வா கவலை தெரிவித்துள்ளார்.

காலபோக விவசாயச் செய்கை இடம் பெறும் காலங்களில் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் உள்ள ஊட்டக்குளங்களில் சட்டவிரோதமாக விவசாயம் செய்வதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக சில்வா தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் விவசாய நெற்செய்கைக்கு முதன்மைக் குளமாக விளங்கும் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் நடப்பு வருடத்துக்கான காலபோக நெற் செய்கையில் பிரதேச விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கட்டுக் கரைக்குளத்தின் கீழ் 24 ஆயிரத்து 435 ஏக்கரில் இந்த வருடம் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்த குளத்தில் தேக்கி வைக்கப்படும் தண்ணீருக்குச் சிலநேரங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும்.

இந்தக் குளத்தின் கீழ் 162 ஊட்டக்குளங்கள் (சிறு குளங்கள்) காணப்படுகின்றன. மழை காலங்களில் இத்தகைய குளங்களில் நீரைத் தேக்கி வைத்து தேவையானபோது பயன்பாட்டுக்கு விடப்படுகிறது. ஒரு சில விவசாயிகள் ஊட்டக் குளங்களில் சட்டவிரோதமாக விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதால் விவசாயத்துக்கான தண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஊட்டக்குளங்களிலிருந்து விவசாயத்துக்கான தண்ணீரைப் பெறமுடியாத நிலை இருந்துவருகிறது என்று அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் வருடாந்தம் நடைபெறும் காலபோக விவசாயம் சம்பந்தமான கூட்டத்தில் இந்தப் பிரச்சினை பற்றி, பாதிக்கப்படும் விவசாயிகள் முறையீடு செய்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. உரிய அதிகாரிகள் இனியாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. (4,60)

### வவுனியாவிலுள்ள குளங்களின்

# அணைக் கட்டுகளை பாதுகாக்க 10,000 பைகள்


வவுனியா, நவ. 10

வவுனியாவில் மாவட்டத்திலுள்ள குளங்களின் அணைக் கட்டுக்களைப் பாதுகாப்பதற்காக கமக்காரர் அமைப்புகளுக்கு 10 ஆயிரம் பைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள குளக் கட்டுகளில் மழை காரணமாகச் சிறிய துவாரங்கள் ஏற்படும் பட்சத்தில் மேலதிக அரிப்பை - அணைக் கட்டைப் பாதுகாப்பதற்காக அவை வழங்கப்பட்டுள்ளன. பத்தாயிரம் மண் மூடைகள் அமைப்பதற்கு ஏற்றதாக யூரியா உரம் பொதி செய்து விற்கப்படும் பைகள் வழங்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ. விஜயகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் இதுவரை எந்தக் குளங்களும் உடைப்பெடுக்கவில்லை.

முதலை மற்றும் குளத்தில் வாழும் உயிரினங்களால் குளக்கட்டுப்பகுதியில் ஏற்பட்டுள்ள துவாரங்களால் தண்ணீர் பெருக்கெடுப்பது உள்ளிட்ட ஏதாவது இடம்பெறும் பட்சத்தில் அவை உடனடியாகத் தடுக்கப்படும் என்று மேலும் தெரிவித்தார். (4,110)





மன்னார் தள்ளாடி இராணுவ முகாமின் 54 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில், நேற்றுக் குருதிக் கொடை இடம்பெற்றது. இலங்கை இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இது இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. 54 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ராணுவத்தினர் குருதிக்கொடை வழங்கினர். டெங்கு ஒழிப்பு, துப்புரவுப் பணிகள், மரம் நடுகை என்பன சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (4,56)



# கூத்துப் போட்டியில் முதலிடம்: மாணவர், ஆசிரியர் மதிப்பளிப்பு

முல்லைத்தீவு, நவ. 10

மாகாணமட்ட இந்த வருட மரபுவழிக் கூத்துப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்களும் அந்தக் கலையை பழக்கி நெறிப்படுத்திய ஆசிரியர்களும் பழையமாணவர் சங்கத்தால் நேற்றுமுன்தினம் மதிப்பளிக்கப்பட்டனர்.

அண்மையில் இடம்பெற்ற சிந்துநடைக்கூத்து மற்றும் முல்லைமோடி நாட்டுக்கூத்து என்பவற்றில் வித்தியானந்தக் கல்லூரி மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றிருந்தது.

தற்காலத்தில் தமிழர் மரபுவழிக் கலைகளில் மாணவர்கள் ஆர்வம் செலுத்தும் தன்மை குறைவாகக் காணப்படுவதுடன் அவை அருகிவரும் நிலை காணப்படுகிறது.

இந்தநிலையில்இதில்பங்கேற்றோர், ஐக்கியராச்சியத்திலுள்ள பழைய மாணவர் சங்கத்தின் நிதிப்பங்களிப்பில் மதிப்பளிக்கப்பட்டனர். (4,222)

# தொழில் முனைவோருக்கு விதை நிலக்கடலை வழங்கல்


முல்லைத்தீவு, நவ. 10

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் செயற்படும் பெண்கள் தொழில் முனைவோர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் 75 பேருக்கு விதை நிலக்கடலை வழங்கப்பட்டுள்ளது. இவற்றை வழங்கும் நிகழ்வு சங்கத்தில், சங்கத்தின் தலைவி சு.கலைச்செல்வி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் ஐ.எல்.ஓ. டபிள்யூ. ஏ.பி. நிறுவனத்தின் உதவியுடன் பெண்கள் வலுவூட்டல் திட்டத்தின் கீழ் 120 பேர் அரை ஏக்கர் நிலக்கடலைச் செய்கைக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக விவசாயத் திணைக்கள பிரதி பணிப்பாளர் எஸ்.உலகநாதன் மற்றும் நிறுவன பிரதி நிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தார். (4,ரி3)





கிழக்குப் பல்கலையில்

## வந்தாறுமூலை வளாகத்தின் கற்றல்செயற்பாடு நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 10

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலை வளாக கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக பதில் பதிவாளர் அ.பகிரதன் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாகக் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. சில தினங்களாகப் பெய்துவரும் அடை மழைகாரணமாக முதன்மை வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மாணவர்களின் வருகை குறைவாகக் காணப்படுகிறது.

பல்கலைக் கழக வளாகம் மற்றும் விடுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மாணவர்கள் இடையூறுகளை எதிர்கொண்டுள்ளனர் என்று மேலும்தெரிவிக்கப்பட்டது.(4)

# மடு செயலக உத்தியோகத்தர்கள் பறித்த காணி மீள ஒப்படைப்பு!

### மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

கிளிநொச்சி, நவ. 10

மன்னார் மடு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கட்டை அடம்பன் பகுதியிலுள்ள இரண்டு ஏக்கர் மேட்டுக்காணியை அரச ஊழியர்கள் பறித்த நிலையில், அதனை மீளப் பெற்று உரியவரிடம் வழங்கினர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாப் பிராந்தியத்தினர்.

முறைப்பாட்டாளரான குடும்பத் தலைவர், குறித்த மேட்டுக்காணி தனது தந்தையின் பெயரிலிருந்து வந்துள்ளது. அவர் இறந்த பின்னர் காணிகளை தனது பிள்ளைகளுக்குப் பங்கிட்டு வழங்கும் நோக்கில் மடு பிரதேச செயலகப் பிரிவுக்குச் சென்று காணி ஆவணத்தை ஆராய்ந்தார். அந்தக் காணியை மடு பிரதேச செலயகப் பிரிவில் பணியாற்றும் 4அரச ஊழியர்கள் அரை ஏக்கராகப் பிரித்து தமது பெயர்களில் காணி அனுமதிப்பத்திரங்களை மாற்றி எழுதி 2012ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டுள்ளமையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

வவுனியாமனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த வருடம் முறைப்பாடு செய்தார். இந்தநிலையில் மடு பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றிய பிரதேச செயலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. புதிய பிரதேச செயலாளரின் முயற்சியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரியின் வழிநடத்தலில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர்.எல்.வசந்தராசா சம்பவ இடத்துக்குச் சென்று கள விசாரணைகளை நடத்தினார்.

பிரதேச செலயகத்தில் பணியாற்றிய கிராம அலுவலர் உட்பட 4 பேரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் காணி மீளப்பெறப்பட்டு உரிமையாளருக்கு வழங்கப்பட்டது.

அரை ஏக்கர் காணியின் பெறுமதி 50 ஆயிரம் ரூபா என்று மதிப்பீடு செய்யப்பட்டு காணி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயத்தைப் பொலிஸ் நிலையத்தினூடாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தால் சட்டப் பிரச்சினைகளை அந்த 3 அரச உத்தியோகத்தர்களும் எதிர்கொள்ளவேண்டியிருந்திருக்கும். அரசவேலையிலிருந்து நீக்கப்பட்டிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (4.6)

## தென்னிலங்கையில் எஞ்சும் தண்ணீர் கிளிநொச்சிக்கு!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில்

யாழ்ப்பாணம், நவ. 10

தென்னிலங்கையில் எஞ்சியதண்ணீர்கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டு மூன்று போக பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான நிலமையை உருவாக்குவோம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கூட்டுறவாளர் மண்டபத்திலும் முல்லைத்தீவில் மாவட்டச் செயலகத்திலும் மறுவாழ்வு அதிகார சபையின் இழப்பீடு வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகாவலி வேலைத்திட்டம் பற்றி கடந்த காலத்தில் பேசப்பட்டது. பல்வேறு கருத்துகள் பரப்பப்பட்டன. குடியேற்றம் தொடர்பில் கூறப்பட்டது. சிலவற்றில் உண்மைகளும் இருக்கலாம். பெரும்பாலானவை அரசியல் நோக்கங்களுக்காகப் பரப்பப்பட்ட கருத்துகளாகும்.

இந்த மாத இறுதியில் வீடுகளைக் கட்டுவதற்கு எமது அமைச்சினூடாக இயலுமான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம். முறைகேடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை - என்றார்.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலாளர்கள் பயனாளிகள் கலந்கொண்டனர். முல்லைத்தீவில் போரால் பாதிக்கப்பட்ட 279 பேருக்குக் காசோலைகள் வழங்கப்பட்டன.

**வரவேற்பு**

இதேவேளை, வடக்கு அபிவிருத்தி மறுவாழ்வு மறுசீரமைப்பு மற்றும் இந்துவிவகார அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வவுனியாவில் நேற்று வரவேற்பளிக்கப்பட்டது.

வவுனியா வரவேற்பு வளைவு மண்டப முன்றலில் வரவேற்பு இடம்பெற்றது. பின்னர் வவுனியா வைரவப் புளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலில் வழிபாடு நடைபெற்றது.

அதன் பின்னர் வவுனியா பள்ளிவாசலில் தொழுகை இடம்பெற்றது.

(4.214.ரி3)

மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சம்பவம்:

## விசாரணைக்கு எடுக்காமலேயே மேன்முறையீட்டு மனு தள்ளுபடி

இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றத்துக்கு 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேர், தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுவை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே, மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது.

72 க்கும் அதிகமானோரைக் கொலை செய்தனர் என்று, குற்றஞ்சாட்டப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், விக்னேஸ்வரநாதன் பத்திரன், சிவகுமார் மற்றும் செல்வகுமார் நர்மதன் ஆகிய மூவரையும், 2002ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றவாளிகளாகக் கண்டு, 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியிருந்தது.

தமக்கு வழங்கப்பட்டுள்ள 200 ஆண்டுகள் சிறைத்தண்டனையை இரத்துச் செய்யுமாறு கோரி, இவர்கள் மூவரும், மேன்முறையீடு செய்திருந்தனர்.

அந்த மனு, மேன்முறையீடு நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜயசுந்தர மற்றும் அச்சல வேங்கபுலி ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழு முன்பாக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த மனுவை பரிசீலனைக்கு எடுக்காமலேயே, அவர்கள் நிராகரித்தனர். (4)



## மாந்தை மேற்கில் ஆணின் சடலம் மீட்பு

மன்னார், நவ. 10

மாந்தை மேற்கு பருப்புக் கடந்தான் காட்டுப் பகுதியில் உள்ளாடையுடன் ஆண் ஒருவரின் சடலத்தை நேற்றுமாலை மீட்டுள்ளதாக அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதிக்குச் சென்ற மக்கள் அடம்பன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

உள்ளாடையுடன் சடலம் உள்ளது. ஏனைய உடைகள் சடலத்துக்கு அருகில் காணப்படுகின்றன. போதையேற்றும் மதுபானங்களும் சடலத்துக்கு அருகிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அவர் அடையாளங்காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (4.56)

## தும்பு உற்பத்தியை மேற்கொள்ள ஆர்வமுடன் வருகிறார்களில்லை!

### தொழிற்றுறைத் திணைக்களம் தெரிவிப்பு ஆர்வமுடையோரை இணையுமாறும் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

வடக்கு மாகாணத்தில் தும்புசார் உற்பத்தியில் போதியளவு வருமானத்தைப் பெறமுடியும். ஆனால் அதனை ஆர்வத்துடன் மேற்கொள்வதற்கு முன்வருபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இதற்கு அனைவரும் முன்வரவேண்டும் என்று மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

வடக்கு மாகாணத்தில் தும்பு சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்குப் போதுமான மூலப்பொருள்கள் உள்ளன. தேங்காய் மட்டையை 5 ரூபாவுக்கு திணைக்களம் கொள்வனவு செய்து தும்பு உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கிறது. ஆனால் தும்பு சார் உற்பத்திப் பயிற்சிகளைப் பெற்று அதனைச் சுய தொழிலாக மேற்கொள்வதற்கு முன்வருபவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

தென்மராட்சியில் கச்சாய், எழுது மட்டுவாள், பளை ஆகிய பிரதேசங்களில் உள்ள தும்பு சார் உற்பத்தித் தொழிற்சாலைகள் மூலமாக சுமார் 50 பேர் வரையில் 6 மாதங்கள் கொண்ட பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளார்கள்.

அவர்களில் சுயமாகத் தும்பு சார் உற்பத்திகளைச் செய்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவுள்ளது.

நேர்த்தியான உற்பத்திப் பொருள்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் இங்கு தாராளமாக உள்ளன. தூரிகை, கயிறு, கால் மிதி போன்ற உற்பத்திகளுக்கு அதிக கேள்வி உள்ளது. ஆனால் பயிற்சியைப் பெறுவதற்கு வருபவர்கள் எண்ணிக்கை குறைவு. அவர்களில் சிலரே தொடர்ச்சியாகப் பயிற்சியைப் பெற்று வெளியேறுகிறார்கள்.

பயிற்சியை முடித்தவர்கள் திணைகள் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உளஹளன. ஆகவே தும்பு சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. (4.7)

# அரசமைப்புத் திருத்தம் என்பது மாயை அதனால் தமிழருக்கு ஒரு பயனுமில்லை!

## கூறுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன்

வவுனியா, நவ. 10

அரசமைப்புத் திருத்தம் என்பது ஒரு மாயை. இந்தத் திருத்தத்தால் தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் விமோசனம் கிடைக்கப்போவதில்லை. தமிழர்கள் தங்களுக்கான வழியை உருவாக்கிப் போராடியே உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய அரசியல் நிலமை இலங்கையின் அரசமைப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் த.சிவசிதம்பரத்தின் 26 ஆவது ஆண்டு நினைவுதினம் வவுனியாவில் நேற்றுக் காலை நடைபெற்றது.
அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காலத்துக்குக் காலம் தமிழினத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்காகத் தலைவர்கள் தோன்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். விடுதலை வேட்கை நிறைவுபெறும் வரை அதனை நோக்கிய பயணம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். தற்போது நாங்கள் அரசமைப்பு மாற்றப் பிரச்சினையைச் சந்தித்துக் கொண்டிருக்றோம். இலங்கை அரசமைப்பு மோசடித்தனமானது என்பதை தற்போதைய சம்பவங்கள் உதாரணம் காட்டியுள்ளன.
19ஆவது திருத்தத்திலும் அரசதலைவரின் அதிகாரம் பறிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தாலும் அதன் 31ஆவது குறிப்பில் அரசதலைவர் நினைத்தால் நாடாளுமன்றைக் கலைக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதை வைத்து கொண்டு இரு பகுதிகளும் வியாக்கியானம் செய்துகொண்டிருக்கிறன.



13 ஆவது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டு நாடாளுமன்றில் அரசிதழ் அறிவித்தல் மூலம் பறிக்கபட்டமை யாவரும் அறிந்ததே. மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் அரசமைப்பை மீறமுடியும் என்ற நிலைப்பாடு இன்று இருக்கிறது - என்றார்.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜோநோகராதலிங்கம் தெரிவித்ததாவது:
அரசியல் ரீதியாக எல்லைக் காவலானாக வன்னி மாவட்டத்தில் குறிப்பாக வவுனியாவைப் பாதுகாத்த பெருந்தகை சிவசிதம்பரம். மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்துவதற்காக அரும்பணியாற்றியவர் - என்றார்.
நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராசா தலைமையில் தொடருந்து நிலைய வீதியிலுள்ள அவரது நினைவுத் தூபியில் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.
நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான செ.மயூரன், ப.சத்தியலிங்கம், தெற்கு,வடக்கு பிரதேச சபைத் தலைவர்களான து.நடராயசிங்கம், இ.தணிகாசலம், நகரசபை உறுப்பினர்கள் சந்திரகுலசிங்கம், செந்தில்ரூபன், தமிழ்விருட்சம் அமைப்பினர், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (4,110)



## உருக்குலைந்த நிலையில் வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா, நவ. 10

வவுனியாவில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா மடுகந்த பொலிஸ் பிரிவில் மயிலங்குளம் பகுதியில் குளத்துடன் காணப்படும் வயல் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. அதனை அடையாளங்காணுமாறு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.
மாடு மேய்க்கச் சென்ற இளைஞர் ஒருவரே சடலத்தை அவதானித்து பொதுமக்களின் உதவியுடன் மடுகந்த பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், மூன்று நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ளனர். சடலம் அடையாளம் காணப்படாத போதும் 45க்கும் 55க்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது கொலையா, தற்கொலையா என்ற கோணத்தில் விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## கூட்டணியின் கூட்டம் ஒத்திவைப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மையச்செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வருடாந்த பொதுக் குழுக் கூட்டம் நாளை இடம்பெறவிருந்த நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளதுஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டம் இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார். (4)

## வவுனியாவில் ஹெரோயினுடன் மூவர் கைது

வவுனியா,நவ.10

ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் மறைத்து வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேரைக் கைது செய்துள்ளோம் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வவுனியா தேக்கவத்தையில் நேற்று முன்தினம் மாலை அவர்கள் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகத்தில் அவர்களிடம் சோதனை நடத்தியபோது ஹெரோயின் போதைப் பொருள்கள் இருந்தமை கண்டறியப்பட்டது. அவர்களிடமிருந்து 700மில்லிக்கிராம் ஹெரோயின் தூள் மீட்கப்பட்டுள்ளது. ஒவர் வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர், மற்றைய இருவரும் வவுனியா தேக்கவத்தையைச் சேர்ந்த 24, 44 வயதுடையவர்கள். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

### திருடர்கள் மறைந்திருப்பது பற்றி

## பொலிஸாருக்கு அறிவித்தும் வரவில்லை: இரண்டு வீடுகளில் பொருள்கள் திருட்டு!


*பிரதேச மக்கள் கடும் விசனம்*

யாழ்ப்பாணம், நவ. 10

திருடர்களை இனங்கண்ட இளைஞர்கள் பொலிஸாருக்கு அறிவித்தபோதும் விடியும் வரையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவில்லை. அவர்கள் மறைந்திருந்துவிட்டு இரண்டு வீடுகளில் பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அங்கு பொலிஸார் செல்லாததால் பிரதேச மக்கள் பொலிஸார் மீது கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. இந்தப் பகுதி கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டது.
நேற்றுமுன்தினமிரவு 9.30மணி அளவில் இரு இளைஞர்கள் பற்றைக்குள் மறைந்திருப்பதனை அவதானித்த சில இளைஞர்கள் பல முறை பொலிஸாருக்கு அலைபேசி மூலமாகத் தகவல் வழங்கினர். இரவு 10.30 மணியைத் தாண்டியபோதும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவில்லை. அவர்கள் இளைஞர்களின் பார்வையிலிருந்து மறைந்துவிட்டனர்.

> இரவு 10.30 மணியைத் தாண்டியபோதும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவில்லை. திருடர்கள் இளைஞர்களின் பார்வையிலிருந்து மறைந்து விட்டனர்.

சிறிது நேரத்தில் வீடு ஒன்றில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. பற்றைக்குள் இருந்து விட்டு மறைந்தவர்களே திருடியிருக்கலாம் என்று அங்குள்ளவர்கள் கருதுகின்றனர்.
இரண்டு திருடர்களும் அங்குள்ள வீட்டுக்குள் புகுந்து வீட்டு அறை ஒன்றின் யன்னலைப் பிரித்து உட்சென்று சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசி, சிறுதொகைப் பணம், வங்கி அட்டைகளைத் திருடியுள்ளனர். அந்த அறைக்குள் இருந்து சத்தம் வந்ததால் என்ன என்று பார்க்க அந்த அறைக் கதவைத் திறப்பதில் மற்றைய அறைக்குள் இருந்தவர்கள் ஈடுபட்டிருந்தனர். ஆளரவத்தை அவர்கள் உணர்ந்து கொண்டு சத்தமிட திருடர்கள் யன்னல் ஊடாகத் தப்பி ஓடிவிட்டனர்.
பின்னரே பொருள்கள் திருடப்பட்டமை தெரியவந்தது.
இது தொடர்பில் பொலிஸாருக்கும் 119 என்ற இலக்கத்துக்கும் அலைபேசியில் தகவல் வழங்கியபோதும் அவர்கள் வரவில்லை.
அதன்பின்னர் அதே பகுதியில் வீடு ஒன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு வாகனங்களின் இரண்டு பற்றரிகளும் திருடப்பட்டுள்ளன என்று அவற்றை இழந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.
குறித்த திருடர்களின் நடமாட்டம் தொடர்பில் அறிவித்தவுடன் பொலிஸார் அந்தப் பகுதிக்கு வந்திருந்தால் திருட்டை தடுத்திருக்கவும் திருடர்களை கையும் மெய்யுமாக பிடித்திருக்கவும் முடியும். பொலிஸாரின் அக்கறையற்ற தன்மையே இதற்குக் காரணம் என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (4,105)




## அரச பேருந்து மீது கல்வீசித் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 10

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மீது நேற்றுமுன்தினம் கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி உடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் பகுதியில் இடம்பெற்றது.
யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த பேருந்து மீது உந்துருளியில் வந்த இனந்தெரியாத நபர்கள் கல்வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்து பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (4,8)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சிறப்பு நீதிமன்றங்கள் கலைக்கப்படக்கூடாது

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்டு, மகிந்த தலைமையிலான ஆட்சியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்திய பின்னர் புதிய நீதி அமைச்சராகச் சுசில் பிரேமஜெயந்த நேற்றுமுன்தினம் பதவியேற்றுக்கொண்டார். பதவியேற்பு முடிந்த கையுடனேயே அவர் விடுத்த முதல் அறிவிப்பு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. மகிந்தவின் ஆட்சி அடுத்த ஒருவருட காலத்துக்குத் தொடர்ந்தால் அதன் லட்சணம் எத்தகையதாக இருக்கும் என்று கட்டியங்கூறுவதாகவும் இருந்தது.

லஞ்சம், ஊழல், பெருமோசடிகள் மூலம் அரச சொத்துக்களைச் சுருட்டியவர்களுக்கு எதிரான வழக்குக்களை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்பதே நீதி அமைச்சராகப் பொறுப்பேற்ற கையோடு சுசில் பிரேமஜெயந்த விடுத்த அறிவிப்பு.

முன்னாள் ஆட்சியாளர்களான ராஜபக்சாக்கள் மற்றும் சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் மீதே இந்த நீதிமன்றங்களில் பெரும்பாலான வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவை தொடர்பில் தான் தீர்மானம் எடுக்கப்போகிறார் என்று புதிய அமைச்சர், பதவியை ஏற்ற கையோடு அறிவித்திருப்பது அந்த நீதிமன்றங்களை இல்லாமலாக்கப்போகிறார்கள் என்கிற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா நேற்று இந்த அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஒருபடி மேலே போய், சிறப்பு நீதிமன்றங்களைக் கலைப்பதற்காகவே தலைமை அமைச்சர் பொறுப்பில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு மகிந்தவை அந்தப் பதவியில் அமர்த்தினார் மைத்திரிபால சிறிசேன என்றும் குற்றஞ்சாட்டினார் அஜித் பி.பெரேரா.

நாடாளுமன்ற உறுப்பினருக்கு மட்டுமல்ல, நீதி அமைச்சரின் கருத்தைக் கேட்ட இலங்கையின் குடிமகன் ஒவ்வொருவருக்கும் இதே கருத்துத்தான் ஏற்பட்டிருக்க முடியும். நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் இந்த நீதிமன்றங்களால் விசாரிக்கப்படவேண்டியுள்ளன. இந்த நிலையில் பதவிக்கு வந்த உடனேயே அவை பற்றி முடிவெடுக்கவுள்ளதாக ஓர் அமைச்சர் அறிவிப்பது இதுபோன்ற எதிர்மறைக் கருத்துக்களை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும், அவரது குடும்பத்தினரும், முன்னாள் அமைச்சர்கள் பலரும் இந்த நீதிமன்றத்தில் விசாரணையை எதிர்கொண்டிருக்கையில், அவற்றைக் கலைக்கும் நடவடிக்கை நாட்டின் நீதியைக் கேலிக்குரியதாக்கிவிடும். தாம் குற்றம் செய்யாதவர்கள் என்றால் இந்த நீதிமன்றங்களில் வழக்குகளை எதிர்கொண்டு தம்மைக் குற்றமற்றவர்களாக இவர்கள் நிரூபிக்கவேண்டும். அதுவே நியாயமானதும் நீதியானதுமான ஆட்சியாக இருக்கமுடியும்.

அதைவிடுத்து சிறப்பு நீதிமன்றங்களைக் கலைப்பதன் மூலம் அந்த வழக்குகளில் இருந்து தப்பிக்க நினைப்பதோ அல்லது வழக்கமான நீதிமன்றங்களுக்கு இந்த வழக்குகளை மாற்றி அவற்றை இழுத்தடிப்பதன் மூலம் காலத்தைக் கடத்துவதோ நேர்மையான ஆட்சிக்கும் அரசியல்வாதிகளுக்கமான செயல் அல்ல.

இப்போது ஆட்சி அவர்கள் கையில் இருப்பதால் அரசியல் தலையீடுகள் ஊடாக இந்த நீதிமன்றங்கள் மூலம் தாம் பழிவாங்கப்படுகின்றோம் என்கிற குற்றச்சாட்டையும் மகிந்த குடும்பம் மற்றும் அமைச்சர்கள் முன்வைக்க முடியாது. எனவே அவர்கள் நீதிமன்ற விசாரணைகளை நேர்மையாக எதிர்கொள்வதே அவர்கள் மீதான சந்தேகங்களைத் தீர்க்கக்கூடியதாக இருக்கும். அப்படியில்லாமல் சிறப்பு நீதிமன்றங்களைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது கடந்த காலத்தில் நடந்ததைப் போன்ற மக்கள் நலன்களுக்கு முரணான ஆட்சியின் தொடக்கத்தைப் பறைசாற்றுவதாகவே இருக்கும்.

# திடமற்ற அரச தலைவரா சிறிசேன?

நவரத்தினம் தனுஜா

இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற அரசியல் சுழல் ஓய்வதற்கான சாத்தியங்களைக் காண முடியவில்லை. ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியிலிருந்து நீக்கி மகிந்த ராஜபக்சவைப் பதவியிலமர்த்தினாலும் திடமற்றதான அவருடைய நடவடிக்கையால் தற்போது நாட்டின் தலைமை அமைச்சர் யார்? என்கிற கேள்வி நீடித்துக் கொண்டே இருக்கின்றது. இவை தவிரவும் அரச தலைவர் மைத்திரிபாலவின் தலைமை அமைச்சரை நியமிப்பதற்குப் பாருங்கள் என்றும் கேட்டிருக்கிறார். இவற்றிலிருந்து நாடாளுமன்றில் ரணில் வெல்வதற்கான சாத்தியங்கள் அதிகம் இருப்பதாக அரச தலைவர் ஊகிப்பதையும், முதலில் பதவி விலகுவதாகக் கூறிய தனது எண்ணம் போலியானது என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார் அவர்.

**நடுநிலை வகிக்குமாறு சிறுபான்மையினரிடம் கோரிக்கை**



பேச்சுக்களிலும் திடமான, தீர்க்கமான தன்மை இருப்பதாகத் தெரியவில்லை.

**19ஆவது திருத்தத்தின்படி தனக்கு அதிகாரம் இருக்கின்றது என்றார்.**

ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவிலியிருந்து நீக்கியமைக்கு அவர் காரணம் கூறும்போது 19ஆவது திருத்தத்தின்படி தனக்கு அதிகாரமிருப்பதாகக் கூறினார். அதன்படி 19ஆவது திருத்தத்தைத் தேடிப் பார்த்தால், அத்தகைய ஓர் அதிகார வரையறை அதில் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதன் பின்பு 19ஆவது திருத்தத்தின் சிங்கள மூலத்திலேயே தனக்குண்டான குறித்த அதிகாரம் பற்றிக் குறிப்பிட்டிருப்பதாகக் கூறினார்.

நாட்டின் அரசமைப்பு வரைவில் மொழிக்கு மொழி இத்தகைய மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதும், தெளிவான வரையறைகள் இல்லாமல் சொல் மயக்கமுள்ள சட்ட வரையறைகள் இருப்பதும் பொது மக்களுக்கு அப்போதுதான் வெளிப்பட்டன.

**பதவி விலகுவேன் என்றார்**

நாடாளுமன்ற வாக்கெடுப்பின் முடிவில் ரணில் தலைமை அமைச்சர் பதவியில் தொடர்ந்தால், தான் அரச தலைவர் பதவியிலிருந்து விலகுவேன் என்றிருந்தார் மைத்திரி. மகிந்த தோற்று ரணில் வெற்றி பெற்றால் அடுத்த ஒரு மணி நேரத்தில் பதவி விலகிவிடுவேன் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் முன்னிலையில் வீர வசனம் பேசியிருந்தார் மைத்திரி. பேசிய சில நாள்கள் கழித்து ரணில் வென்றால் ரணிலுடன் இணைந்து பணியாற்ற முடியாது என்றிருக்கிறார். ரணிலைத் தவிர்த்து வெறொரு தன்னால் தற்போது தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்ற முன்னாள் அரச தலைவரான மகிந்தவுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டு வரப்படவிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அரச தலைவர் நடுநிலை வகிக்குமாறு கோரிக்கையை முன்வைத் திருக்கிறார். அமைச்சர்களின் கட்சி தாவும் நடவடிக்கைகளால் இறுதியில் யார் வெல்லப்போவது என்பது தெரியாதிருப்பினும் தன்னுடைய செயலின் முடிவில் தான் தோல்வியைச் சந்தித்துவிடக்கூடாது என்பதில் அரச தலைவர் பெரும்பாடு படுவது தெரிகிறது. இதனால், எதிர்வரும் 14ஆம் திகதியன்று இதன்நிமித்தம் கூடுகின்ற நாடாளுமன்றத்தில் தான் நிலை நிறுத்தியுள்ள மகிந்தவை ஆதரிக்காவிடினும் பரவாயில்லை எதிர்க்காமலாவது இருக்கும்படி தமிழ், முஸ்லிம் கட்சிகளிடம் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார். இதுவும் அவர் எடுத்த முடிவின் பலவீனத்தையே காட்டுகின்றது. தன்னால் நியமிக்கப்பட்ட மகிந்த நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பெறமாட்டார் என்பதையே மைத்திரியின் இந்தக் கோரிக்கை எடுத்துக் காட்டுகின்றது.

தன்னால் எடுக்கப்பட்ட உறுதியற்ற, திடமற்ற முடிவால் அரச தலைவரான மைத்திரிபால தட்டுத் தடுமாறிக் கொண்டிருப்பதையே தற்போது காணமுடிகின்றது. மிகவும் எளிமையான நபராகவும், தமிழ் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பார் எனவும் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட வரான நாட்டின் தற்போதைய அரச தலைவரின் பல ரூபங்கள் தற்போதைய தலைமை அமைச்சர் மாற்றத்தாலாவது வெளிப்பட்டிருப்பது ஒரு வகையில் நன்மைக்குரியதே.

# எங்கே போகிறது இலங்கை அரசியல்?

ஜூரி



உள்நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைகுலைத்திருக்கிறது என்பதைத் தாண்டி, பன்னாடுகளின் கவனத்தையும் திசை திருப்பியிருக்கிறது இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவின் சமீபத்திய நகர்வு. கூட்டணியிலிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியிருப்பதோடு, அவருக்குப் பதிலாக அரசியல் எதிரி மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராகி இருக்கிறார். 'சட்டப்படி இது செல்லும்; செல்லாது' என்கிற விவாதங்களைக் கடந்து, பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதில் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் போட்டி ஏற்பட்டிருக்கிறது. எப்படியிருப்பினும் இலங்கை அரசு ஸ்தம்பித்திருக்கிறது. இலங்கையில் என்ன நடக்கிறது, இனி என்ன நடக்கும்?

### கடந்து வந்த பாதை

மகிந்தவின் இலங்கை சுதந்திரக் கட்சியில் இருந்தவர் என்பதோடு, அவருடைய அமைச்சரவையிலும் இருந்தவர் மைத்திரி. அதிரடி நடவடிக்கையாக மகிந்தவைச் சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கியதோடு, 2015ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர் 'நல்லாட்சி அரசு' என்ற பெயரில் எதிர்க்கட்சியான ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து கூட்டணி அரசை நிறுவினார் மைத்திரி இந்தத் தலைகீழ் மாற்றங்கள் அவ்வளவுக்கும் மைய நோக்கமாக இருந்தது மகிந்தவை அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றுவது. மகிந்தவின் அரசியலும் முடிவுக்கு வந்துவிட்டதுபோலவே தெரிந்தது.

ஆனால், இந்த மூன்று ஆண்டுகளில் மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையே பல்வேறு விடயங்களில் முரண்பாடுகள் தோன்றின. விளைவாக பெப்ரவரியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலை இரண்டு கட்சிகளும் தனித்தனியாகவே சந்தித்தன. இந்த இரண்டு கட்சிகளைத் தாண்டித் தேர்தலில் மூன்றாவது முனையில் இருந்தது மகிந்த தொடங்கிய பொதுஜன பெரமுனா. ஆச்சரியமூட்டும் வகையில் தேர்தலில் அதிக இடங்களை அது வென்றது. தோல்விக்கான காரணம் குறித்து மைத்திரி - ரணில் இருவரின் கட்சிகளும் தங்களுக்குள் பரஸ்பரம் குற்றம்சாட்டிவந்தன. இதனிடையே ரணில் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ரணில் அதில் வென்றார்.



மைத்திரியைக் கொலை செய்யும் சதித் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக ஒரு செய்தி வந்தது. இந்தச் சதியில் ரணிலின் பெயரும் இந்திய உளவுத் துறையின் பெயரும் உச்சரிக்கப்பட்டன. பின்னர் மறுக்கப்பட்டன. அடுத்த சில நாள்களிலேயே தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் நீக்கப்பட்டு, மகிந்த அமர்த்தப்படும் அறிவிப்பை வெளியிட்டார் மைத்திரி. இந்தியா ரணில் இடையிலான நெருக்கம் சிறிசேனாவுக்குப் பிடிக்கவில்லை என்றும், ரணிலுக்கு நெருக்கடியை உண்டாக்கவே சீனாவுக்கு நெருக்கமான மகிந்தவுடன் கை கோர்க்கிறார் என்றும்கூடச் செய்திகள் வெளியாகின.

### என்ன நடக்கலாம்?



இலங்கையின் அண்மைய அரசமைப்புப்படி தலைமை அமைச்சர் பதவியில் இருப்பவரை, அரச தலைவர் தனக்குண்டான அதிகாரத்தால் நீக்கிவிட முடியாது. தலைமை அமைச்சராக இருப்பவர் அந்தப் பதவியைத் துறந்தாலோ, நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைத் தலைமை அமைச்சர் இழந்துவிட்டாலோதான் புதிய தலைமை அமைச்சரை அரச தலைவரால் நியமிக்க முடியும். ஆனால், 'நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றவர் என்று தான் நம்பும் ஒருவரை அதிபர் நியமிக்கலாம்' என்ற சட்டப் பிரிவை மைத்திரி பயன்படுத்தியிருக்கிறார் என்கிறார்கள் சட்ட நிபுணர்கள்.

நாடாளுமன்றத்தில் எல்லாமுமாக 225 உறுப்பினர்கள். பெரும்பான்மைக்கு 113 இடங்கள் தேவை. மகிந்த - மைத்திரி கூட்டணியில் 95 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். ரணில் தரப்பில் 106 பேர் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் முடிவு இதில் முக்கிய பங்காற்றும் என்று தோன்றுகிறது. இலங்கையில் கட்சித்தாவல் தடைச் சட்டமும் கிடையாது என்பதால், ரணிலின் கட்சியை உடைக்கும் முயற்சியில் மகிந்தவின் கட்சி ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மகிந்தவின் கை ஓங்குவதற்கான சாத்தியங்களே அதிகம் தென்படுவதாகவும் தெரிகிறது.

*நன்றி - தீ ஹிந்து*

## ஆசிரியருக்கான கடிதம்

### வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்து சேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் விடயங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க!

ஆனால், மேற்குறித்த விடயங்களைத் தவறாது இணைத்து அனுப்பவும். எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# பிறப்புச் சான்றிதழ் வழங்குகின்ற அலுவலரின் கடமைத் தவறு...!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இறப்புக்கள், பிறப்புக்களைப் பதிவதற்காக நோயாளர் விடுதிக்கு அண்மையாகச் சிறியதோர் அறை ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்று மேசைகள், கதிரைகள் மாத்திரம் உள்ளடங்கக் கூடிய அந்த அறைக்குள் அந்த மூன்று மேசைகளுக்குமுரிய ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். வெளியே ஓரமாக இரண்டு வாங்குகள் போடப்பட்டிருக்கின்றன.

குறித்த மருத்துவ மனையில் இடம்பெறுகின்ற இறப்புப் பிறப்புக்களுடன் ஒப்பிடுகையில் இந்த அறையும் அதில் பணி புரிகின்ற ஊழியர்களின் தொகையும் சிறிய அளவுடையன என்றே தெரிகிறது. அத்துடன் அங்கு சேவையைப் பெற்றுக் கொள்வதற்காகச் செல்லும் பொதுமக்களில் மூவரளவில் அந்த அறைக்குள் மூக்கை நுழைத்தால் அந்த அறை நிரம்பிவிடும். ஏராளமானோர் அறைக்கு வெளியே குவிகின்றனர்.

நோயாளர் விடுதிக்கு முன்பான போக்குவரத்துப் பகுதியில் குறித்த அறை அமைந்திருக்கின்றபடியால், அந்த வழியாகச் செல்கின்ற நோயாளர்கள், தள்ளு வண்டிகள், ஊழியர்கள், பார்வை யிடுபவர்கள், சுத்தம் செய்யும் ஊழியர்கள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் என அந்த இடம் எந்த நேரமும் சன நெரிசலாகவே இருக்கிறது. அந்த அறைக்குள் இருக்கின்ற ஊழியர்களது கடுமையான பணியின் நிமித்தம் பொது மக்கள் பலர் வெகுவாகத் தமது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு செல்கின்றனர். ஆனர்ல் பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்காகச் செல்வோர் அசௌகரியங்கள் பலதை எதிர்கொள்கின்றனர். பிறப்புக்கான பதிவுகளைச் செய்துவிட்டு,

அன்றிலிருந்து ஒருமாத காலத்துக்குப் பிறகு பிறப்பத்தாட்சிப் பத்திரத்துக்காக வருமாறு அழைக்கப்படு பவர்கள் பலர் ஒரு மாதத்துக்குப் பிறகு அங்கு திரும்பவும் வருகை தருகிறார்கள். அவர்களுக்குரிய ஆவணத்தைப்பெற்றுக்கொண்டு பிறப்பத்தாட்சிப் பத்திரத்தை வழங்குகின்ற ஊழியர் பணிக்கு வருவதற்கு மதியத்தை அண்மிக்கின்றது. இதனால் காலையில் வந்தவர்கள் அவ்விடத்தில் காத்துக் கிடக்கின்றனர்.

சில தாய்மார் பிறந்து ஒரு மாதமே ஆன தமது குழந்தைகளுடன் அங்கு காத்திருப்பது கவலை தருகின்றது. ஆகவே குறித்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்திப் பொதுமக்களுக்கு இயன்ற வரையில் நல்ல சேவையை வழங்குவதற்கு முன்வரு வார்களா?

சின்னத்தம்பி- சுதுமலை

## ஊழியர்களைச் சிறுநீர் குடிக்க வைத்த சீன நிறுவனம்
## குறித்த நேரத்துக்குள் பணியை முடிக்காததால் தண்டனை



பீஜிங்.நவ.10
குறிப்பிட்ட நேரத்துக்குள் பணிகளைச் செய்து முடிக்காத தொழிலாளர்களைச் சிறுநீரை குடிக்க வைத்து, மொட்டை அடித்துச் சீனாவின் தனியார் நிறுவன அதிகாரிகள் துன்புறுத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் குயீஸோஹ மாகாணத்தில் இயங்கிவருகின்ற தனியார் நிறுவனம் ஒன்றே இவ்வாறு பணியாளர்களை மிக மோசமாக நடத்தி வந்துள்ளது. உட்புற அலங்காரப் பொருள்கள் தயாரிக்கின்ற இந்த நிறுவனத்தில் சரியான முறையில் விதிமுறைகளைக் கடைப் பிடிக்காத ஊழியர்களுக்கு நாள்தோறும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனம், ஊழியர்களுக்கு அளவுக்கு அதிகமான அபராதம் விதித்ததுடன், கொடூரமான தண்டனைகளையும் வழங்கியுள்ளது. குறைந்த சம்பளத்துக்கு அளவுக்கு அதிகமான நேரம் பணியாற்றும்படி ஊழியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். சவரம் செய்து கொள்ளாதது, சப்பாத்து அணிந்து வரா்தது போன்ற காரணங்களுக்காக ஊழியர்களின் ஒரு மாதச் சம்பளத்தை அந்த நிறுவனம் தண்டமாக அறவிட்டிருக்கிறது. அத்துடன் குறிப்பிட்ட நேரத்துக்குள் பணிகளைச் செய்து முடிக்காத ஊழியர்களுக்குச் சிறுநீரை குடிக்கக் கொடுப்பது, கழிவறைத் தண்ணீரைக் குடிக்கக் கொடுப்பது போன்ற தண்டனைகளை இந்த நிறுவனம் சாதாரணமாகவே வழங்கியுள்ளது. கடுமையான தண்டனைகளால் பணியில் இருந்து விலகிய சில ஊழியர்கள் தாங்கள் அனுபவித்த கொடுமைகளை அலைபேசியில் படம் பிடித்து சமூகவலைத் தளங்களில் வெளியிட்டுள்ளனர். அதன் பிறகே அந்த நிறுவனத்தின் கொடூரமான செயல் வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளது. இதையடுத்து விசாரணை நடத்திய அதிகாரிகள் அந்த நிறுவனத்தின் மூன்று மேலதிகாரிகளைக் கைது செய்துள்ளனர்.

### ட்ரம்ப் - பத்திரிகையாளர் வாக்குவாத
## வெள்ளை மாளிகைக்குள் நுழைவதற்கு
## வெள்ளை மாளிகை வெளியிட்ட காணெ



வோசிங்டன்.நவ.10
அமெரிக்காவின் தேர்தல் முடிவுகளை அடுத்து பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தப்பட்டிருந்தது. அதன்போது ட்ரம்ப்பும் 'சி.என்.என்.' செய்திச் சேவையின் செய்தியாளர் ஒருவரும் வாக்குவாதப்பட்டிருந்தனர். இதனால் அந்தப் பத்திரிகையாளர் செய்தி சேகரிப்பதற்கு. வெள்ளை மாளிகைக்குள் நுழைவதற்கான அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. வாக்குவாதத்தில் ஈடுபட்ட செய்தியாளர் வைத்திருந்த ஒலிவாங்கியை வாங்குவதற்கு அங்கு வந்த பெண் ஊழியரிடம் செய்தியாளர் ஒலிவாங்கியை வழங்காது தடுத்த, அந்தத் நிகழ்வை மாத்திரம் வெள்ளை மாளிகை வெளியிட்டிருந்தது. அந்தக் காணொலி மாறுபட்டிருக்கின்றது என்று முறைப்பாடு எழுந்துள்ளது.
அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் இடைத் தேர்தல் நடந்து முடிந்தது. இதில் பிரதிநிதிக்களுக்கான இடைத் தேர்தலில் ட்ரம்ப்பின் குடியரசுக் கட்சி சரிவைச் சந்தித்தது. இதைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்தார் ட்ரம்ப். அப்போது 'சி.என்.என்.' செய்தியாளர் அகோஸ்டா, இலத்தீன் அமெரிக்காவில் இருந்து தெற்கு அமெரிக்க எல்லைக்கு இடம்பெயரும் அகதிகள் குறித்துக் கேள்வி எழுப்பினார். அதைத் தொடர்ந்து மற்றொரு கேள்வியைக் கேட்ட அகோஸ்டாவிடம், "இத்தோடு போதும்" என்று ட்ரம்ப் இடைமறித்தார். உடனே வெள்ளை மாளிகையில் இருந்த பெண் உதவியாளர் அகோஸ்டாவிடம் இருந்து ஒலிவாங்கியைப் பறிக்க முயன்றார். ஆனால் ஒலிவாங்கியை வழங்காது அவரைத் தடுத்தார் அகோஸ்டா. அப்போது அகோஸ்டாவின் கை, பெண்ணின் முழங்கையில் பட்டது.
டையே 'சி.என்.என்.'
அகோஸ்டாவுக்கு முழு
வித்துள்ளது. ட்ரம்ப்பி
இணையப் பயனாளிக
திருந்தனர்:.
**தற்போது வெளிவந்**
மேற்கூறப்பட்ட விடயப
தித் தொடர்பாளர் வெ
குற்றச்சாட்டு எழுந்துள்
விடம் இருந்து ஒலிவா
ஒலிவாங்கியைக் 
அகோஸ்டா. அப்போது
முழங்கையில் பட்டது.
வர் தனது கீச்சகப் பக்
கூட்டி, அகோஸ்டாவி
யாளரின் முழங்கை மீ
குற்றம் சுமத்தப்பட்டிரு
வெளியிடப்பட்டுள்ளது

## 2ஆயிரம் ஆண்டுகள் பழமையான சீன மது கண்டுபிடிப்பு!
## தொன்மையான பொருள்களை ஆய்வு செய்யும் பணி தொடர்கிறது



பீஜிங்.நவ.10
மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்திலுள்ள பண்டைய கல்லறையிலிருந்து கிட்டத்தட்ட 2ஆயிரம் ஆண்டுப் பழமையான 3.5 லீற்றர் மது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டியெடுத்த வெண்கலப் பானைக்குள் இந்த மது இருந்தது. முதற்கட்ட ஆய்வில் இது அரிசியில் தயாரிக்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. இதற்கு முன்பு கண்டெடுக்கப்பட்ட மது வகைகளும் கூட அரிசி, சோளம் போன்ற தானியங்களால் தயாரிக்கப்பட்டவையே. இந்த ஆராய்ச்சியில் வித விதமான வண்ணம் பூசப்பட்ட களிமண் பானைகளும், வெண்கலக் கலைப்பொருள்களும் கிடைத்திருக்கின்றன. காட்டு வாத்து வடிவிலான விளக்கு, ஆராய்ச்சியாளர்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்பான பண்டைய சீனர்களின் இறுதிச்சடங்குகள் எந்தவிதமாக இருந்திருக்கும் என்பதை அறியும்பொருட்டு, இந்த ஆராய்ச்சியில் தீவிரம் காட்டிவருகிறார்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்.

# ஏமனில் கடும் போா
# 58 பேர் சாவு



ஏடன்.நவ.10
ஏமனில் நிகழும் கடும்போரில் ஹவுதிப் போராளிகளில் 47 பேரும், அதிபர் ஆதரவுப் படையினரில் 11 பேரும் உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஏமன் நாட்டில் அந்த நாட்டின் அதிபர் அப்துரப்பா மன்சூர் ஹாதியின் அரச படைகளுக்கும், ஹவுதிப் போராளிகளுக்கும் 2015ஆம் ஆண்டு, மார்ச் மாதத்திலிருந்து உள்நாட்டுப்போர் இடம்பெற்று வருகிறது. 4ஆவது ஆண்டாகவும் அந்தப் போர் இன்றுவரை நீடிக்கிறது. அதிபர் படைகளுக்கு ஆதரவாகச் சவூதி கூட்டுப்படைகள் களத்தில் இறங்கியுள்ளனர். அங்குள்ள செங்கடல் துறைமுக நகரமான ஹொதய்தா, 2014ஆம் ஆண்டு முதல் போராளிகளின் வசம் இருந்து வருகிறது. அங்கு 6இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். அந்த நகரை மீட்பதற்காக அதிபர் ஆதரவுப் படைகள், சவூதிக் கூட்டுப்படைகளின் உதவியுடன் கடந்த ஒரு வாரமாகக் கவுத்திப் போராளிகளுடன் கடுமையாகப் போரிட்டு வருகின்றன. ஒரு பக்கம் தரைவழி தாக்குதலும், இன்னொரு பக்கம் வான்தாக்குதலும் நடந்து வருகிறது. நேற்று முந்தினம் நடந்த கடும்போரில் ஹவுதிப் போராளிகள் 47 பேர் சாவடைந்தனர். அதிபர் ஆதரவுர் படையில் 11 பே

**பின்னணி**
அரபு நாடான ஏமனில் சன்னி பிரிவைச் சேர்ந
ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி
இடையே 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்ந
பெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு
அரேபியா செயல்படுகிறது. ஹவுத்திப் போராளிகளு
அளிக்கிறது.
சவூதி அரேபியா தொடர்ந்து ஹவுத்திப் போராளிக
ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. 5ஆயிரத்து
இந்தப் போர்க் காலங்களில் இறந்திருக்கிறார்க
மொத்த இளம் தலைமுறையும் வறுமையிலும்,
வளர்கின்றனர் என்று ஐ.நா. வேதனை தெரிவித்
ஏமனில் சுமார் 50இலட்சம் குழந்தைகள் பட்டினி
கியுள்ளனர் என்று பன்னாட்டுத் தொண்டு நிறுவ
றன்' அமைப்புத் தகவல் வெளியிட்டிருந்தது.

## ...குவாத விவகாரம்

## ...தற்கு அனுமதி மறுப்பு ...ாணொலி மாறுபட்டது




அப்போது. "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் மம்" என்று தெரிவித்தார் அகோஸ்டா. இதைத் தொடர்ந்து செய்தியாளரை ட்ரம்ப், "நீங்கள் முரட்டுத்தனமான, கொடூரமான நபர்" என்று சாடினார்.
இது குறித்துக் கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், "இளம் பெண்களுக்கு இழைக்கப்பட்ட மூர்க்கத்தனமான அவமதிப்பு இது" என்றுள்ளார். இதனி...
...என்.என்.' நிர்வாகம், "சம்பந்தப்பட்ட செய்தியாளர் ...வுக்கு முழு ஆதரவு அளிக்கிறோம்" என்று தெரி...து. ட்ரம்ப்பின் செயலுக்கு பத்திரிகையாளரும் ... பயனாளிகள் பலரும் கண்டனங்களைத் தெரிவித்...

**...வெளிவந்திருக்கின்ற காணொலி**

...பட்ட விடயம் தொடர்பாக வெள்ளை மாளிகை செய்...பாளர் வெளிட்ட காணொலி மாறுபட்டது என்று ...எழுந்துள்ளது. பெண் உதவியாளர் அகோஸ்டா ...து ஒலிவாங்கியைப் பறிக்க முயன்றார். ஆனால் ...கியைக் கொடுக்காமல் அவரைத் தடுத்தார் ... அப்போது அகோஸ்டாவின் கை, பெண்ணின் ...பில் பட்டது. தற்போது ரவ்பேல் ஷிமுனோவ் என்ப...கீச்சகப் பக்கத்தில், காணொலியின் வேகத்தைக் ...ாஸ்டாவின் கை வேண்டுமென்றே பெண் உதவி...ழங்கை மீது படுமாறு காட்டப்பட்டிருக்கிறது" என்று ...தப்பட்டிருக்கிறது. இந்தக் காணொலி திருத்தப்பட்டு, ...பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.


## கமெரூனில் கடத்தப்பட்ட மாணவர்கள் விடுவிப்பு

## "பாடசாலைக்குச் செல்லக்கூடாது" என்று நிபந்தனை




யவுன்ட்.நவ.10
ஆபிரிக்காவின் கமெரூன் நாட்டில் பள்ளிக்கூடத்திலிருந்து ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட 78 மாணவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால், விடுவிக்கப்பட்ட அவர்களை ஆயததாரிகள் இனிமேல் பாடசாலைக்குச் செல்லக் கூடாது என்று நிர்ப்பந்தித்துள்ளனர்.
கமெரூனின் வடமேற்குப் பகுதியின் தலைநகரான பமெண்டா அருகே நீவின் என்ற கிராமத்தில் உள்ள ஒரு பாடசாலைக்குள்; நுழைந்த ஆயுததாரிகள் 10 முதல் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 78 பேரையும், ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் மற்றும் வாகன ஓட்டுநர் ஒருவரையும் கடத்திச்சென்றிருந்தனர் கடத்தப்பட்டவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர்? எதற்காக கடத்தப்பட்டார்கள்? என்பது குறித்து எந்த வித தகவலும் வெளிவராத நிலையில், அவர்களைத் தேடும் பணியில் அந்த நாட்டு அரசு ஈடுபட்டு வந்தது. ஆயினும் இந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட மாணவர்கள் 78 பேரும் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஓட்டுநரும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.
ஆனால் கடத்தப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர் ஆகியோர் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களைக் கடத்தியதற்கான காரணம் மற்றும் ஆயுததாரிகளின் கோரிக்கை குறித்து எந்த விதத் தகவலும் வெளியாகவில்லை. இந்த நிலையில் தான் விடுவிக்கப்பட்ட மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். ஆயுததாரிகள் பாடசாலை மாணவர்களை விடுதலை செய்யும்போது இனிமேல் பாடசாலைக்குச் செல்லக்கூடாது எனவும் அதை ஏனைய பாடசாலை பிள்ளைகளுக்கும் எடுத்துக் கூறி அவர்களையும் பாடசாலைக்குப் போகாமல் இருக்கச்செய்யும் படியும் அறிவுறுத்தியுள்ளனர்.
அந்த நாட்டில் சிறுபான்மையினமாக வாழும் ஒரு குழுவினரே இந்தக் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர். அரசு தங்கள் மொழியை அழிக்கவே பாடசாலைகளில் பிரெஞ்சு மொழியைக் கற்பிக்கிறது என்று அவர்கள் கருதுவதாகப் பன்னாட்டுச் செய்தித் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. .

## பூமிக்கு 3 நிலவுகள்



புடாபெஸ்ற்.நவ.10
பூமிக்கு அதிக அளவில் நிலவுகள் இருப்பதாகப் பல ஆண்டுகளாகக் கருதப்பட்டு வந்தது. அதற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர் ஹங்கேரி நாட்டு விஞ்ஞானிகள். தற்போது இருப்பதைவிட மேலும் 2 நிலவுகள் பூமிக்கு இருப்பதை அவர்கள் உறுதி செய்துள்ளனர்.
அண்ட வெளியில் பூமியைப் போன்று பல்வேறு கோள்கள் இருப்பதும், அவற்றுக்குத் துணைக் கோள்கள் இருப்பதும் அனைவரும் அறிந்த விடயம். அவற்றைச் சரியாகக் கண்டறியும் நோக்குடன் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அதன் ஒருபகுதியாக பூமியின் நிலவுகளைக் கணக்கிடுகின்ற ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த இது பற்றிய குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள ஹங்கேரி நாட்டு விஞ்ஞானிகள், பூமிக்கு 3 நிலவுகள் இருப்பதை ஆதாரத்துடன் நிரூபித்துள்ளனர். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு நிலவுகளும் தூசுக்களால் ஆன மேகங்களை போல் காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். பூமியில் இருந்து தற்போதைய நிலவு உள்ள தூரத்திலேயே இந்த இரண்டு நிலவுகளும் இருப்பதாகவும் ஆனால் மங்கலான ஒளியை இவை உமிழ்வதால் கண்டறிவதில் சிக்கல் இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இவற்றை முதன் முதலில் கண்டறிந்த போலந்து ஆராய்ச்சியாளர் கோர்ட்லெவ்ஸ்கியின் பெயரே இந்த நிலவுகளுக்குச் சூட்டப்பட்டுள்ளது.

## ...ார்




...பில் 11 பேர் சாவடைந்தனர்.

... சேர்ந்த அதிபர் மன்சூர் ...த்திப் போராளிகளுக்கும் ... உள்நாட்டுப் போர் நடை...றதிக்கு ஆதரவாகச் சவூதி ...ளிகளுக்கு ஈரான் ஆதரவு

...ராளிகளைக் குறிவைத்து ...ரத்துக்கும் மேற்பட்டோர் ...றார்கள். ஏமனின் ஒட்டு...பிலும், வன்முறையிலும் ...ரிவித்திருந்தது. அத்துடன் ...ட்டினிச் சாவை எதிர்நோக்...றுவனமான 'சேவ் த சில்...

# சிங்கங்கள் துரத்தியதால் நீரில் மூழ்கி 400 எருமைகள் சாவு



ஹபரோன்,நவ.10
தென் ஆபிரிக்காவின் போட்ஸ்வானா மற்றும் நமீபியா நாடுகளுக்கு இடையில் உள்ள நதி ஒன்றில் 400வரையான எருமைகள் நீரில் மூழ்கி இறந்திருக்கின்றன. இதுகுறித்த முதல்கட்ட விசாரணையில், சிங்கங்களால் துரத்தப்பட்டபோது ஓடியதில் இவை ஆற்றில் மூழ்கியதாக போட்ஸ்வானா அதிகாரிகள் கூறியிருக்கி றார்கள். ஆற்றுக்குள் இறங்கிய எருமைகள், துரத்தப்பட்ட கரையில் சிங்கங்கள் காத்திருந்ததால், மறுபக்கக் கரையால் ஆற்றிலிருந்து வெளியேறுவதற்கு நகர்ந்திருக்கின்றன. மறுபக்கத்தில் தண்ணீர் அதிகமாக இருந்ததால் எருமைகள் நீரில் மூழ்கி இறந்திருக்கின்றன எனக் கருதப்படுகின்றது. இதற்கு முன் இப்படி ஒரு துயரச் சம்பவம் நடந்ததில்லை. இறந்த எருமைகள் அனைத்தையும் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் இறைச்சித் தேவைக்காக அவரவர் வீட்டுக்கு எடுத்துச் சென்றிருக்கின்றனர்.

## நிதி அமைச்சரை பதவிநீக்க உத்தரவு

## தென்கொரியா அதிபர் அதிரடி!



சியோல்.நவ.10
தென்கொரியாவில் நிலவி வருகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வை சீர்செய்யாத காரணத்தால், அந்த நாட்டின் நிதி அமைச்சர் மற்றும் நிதிக் கொள்கைச் செயலர் ஆகியோரை தென்கொரிய அதிபர் மூன் ஜே பதவி நீக்கம் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். கொரியத் தீபகற்பத்தில் வடகொரியாவின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்த வருகிறது. இதனால் தென் கொரியாவின் செல்வாக்குச் சரியும் நிலையில் உள்ளது. இதையடுத்து, தென் கொரியாவின் பொருளாதாரத்தில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டது. அந்த நாடு பொருளாதார ஏற்றத்தாழ்வைச் சந்தித்து வருகிறது. இந்த நிலையிலேயே நாட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வ நிலையை சீர் செய்யாத காரணத்தால் தென் கொரியா நிதி அமைச்சர் கிம் டாங் யென் மற்றும் நிதிக் கொள்கைச் செயலர் ஜங் ஹா சங் ஆகியோரை அதிபர் மூன் ஜே பதவி நீக்கம் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார் என அதிபரின் அலுவலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கிய செயலை பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகள் விரைவாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வளர்ச்சியால் இலாபம் கூடும்.

**மிதுனம்:** புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். இளமைக் கால இனிய நிகழ்வுகளை பேசி மகிழ்வீர்கள். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** மேலதிக பணிகளால் குழப்பம் ஏற்படும். நற்பெயரைப் பாதுகாக்க முயல்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**சிங்கம்:** எந்த செயலிலும் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை உடனடியாக சரிசெய்வது நல்லது. மிதமான பணவரவு உண்டு.

**கன்னி:** வெகுநாள் தாமதமான செயலில் புதிய திருப்பம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**துலாம்:** மனதில் குழப்பமான சிந்தனை ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில் இலக்கு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிக்கான சூழ்நிலை அமையும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**தனுசு:** சுயலாபத்திற்காக சிலர் உங்களை புகழ்ந்து பேசுவர். முன்யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது. தொழிலில் இலக்கை அடைய கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**மகரம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். விலகிச்சென்ற உறவினரும் அன்பு பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். கூடுதல் பணவரவால் சேமிக்க வாய்ப்புண்டு.

**கும்பம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். கடனில் ஒருபகுதி அடைபடும்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி பெறுவதில் தாமதமாகலாம். மன உறுதியுடன் பணிபுரிவதால் திட்டமிட்ட செயல் நிறைவேறும்.

## கிறிஸ்மஸுக்கு வெளியாகும் 'மாரி -2'



வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள 'வடசென்னை' படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அடுத்ததாக தனுஷ் நடிப்பில் 'மாரி 2' உருவாகி இருக்கிறது. பாலாஜி மோகன் இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் தனுஷ் ஜோடியாக சாய் பல்லவி நடித்துள்ளார். கிருஷ்ணா, வரலட்சுமி, வித்யாபிரதீப் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்திலும், டோவினோ தாமஸ் வில்லனாகவும் நடித்துள்ளனர்.

இந்த படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். படப்பிடிப்பு முடிந்து பின்னணி வேலைகள் நடைபெறும் இந்தப் படத்தின் முதல் சுவரொட்டி சில தினங்களுக்கு முன்பாக வெளியானது. தற்போது இந்தப் படத்தின் வெளியீட்டுத் திகதியை படக்குழுவினர் அறிவித்திருக்கிறார்கள்.

கிறிஸ்மஸ் விடுமுறையை முன்னிட்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி வெளியிட இருப்பதாகப் படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

## twitter

கடைநிலை ஊழியன்@Suyanalavaathi

சொந்த ஊரில் தீபாவளி கொண்டாடிவிட்டு வெளியூர் செல்பவருக்கே தெரியும், திரும்பிச்செல்லும் வலி !!


---

பிரச்சினைகளை உடனே தீர்க்கவேண்டும் என்று முயற்சி செய்யாதீர்கள்: பல பிரச்சினைளைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டாலே போதும் அதுவே சரியாகிவிடும் !!










Satheesh Khan
Follow · 24 June 2015 · Edited



மைத்திரி தமிழருக்கு நல்லது செய்வாரு...!
எப்ப செய்வார்?. போடாபோடா!
நல்லது செய்வார்டா..! எப்படா செய்வார்?
செய்வார்டா#செய்வார்டா.. !!!

Like Comment Share

## செறிவான வார்த்தைகள் மனதை வைராக்கியப்படுத்துகின்றன




பேச்சுக்குக் கொடுக்கும் முன்னுரிமையை, தங்கள் செயலுக்குக் கொடுக்காமல் விடுவது அரசியல்வாதிகள் கொண்டுள்ள தனிப்பட்ட குணமாகும். ஆனாலும் எல்லா அரசியல்வாதிகளுக்கு இந்த வரையறை பொருந்தாது.

ஒரு சாராசரி மனிதனின் ஆன்ம வலுவை, அதிகம் வாய் அசைப்பதன் ஊடே இழக்கச்செய்து விடலாம்.


நல்ல உபதேசங்களைச் சொல்பவர்கள் ஆழ்ந்து, உணர்ந்து, மௌனம்காத்துத்தங்கள்தேடல்மூலம்பேசும் சொற்கள், அற்புதமானவை. அவர்கள் சொற்களே எங்களைச் செயல் வீரர்களாக்கும் வல்லமைகளை ஈட்டித்தர வல்லன. ஒருவரைத்தட்டி எழுப்பும் திறன், நல்ல பேச்சாளனுக்கு உண்டு.

இத்தகையவர்கள் தங்கள் ஆன்மாவுடன், எதிரில் இருக்கும் மாந்தர்களின் அறிவை ஸ்பரிசித்து ஈர்த்துக்கொள்வதால் அவை உறுதியாகவே மனதில் உட்புகுந்து கொள்கின்றன.

உணர்வுபூர்வமாக மனம்திறந்து, சொற்பெருக்காற்றினால் கருத்துகளைச்செயலுருப்பெறவைக்கும்வல்லமைதானே கைவரப்பெறும். செறிவான வார்த்தைகள் மனதை வைராக்கியப்படுத்துகின்றன.








# மகிழ்ச்சி கிடைக்கும் இடம்

ஒரு பெரிய மண்டபத்தில் 'வாழ்க்கையில் மகிழ்ச்சி' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடந்து கொண்டிருந்தது. இந்தக் கருத்தரங்குக்கு சிறப்பு அழைப்பாளராக வந்த பேச்சாளர் ஒருவர் தனது பேச்சின் நடுவே கருத்தரங்குக்கு வந்திருந்த ஒவ்வொருவரிடமும் ஒரு பலூனைக் கொடுத்தார்.

அதில் அவரவர் பெயரை எழுதச் சொன்னார். எல்லோரும் பலூனில் அவரவர் பெயரை எழுதிக் கொடுத்தனர். பெயரெழுதப்பட்ட அனைத்து பலூன்களையும் பக்கத்திலிருந்த அறையில் சென்று வைக்கும் படி சொன்னார். சிறிது நேரத்துக்குப் பின்னர் அந்தப் பேச்சாளர் "ஐந்து நிமிடங்களுக்குள் நீங்கள் உங்கள் பெயரெழுதிய பலூனை அறையுள் இருந்து எடுத்து வாருங்கள்" என்று அறிவித்தார். உடனடியாக அனைவரும் அங்கிருந்து அந்த அறைக்குள் ஓடிச் சென்று ஒவ்வொரு பலூனாக எடுத்துத் தங்கள் பெயர் பலூனில் இருக்கிறதா? என்று தேடினர். இவ்வாறு ஒருவருக்கொருவர் நெருக்கித் தள்ளிக் கொண்டு கீழே விழுந்து தங்கள் பெயருக்குரிய பலூன் எங்கே இருக்கிறது என்று பரபரப்பாகத் தேடிக் கொண்டிருந்தனர். இவ்வாறு ஐந்து நிமிடங்கள் கடந்தன. ஆனால் ஒருவர் கூட தங்களுடைய பெயர் எழுதிய பலூனைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வரவில்லை. இப்பொழுது அந்தப் பேச்சாளர் கூறினார்.

"ஒவ்வொருவரும் ஒரு பலூனை மட்டும் எடுங்கள். அந்த பலூனில் எவருடைய பெயர் இருக்கிறதோ அதை அந்தப் பெயருடையவரிடம் கொடுங்கள்" என்றார். அடுத்த இரு நிமிடங்களில் ஒவ்வொருவர் கையிலும் அவரவர் பெயர் எழுதப்பட்ட பலூன்கள் இருந்தன.

இப்பொழுது அந்தப் பேச்சாளர் "இதுதான் வாழ்க்கை. நாம் எல்லோரும் மகிழ்ச்சியைத் தேடுகிறோம். ஆனால் அது எங்கே? எப்படி? எதில் கிடைக்கும் என்று யாரும் நினைப்பதில்லை. எங்களுடைய மகிழ்ச்சியே அடுத்தவர்களுக்கு உதவுவதில்தான் இருக்கிறது. அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுங்கள். உங்கள் மகிழ்ச்சி உங்களைத் தேடித் தானாகவே வந்து சேரும்" என்றார்.



# ஆசிரியர் என்பவர்

ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பவர்தான் ஆசிரியர். மாணவர்களின் நிலைக்கு கீழ் இறங்கி வர ஆசிரியர் தயாராக இருக்க வேண்டும்.

வகுப்பறையில் மாணவர்களின் முழுக்கவனமும் தன்னிடம் இருக்குமாறு கற்பிக்க வேண்டும். மாணவர்களுக்குப் புரியும் விதத்தில் பாடம் கற்பிக்க வேண்டும்.

ஆசிரியரின் முகத்தில் எப்போதும் ஒரு புன்சிரிப்பு மலர்ந்திருக்க வேண்டும். அதுவே மாணவர்களுக்குக் கற்பதில் மிகுந்த உற்சாகத்தை அளிக்கும். ஆசிரியர் தனக்காகச் செலவிடும் நேரத்தைவிட மாணவர்களிடத்தில் அதிக நேரம் செலவழிப்பவராக இருக்க வேண்டும்.

பாடநூல்களுக்கு அப்பாற்பட்டும் அனைத்துப் பொதுவான விடயங்களையும் தெரிந்து வைத்திருக் கவேண்டும். முக்கியமான விடயங்களைத் தினமும் மாணவ சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு எதில் விருப்பம் உள்ளதோ அதைக் கண்டறிந்து செயற்படுத்த முயற்சிக்க வேண்டும். மாணவன் படிக்கவில்லை என்றால் அவர்களுக்குப் புரியும் படியாகக் கற்பிக்க வேண்டும்.

ஒரு விடயத்துக்கு விளக்கம் கொடுக்கும்போது செய்முறை அடிப்படையில் உணர்த்தினால் மாணவர்களுக்குப் படிப்பின் மீது ஆர்வம் அதிகரிக்கும்.

மாணவர்களுக்கு கல்வியின் மீது உள்ள ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். அவர்களது தனிப்பட்ட திறமைகளை வெளிக் கொண்டு வந்து அவர்களது சாதனைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.




## புள்ளிக்கோட்டில் படத்துக்குரிய சொல்லை எழுதுவோம்

| | | |
|---|---|---|
| அம்மா |  | .................. சமைத்தார். |
| நான் |  | .................. படித்தேன். |
| அக்கா |  | .................. பறித்தார். |
| வாழை |  | .................... போட்டது. |
| தம்பி |  | .................. விளையாடினான். |
| குளத்தில் |  | .................... மலரும். |
| கோயில் |  | ...............ஒலித்தது. |
| நான் |  | .................... உண்டேன். |
| தங்கை |  | ...................... அணிந்தாள். |
| அப்பா |  | ...................... ஓடினார் . |



# பெஞ்சமின் பிராங்ளின்

பள்ளிப் படிப்பில்லாமலே சுயமாகக் கல்வி கற்று கணிதம், இலக்கணம், தர்க்க சாஸ்திரம் ஆகியவற்றில் தேர்ந்த ஞானம் பெற்று எழுத்தாற்றலும் கைவரப் பெற்றவர் பெஞ்சமின் பிராங்களின். இவர் தனது சகோதரன் நடத்தி வந்த பத்திரிகையில் எழுதத் தொடங்கினார். இவர் பத்திரிகையில் எழுதுவதை அண்ணன் விரும்பாத காரணத்தால் ஒரு பெண்ணின் புனை பெயரில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் இது பற்றித் தெரிந்து கொண்ட அண்ணன் பெஞ்சமினைக் கோபித்துக் கொண்டதோடு அவருக்குப் பல கொடுமைகளையும் செய்யத் தொடங்கினார். இதனால் இவர் தனது 18வயதில் நாட்டைவிட்டு வெளியேறினார். பிலடெல்பியாவுக்குச் சென்று அறிவியல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டார். அப்போது இவருக்கு வயது 38. மின்சாரம் தொடர்பான ஆய்வுகளிலேயே இவர் அதிக ஆர்வம் காட்டினார். வானத்தில் தோன்றும் மின்னல்களில் அதிக ஆர்வம் காட்டிய இவர், சில குச்சிகளையும் பட்டுத்துணியையும் கொண்டு ஒரு பெரிய கற்றாடி செய்து அதன் மேல் முனையில் ஒரு கூரிய கம்பியை இணைத்துக் கட்டினார். நூலின் மறு முனையில் பட்டுத்துணியையும் இணைத்தார். பட்டு நூல் இணையும் இடத்தில் உலோகத்தினால் ஆன ஒரு சாவியையும் சேர்த்துக் கட்டினார்.

மின்னல், இடியுடன் மழை பெய்த ஒருநாளில் தாமே தெருவில் இறங்கி அந்தக் காற்றாடியைப் பறக்கவிட்டார். அந்தப் பெரிய மனிதர் பட்டம் விட்டதைப் பார்த்த பொதுமக்கள் அவரைக் கேலி பேசினர். "அடை மழையிலும் விடாது காற்றாடி விடுகிறதே இந்தச் சின்னப்பிள்ளை" என்று அவரை நையாண்டி செய்தனர். அவர்களின் கேலிப் பேச்சை பொருட்படுத்தாமல் காற்றாடியை அவர் உயரப் பறக்க விட மேகத்தில் மின்னலும் பளிச்சிட்டது. அப்போது காற்றாடியின் சாவியில் மின்பொறிகள் தோன்றி அவர் கைவிரல்களைத் தாக்கின. அப்போது மின் அதிர்வுகள் ஏற்பட்டதையும் அவரால் உணர முடிந்தது. இந்த உணர்தல் மூலம் மின்னல் என்பது மேகங்களில் ஏற்படும் விளைவு என்றும், அது பூமிக்கு வரும்போது தீங்கு விளைவிக்கும் என்பதையும் அந்தப் பரிசோதனை மூலம் கண்டுபிடித்தார்.

பெஞ்சமின் பிராங்கிளின். இதனையொட்டியேதான் பின்னர் பெரிய கட்டடங்களின் உச்சியில் இடிதாங்கிகள் அமைக்கப் பட்டன.

# ‘வியாபாரத்தின் மொழி’

## இன்று பன்னாட்டுக் கணக்காளர் தினம்

பேராசிரியர் பா.நிமலதாசன்

“யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கீட்டுத் துறையினர் மேற்கொண்டுள்ள ஆரம்ப முயற்சியாக, ‘கணக்கீட்டில் சமகாலப் பிரச்சினைகள்’ எனும் தொனிப் பொருளோடு பன்னாட்டுக் கணக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.”

கணக்கீடு என்பது, “வியாபாரத்தின் மொழி” என்று அழைக்கப்படுகிறது. இந்த விடயம் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த கணிதவியலாளரான ‘லுகா பசியோலின்’ 1494ஆம் ஆண்டு வெளியிட்ட கணக்குப் பதிவியல் முறை (இரட்டைப் பதிவு முறைமை) தொடர்பான விளக்கங்களைத் தொகுப்பாகத் தருகின்ற, ‘சுமா சுமா டீ அரத்மெற்றியா’, ‘ஜியோ மெற்றியா’ மற்றும் ‘புறோபோசனி எட் புரொபோவுனலிற்றா’ போன்ற நூலுருக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது. இத்தகு நூலுருக்களின் வெளியீடு காரணமாக கணக்கீட்டில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டது. குறிப்பாக கணக்கியல் துறையில் இவர் ஆற்றிய



பங்களிப்பின் காரணமாக ‘கணக்கீட்டின் தந்தை’ என அழைக்கப்படுகின்றார்.

இவர் 1447இல் துஸ்கனியிலுள்ள ‘போர்கோ சன் செபியுகுறோ’ என்ற இடத்தில் பிறந்தார். ‘சமயம், அறிவியல், கணிதம், மருத்துவம், கலை, இசை, கட்டடம் மற்றும் மொழி’ என பல்துறை ஆளுமையாளராக வியத்தகு அறிவைக் கொண்டிருந்தார். பல்வேறு துறைகளுக்கு இடையேயான தொடர்பைக் குறிப்பாக, ‘கணிதம் மற்றும் கணக்கீட்டுத்துறை’ சார்ந்த இணக்கப்பாட்டை அதிகம் ஏற்றுக்கொண்டார்.

**நடைமுறை உலகில் வியாபாரக் கட்டமைப்பு**

நடைமுறை உலகில் வியாபாரக் கட்டமைப்பானது மிகவும் சிக்கல் நிறைந்த ஒன்றாக மாற்றங்கண்டுள்ளது. இதன் காரணமாக நிறுவனங்களின் கணக்கீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உயர்தகைமை, அனுபவம் அல்லது ஆர்வமுள்ள கணக்காளர்களின் உதவி அவசியமாகின்றது. தவிர தொழில் ரீதியில் கணக்காளர்கள் பெரும் சவால்களையும், அழுத்தங்களையும் எதிர்கொள்வதோடு, போட்டிமிக்க நம்பகரமான மூலதனச் சந்தையையும், மிக உயர் தரத்திலான நன்மதிப்பையும் உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

உலகமயமாதலின் போக்கினுள் இன்றைய சூழல் நேயம் கட்டுண்டு போயுள்ள நிலையில், கணக்காளர்கள் அன்றாடம் பல்வேறுபட்ட நடைமுறைச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, ‘வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தல், கணக்களித் தகைமை, ஆளுமை, ஒத்திசைவு மற்றும் வியாபார நடவடிக்கைகளின் சுறுசுறுப்பான இயங்கும் தன்மை’ போன்ற முகாமைத்துவம் சார் இயல்பாளுமைப் பெறுதிகளின் வழி பெறுமதி சேர்க்க வேண்டியுள்ளது.

**பன்னாட்டுக் கணக்காளர் தினம்**

அந்தவகையிலே சவாலான மற்றும் மன அழுத்தம் நிறைந்த வேலைகளை மிக இலாவகமாகவும், திறன்மிகுதியோடும் கையாளும் கணககாளர்களுக்கு அங்கீகாரமளிக்கும் வகையில் பன்னாட்டுக் கணக்காளர் தினம், 1972 ஆம் ஆண்டு தொடக்கம் நவம்பர் மாதம் 10ஆம் திகதி உலகெங்கிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

நிறுவனத்தின் நிதி மற்றும் நிதித் தந்திரோபாயங்களை ஆரோக்கியமாகப் பேணும் கணக்காளர்களை நினைவுகொள்ளும் விதமாக இந்தத் தினத்தை அனைத்து நாடுகளும் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிகழ்வுகள்**

இந்த சந்தர்ப்பத்திலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கீட்டுத் துறையினர் மேற்கொண்டுள்ள ஆரம்ப முயற்சியாக, ‘கணக்கீட்டில் சமகாலப் பிரச்சினைகள்’ எனும் தொனிப்பொருளோடு பன்னாட்டுக் கணக்காளர் தினத்தை இன்று கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளன. நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்கினேஸ்வரன், சிறப்பு விருந்தினராக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முதன்மைக் கணக்காளர் திரு.கில்பேட் குணம், வி. அரியரட்ணம் அன்ட் கம்பனியின் பங்காளர், பட்டயக்கணக்காளர் வி.அரியரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக துறைசார்ந்த புலமையாளர்கள் கலந்துகொள்ளும் குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. குறிப்பாக, ‘இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுப் பிரயோகங்களில் சமகாலப் பிரச்சினைகள்’ எனும் கருப்பொருளில் குழுக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையிலும் நிதியமைச்சின் பொதுநிதித் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் சி.சந்திரகுமாரின் நெறிப்படுத்தலிலும் இடம்பெறும்.

அதே போன்று ‘பொதுத்துறை சார்ந்த கணக்கீடு மற்றும் கணக்காய்வு தொடர்பான பிரயோகப் பிரச்சினைகள்’ எனும் தலைப்பில் வவுனியா மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த முதன்மை உள்ளக் கணக்காய்வாளர் செல்வி.மு.சிவகுமாரி, வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் முதன்மைக் கணக்காளர்·பி.ஜெயராஜ் ஆகியோரும், ‘தனியார்துறை சார்ந்த கணக்கீடு மற்றும் கணக்காய்வு தொடர்பான பிரயோகப் பிரச்சினைகள்’ எனும் தலைப்பில், ‘கே.பி.எம்.ஜி’ கணக்காய்வு நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் ம.மயூரன், பட்டயக் கணக்காளர் அ.ஆதித்தன் ஆகியோரும் தமது கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர்.

தவிர, சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் கணக்கீட்டுத்துறையின் சமூகப்பொறுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நிழல் தரும் மரங்கள் வழங்குவதற்கும், உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனைக்காக காட்சிப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கணக்கீடு மற்றும் கணக்காய்வுத் துறைசார் வல்லுநர்கள், தொழில் தருநர்கள், தொழிலாளர்கள் மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

**கட்டுரையாளர்:**
**தலைவர்,**
**கணக்கியல் துறை,**
**முகாமைத்துவக் கற்கைகள்**
**மற்றும் வணிகபீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# திருக்குறள் - நாலடியார்!

கயல்விழி

நூல்கள் மனிதனின் அறிவை வளர்க்கும் அமுதசுரபிகளாகும். பலரின் வாழ்க்கையை மாற்றியமைத்தவையும் நூல்களே ஆகும். நல்ல நூல்கள் நல்ல நண்பர்களுக்குச் சமமாக விளங்குகின்றன. ஒருவர் தேடி எடுத்து விரும்பிப் படிக்கும் நூல்களைக் கொண்டே அவரின் குணநலன்களை அறிந்து கொள்ளலாம் என்று உளவியல் அறிஞர்கள் கூறுவர். நூல்கள் மனிதர்களின் குணநலன்களை மாற்றியமைக்க வல்லன. வாழ்விற்குரிய நன்னம்பிக்கையையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்துவன நூல்களே ஆகும்.

தரணியில் தனித்தன்மை வாய்ந்த நூலாகவும், தமிழர்களைத் தலைநிமிர வைக்கும் நூலாகவும் விளங்கும் நூல் உலகப் பொதுமறையாம் திருக்குறளாகும். இந்தத் திருக்குறளைப் பின்பற்றி அதன் கருத்துக்களை அடியொற்றிய நூலாக அமைந்திருப்பது சமணமுனிவர்கள் இயற்றிய நாலடியாராகும். இந்த நூல்கள் இரண்டும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்களாக அமைந்து விளங்குகின்றன. வாழ்க்கையில் தளர்ச்சியுறும் மனிதர்களுக்கு வாழ்க்கையில் உறுதியளிக்கும் உறுதிப்பொருள்களான கருத்துக்களை இரு நூல்களும் எடுத்துரைக்கின்றன. இந்த நூல்களின் பெருமையை,

**ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி!**

என்ற பழமொழியூடு கண்டுகொள்ள முடியும்.

ஆம், ‘ஆலங்குச்சி, வேப்பங்குச்சி’ ஆகியவற்றால் பல் துலக்கினால் பற்கள் உறுதித்தன்மை அடையும். பற்களின் ஈறுகளும் அதன் எனாமலும், கிருமிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதுடன் உறுதியடைகிறது. அதுபோலவே வாழ்க்கையை நான்கு அடிகளால் ஆன நாலடியாரும், இரண்டு அடிகளால் ஆன திருக்குறளும் உறுதிப்படுத்துகின்றன. பல்வேறு புறத்தாக்குதல்களில் இருந்து மனித வாழ்க்கையை இவ்விரு நூல்களும் பாதுகாக்கின்றன என்பதை மேற்குறித்த பழமொழி தெளிவுறுத்துகின்றது. இதே போன்று,



**பழகுதமிழ்ச் சொல்லருமை**
**நாலிரண்டில்!**

என்ற தொடரும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடர் பழமொழி போன்று காணப்படினும் அஃதன்று. இஃது வழக்கில் வழங்கப்படும் வழக்குத் தொடர் எனல் பொருந்தும்.

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம்.
கனடா PR, 21.10.1988. சதயநட்சத்திரம்.
கும்பராசி. கிரகபாவம் 61 (வித்தியாசம்
25 வரை எதிர்பார்க்கலாம்). உயரம் 5'6"
உடைய மணமகனுக்கு நற்குணமுடைய
அழகிய படித்த மணமகள் தேவை.
(மணமகன் கொழும்பு வந்துள்ளார்)

**077 978 0205 (தந்தை)**

**Bow & Arrows for Archery**

Hungary இலிருந்து தருவிக்கப்பட்ட
Flagella Dei/ Magyar
Reiterbogan (Branded)
Handmade hores Bows(வில்),
Arrows (அம்பு) விற்பனைக்கு
உண்டு. Archchery/ Hunting
Purposes களுக்கானவை.

**077 545 6126/ 077 224 9924**

**விற்பனைக்கு**

யமுனா, சணல் ஆடுகள் குட்டிகள்
மற்றும் கன்றுத்தாச்சி மாடு, பொமேரியன்
நாய்கள் விற்பனைக்குண்டு.

**077 101 6407**

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச்
சேர்ந்த 30 வயதுடைய இந்தியாவில்
பணியாற்றும் பொறியியலாளருக்கு
மணமகள் தேவை.

**077 595 8288**

**வாடகைக்கு உண்டு**

யாழ் கந்தர்மடத்தில் மேல் மாடி
வீட்டின் மேல்பகுதி வாடகைக்கு
உண்டு. அலுவலகம் அல்லது
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

**077 253 0865**

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி. வழங்குனர்களைப் பதிவுசெய்தல் - 2019

கிளிநொச்சி மாவட்டச் செயலகம். மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2019 ஆம் ஆண்டிற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருள்கள். சேவைகள். வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாதிரி படிவத்திற்கு அமைய தாமாக தயாரித்தோ அல்லது மாவட்டச் செயலக நிதிக்கிளை மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் அலுவலக நேரத்திலும் www.kilinochchi.dist.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலமும் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விவரத்திற்கு ஏற்றவாறும்.

| ஒப்பந்தத் தொகை | பதிவுக்கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 2000.00 |
| ரூபா 2,000,000 இற்கு அதிகமானதும் 5,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3000.00 |
| ரூபா 5,000,000 இற்கு அதிகமானதும் 10,000,000 இற்குச் சமமான அல்லதுஅதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 5000.00 |

ஏனைய வழங்குனர்கள் ரூபா 250/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்ட செயலாளர். மாவட்டசெயலகம். கிளிநொச்சி என்னும் பெயரில் உள்ள இலங்கை வங்கி கணக்கிலக்கம் 7041986 இற்கு பணமாக வைப்பிலிடலாம் அல்லது நேரடியாக மாவட்ட செயலக நிதிக்கிளையில் சிறாப்பரிடம் செலுத்தலாம். வைப்பி லிட்ட பணத்திற்கான வங்கிவைப்புசிட்டை / சிறாப்பரிடம் பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டை (பொது 172) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| குறியீட்டு இலக்கம் | வேலைகள் |
|---|---|
| W -1 | கட்டட நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள். |
| W -2 | பெருந்தெருக்கள், பாலங்கள், மதகுகளின் நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள். |
| W -3 | குளங்கள், கால்வாய்கள் மற்றும் விவசாய கிணறுகளின் நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள். |
| W -4 | அனைத்து வகையான வெல்டிங் வேலைகள் மற்றும் அலுமினிய வேலைகள். |
| W -5 | கட்டட மின்சார கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் திருத்தவேலைகள். |
| W -6 | நீர்க்குழாய் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் திருத்தவேலைகள். |

**நிபந்தனைகள்**

* மேற்படி W - 01 – 03 வரையான விடயங்களுக்கு (ICTAD/CIDA) பதிவு கட்டாயமாகும் என்பதுடன் அதற்குரித்தான பதிவுச் சான்றிதழ்களின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

| குறியீட்டு இலக்கம் | பொருள்கள் |
|---|---|
| G-1 | அலுவலகத் தளபாடங்கள் - மரம், இரும்புருக்கு, பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ், எம்.டி.எவ் |
| G-2 | காகிதாதிகள், எழுதுபொருள்கள் |
| G-3 | சுத்திகரிப்புப் பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, சவர்க்காரங்கள், காப்பிக், பைனோல், Handwash, Airfreshner, துடைப்பான் மற்றும் ஏனையவை) |
| G-4 | போட்டோப்பிரதி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், தொலைநகல் இயந்திரங் கள், மல்டிமீடியா புரெஜெக்டர் |
| G-5 | கணினி இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் அதனோடு இணைந்த துணைச்சாத னங்கள். |
| G-6 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள். |
| G-7 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| G-8 | உணவுவகைகள், குடிநீர் வகைகள், பால்மாவகைகள், மென்பானம் |
| G-9 | பொது உபகரணங்களும் வீட்டுப்பாவனைப் பொருட்களும். |
| G-10 | திரைச்சீலைகள், சீருடைகள், மேசை விரிப்புக்கள், நிலவிரிப்புக்கள், பொன்னாடைகள், மேசைக்கண்ணாடிகள், மழைஅங்கிகள், கால்மிதிகள், பெற்சீற், தலையணை உறை கள். |
| G-11 | அனைத்து வகையான கட்டடப் பொருட்கள், நீர்க் குழாய்கள் மற்றும் நீர்வழங்கல் உபகரணங்கள், காற்றுச் சீராக்கிகள், திறப்பூச்சுக்கள் |
| G-12 | தோல் வகை உற்பத்திப்பொருட்கள் |
| G-13 | விளையாட்டுப் பொருட்களும் உபகரணங்களும் |
| G-14 | இசைக்கருவிகள் |
| G-15 | விவசாய எந்திரங்கள், எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-16 | மீன்பிடி தொடர்பான பொருட்கள் |
| G-17 | சுய தொழிலுக்காக வளர்க்கப்படும் விலங்குகள் (கோழிக் குஞ்சுகள், பால் பசுக்கள், ஆடுகள்) |
| G-18 | இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள் (மின்விசிறி, தொலைக்காட்சிப்பெட்டி, டிஜிரல் புகைப்படக் கருவி, வீடியோப்திவுக் கருவி, CCTV புகைப்படக் கருவி போன்றன) உதிரிப்பாகங்கள் |

| குறியீட்டு இலக்கம் | சேவைகள் |
|---|---|
| S-1 | போட்டோப்பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள் மற்றும் கணினி வலையமைப்பு முறைமை திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல். |
| S-2 | அலுவலகத் தளபாடங்கள் திருத்தம் செய்தல் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைபர்கிளாஸ், எம்.டி.எவ்) கதிரை இழைத்தல் |
| S-3 | குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் (A/C) திருத்தலும் பராமரித்தலும். சேவிஸ் செய்த லும் |
| S-4 | மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-5 | மின் வயர்கள் பழுது பார்த்தலும் பராமரித்தலும் |
| S-6 | இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள், புல்லுவெட்டி இயந்திரங்கள் திருத்தலும் பராமரித்தலும். |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல் |
| S-8 | பாதுகாப்பு சேவை வழங்கல் |
| S-9 | வாகனம் பழுது பார்த்தல் :- உள்வாரியான திருத்தங்கள் இயந்திரம் மற்றும் வாகனப் பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள். |
| S-10 | வாகனம் பழுது பார்த்தல் :- வெளிவாரியான திருத்தங்கள் தகடுகள்(Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும் |
| S-11 | வாகனம் பராமரித்தல்:- கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (Alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல், டயர் மாற்றம் செய்தல் சீற் மற்றும் குஷன் கவரிடுதல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும் |
| S-12 | மேடை மற்றும் ஒலிபெருக்கி சேவைகள் |
| S-13 | அச்சிடுதல் (offset, digital உட்பட), புத்தகம் கட்டுதல், இறப்பர்முத்திரைகள், திகதி முத்திரைகள் தயாரித்தல், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள் செய்தல், |
| S-14 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல் |
| S-15 | சலவை செய்தல் |
| S-16 | தையல் சேவை |
| S-17 | உள்ளகதொலைபேசி திருத்தலும் பராமரித்தலும். |

## பொதுவான நிபந்தனைகள்

**வழங்குனர்களைப் பதிவுசெய்தலுக்குரிய பொதுவான நிபந்தனைகள்**

1) விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   a) வியாபாரபதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் சான்றிதழ்)
   b) நிறுவனப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
   c) உணவு வழங்கல் சேவையாயின் குறித்த பகுதிக்குரிய PHI / MOH அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட சான்றிதழின் பிரதி
   d) சம்பந்தப்பட்ட வியாபார அனுபவம் மற்றும் பிரதான வாடிக்கையாளர்களின் விவரம்.
2) வழங்குநர்களாக பதிவுசெய்தலானது 2019ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும். பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுகோரப்படும். எனினும் ஏனையவர்களிடமும் விலைமனுகோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு உண்டு.
3) விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விவரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4) பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை மாவட்ட செயலாளர் கொண்டுள்ளார்.
5) மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6) வியாபாரப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருள்கள். சேவைகளுக்கு மட்டுமே வழங்குனர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7) குறிப்பிடப்படும் பொருள்கள். சேவைகளுக்கு வழங்குனர்களாகப் பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விவரங்கள். ஆவணங்களின் உண்மைத்தன்மையானது மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாகச் சென்று பார்வையிடுவதன் மூலமோ. நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குனர் குறிப்பிட்ட பொருள்கள். சேவைகளுக்கு வழங்குனர்களாகப் பதிவு செய்வதற்குத் தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
8) வாகன பழுதுபார்த்தலுக்கோ வாகனப் பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள். சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விவரங்களும் பயிற்சி பெற்ற வேலையாள்களின் விவரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினைப் பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
9) வழங்குனர்களுக்குப் பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
10) பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு மீளளிக்கப்படாத வைப்புப் பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 2018 நவம்பர் மாதம் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "அரசாங்க அதிபர். நிதிக்கிளை. மாவட்டச் செயலகம். கிளிநொச்சி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாள்களில் (மு.ப.9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்
    விண்ணப்பங்கள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழங்குனர்களைப் பதிவுசெய்தல் - 2019" எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
11) 2018 நவம்பர் மாதம் 30ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
12) மேலதிக விவரங்களிற்கு "பிரதம கணக்காளர். மாவட்டச் செயலகம். கிளிநொச்சி" அவர்களுடன் செயலக தொலைபேசி இல 0212285309. 0212285352 மூலம் தொடர்புகொள்ளமுடியும்.

திரு.சுந்தரம் அருமைநாயகம்
மாவட்டசெயலாளர்.
மாவட்டச் செயலகம். கிளிநொச்சி.

அலுவலகஉபயோகத்திற்கு [ ]

**மாதிரிவிண்ணப்பப் படிவம்**
**2019 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்**
**மாவட்டசெயலகம் - கிளிநொச்சி.**

01. வியாபார நிறுவனத்தின் பெயர் :..........................................
02. வியாபார நிறுவனத்தின் முகவரி :..........................................
03. உரிமையாளரின் பெயர் :..........................................
04. தே. அ. அ இலக்கம் :..........................................
05. வியாபார பதிவிலக்கமும் திகதியும் :..........................................
    (பதிவுப்பிரதியின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டியது அவசியமானது)
06. I.தொலைபேசி இல :..........................................
    II.தொலைநகல் இல :..........................................
    III.கையடக்கதொலைபேசி இல :..........................................
07. பதிவுசெய்வதற்கு விண்ணப்பிக்கும் விடய குறியீட்டு இலக்கம் ..........................................
    (2019ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்தல் அறிவுறுத்தல் விடய இல. W 1-6, G 1-18, S 1-17 வரை பார்வையிடவும்)
08. வியாபாரத்தின் தன்மை :.......................................... (உற்பத்தியாளர்/ பிரதான வர்த்தகர் / விற்பனைமுகவர்- அவைதொடர்பான விவரங்கள் ஆவணங்களுடன்)
09. வங்கியாளர்களின் பெயர்கள்:..........................................
10. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :..........................................
11. மின்னஞ்சல் முகவரி :..........................................
12. வருமானவரி செலுத்துபவராக இருப்பின் அதன் விவரங்கள் :..........................................
    ..........................................
13. பெற்றுள்ளதரச் சான்றிதழ்கள் (ISO) என்பன :..........................................
14. VAT, NBT இலக்கம் இருப்பின் அதன் விவரங்கள் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)
    ..........................................
15. ICTAD இலக்கம் இருப்பின் அதன் விவரமும்,அதில் என்னவகுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்ற விவரமும் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)
    ..........................................

என்னால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் யாவும் சரியானவை எனவும், அரசாங்க அதிபர் அவர்களால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறோம். பதிவுக்கட்டணம் ரூபா.................. வினை 2019.................. ஆந் திகதி மாவட்டச் செயலகத்தின் நிதிக்கிளையிலுள்ள சிறாப்பரிடம் பணத்தை செலுத்திய / மாவட்ட செயலக இலங்கை வங்கியின் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதற்கான பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்துள்ளேன்.

.................................... .................................... ....................
விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி
(உத்தியோகபூர்வ முத்திரை)

(cs.8269)

# கேள்வி அறிவித்தல். நல்லூர் பிரதேச சபை சபைநிதி. 2018

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைகீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டவாறு வேலைக்காக கோருகின்றது.

02. தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதி 04/ 2016 (1) ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை ( Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை,** 14/5 **கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 / 021-314-2841) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தலைவர்,பெறுகைக் குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** என்னும் இடத்திலிருந்து 2018.11.10 ஆம் திகதியிலிருந்து 2018.11.23ஆம் திகதிவரை அலுவலகநாள்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரிநீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2018.11.26 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது 2018.11.26 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 நாள்கள் ஆகும்.

09. கேள்வி பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலைவிவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| மீள் தாரிடல் வேலைக்கானது. | | | | | | |
| 01. | ஆலடி 1ஆம் , 2ஆம் வீதி மற்றும் நாராயனா 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகள் - கோண்டாவில். | 0.11 | 2,000.00 | C9 | 1500.00 | 01மாதம் |
| 02. | ஞானவைரவர் வீதி ( மதவடிவீதி) கோண்டாவில் | 0.29 | 2,000.00 | C9 | 3000.00 | 01மாதம் |
| 03. | தேவாலயவீதி, புலவனார் வீதி- கல்லியங்காடு | 0.29 | 2,000.00 | C9 | 3000.00 | 01மாதம் |
| 04. | முள்ளி 1ஆம் குறுக்கு ஒழுங்கை அரியாலை | 0.17 | 2,000.00 | C9 | 1700.00 | 01மாதம் |
| 05. | ஆடியபாதம் 1ஆம் , 2ஆம், 3ஆம் ஒழுங்கைகள் மற்றும் பூநாறி 1ஆம், 2ம் ஒழுங்கைகள்- கொக்குவில் | 0.15 | 2,000.00 | C9 | 1500.00 | 01மாதம் |
| 06. | சபாபதிவீதி உப ஒழுங்கை,பிறவுண் வீதி உப ஒழுங்கை மற்றும் சம்பியன் வீதி 1ஆம் ஒழுங்கை கொக்குவில் | 0.12 | 2,000.00 | C9 | 1500.00 | 01மாதம் |
| 07. | நேதாஜி சனசமூகநிலய முன் ஒழுங்கை, வழவத்தை ஒழுங்கை-- கொக்குவில் | 0.20 | 2,000.00 | C9 | 2100.00 | 01மாதம் |
| 08. | காரைக்கால் வீதி, காரைக்கால் இந்துமயானவீதி, கொட்டம்பனை வைரவர் வீதி,மற்றும் கோழாவத்தை சிவன் வீதி- கோண்டாவில் | 0.29 | 2,000.00 | C9 | 3000.00 | 01மாதம் |
| 09. | அரசடி குறுக்குவீதி, கேணியடி முன் ஒழுங்கை, இராமலிங்கம் வீதிமுன் ஒழுங்கை- திருநெல்வேலி | 0.09 | 2,000.00 | C9 | 1000.00 | 01மாதம் |
| 10. | கலாசாலை 1ஆம்,5ஆம், குறுக்குவீதிகள், கலாசாலைவீதி - முருகன் வீதிக்கான இணைப்பு வீதி – திருநெல்வேலி | 0.25 | 2,000.00 | C9 | 2600.00 | 01மாதம் |
| கட்டுமான வேலைக்கானது | | | | | | |
| 11. | கொக்குவில் சந்தைக்கட்டத்தில் அமைந்துள்ள உப தபாலகத்துக் கான மலசலகூடம் அமைத்தல் | 0.28 | 2,000.00 | C9 | 2900.00 | 01மாதம் |
| வீதிபுனரமைப்பு வேலைக்கானது | | | | | | |
| 12. | சம்பியன் வீதி 2ஆம் குறுக்குஒழுங்கைபுனரமைப்பு | 0.30 | 2,000.00 | C9 | 3500.00 | 01மாதம் |

10.கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2018.11.21 ஆம் திகதி நல்லூர் பிரதேசசபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

**குறிப்பு:- பந்தி 2 இல் கூறப்பட்ட நிப்ந்தனைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு இல்லாத சந்தர்ப்பத்தில் அதனிலும் கூடியதரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.**

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**
**2018.11.10** (IN/8298)(11,17)


**பேரன்பு மிக்க வாடிக்கையாளருக்கு**

எங்கள் ஸ்தாபனத்தின் **அறுபதாம் ஆண்டு விழாவை** முன்னிட்டு இந்தியப் புத்தகங்கள் Rs 1/= ஆனது Rs 3/= வீதம் இந்த வருடம் முழுவதும் தமிழ்-தமிழ் அகராதி, எல்லாவிதமான பிரபல எழுத்தாளரின் சரித்திரக்கதைகள், சிறுவர்கதைக்கான அறிவை வளர்க்கும் கதைகள், பிரபல எழுத்தாளரின் நாவல்கள் இவை தவிர ஐம்பதாயிரத்துக்கு மேலான புத்தகங்கள் விற்னைக்கு உண்டு. இன்றே விஜயங்கள் செய்யுங்கள்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**இல.212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
021 222 5542, 021 567 1527


## கேள்வி அறிவித்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 26.11.2018 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதான உணவகம் 01 | திருநெல்வேலி |
| பிரதான உணவகம் 02 | திருநெல்வேலி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 162 - 1001 - 60000- 880 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,** **10.11.2018**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (IN 8282)(14,17)

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில்

**2019 ஆம் ஆண்டிற்கான**
**சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை**
**கேள்வி அறிவித்தல்**

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், என்பவற்றை 2019ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 27.10.2018 ஆம் திகதிய பத்திரிகையில் கோரப்பட்ட பொழுதும் விண்ணப்பங்கள் போதுமான அளவு கிடைக்காத காரணத்தினால் திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 19.11.2018ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 19.11.2018 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 19.11.2018 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை.

**திரு தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்.**
**நல்லூர் பிரதேச சபை,**
**திருநெல்வேலி.**
**10.11.2018** (IN 8300)(14,17)


## "இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்கவைக்கும் கருவிகளைப்பொருத்திப் பரீட்சித்தல்"


முற்றிலும் காது துவாரத்துக்குள் பொருத்தப்படும் CIC


காது துவாரத்துக்குள் பொருத்தப்படும் ITC


காதில் பொருத்தப்படும் ITE


றிசீவர் காது துவாரத்தில் பொருத்தப்படும் RIC


காதுப் பின் புறத்தில் வெளியாகப் பொருத்தப்படும் BTE


காதுப் பின்புறத்தில் பொருத்தப்படும் இணைப்புக்கருவி BTE


காதுப் பின்புறத்தில் பொருத்தப்படும் கேட்டல் சக்திக்கருவி BTE


காதுப் பின்புறத்தில் பொருத்தப்படும் கேட்டல் அதிசக்திக் கருவி BTE

இம் மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை விலைக்கழிவு வழங்கப்படும்.

- இலவச கண் பரிசோதனையும் மற்றும் மூக்கு கண்ணாடி போன்ற வற்றுக்கு 30% விலைக்கழிவும் வழங்கப்படும்
- தெரிவு செய்யப்பட்ட காதுகேள் கருவிகளுக்கு விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)

J.M.விக்கிரமராச்சி அன் கம்பனி
No.178, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9288 / 021 222 8109

Wickramarachchi HEARING CARE

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 09.11.2018 | 2397 | சிவப்பு |

விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்: 40 50 51 55

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 24, 38, 076/=

2018.11.11 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## நியத ஜய

நியத்த ஜய Niyatha Jaya

சீட்டிழுப்பு வாரம்: 718 வர்ணம்: நீலம்

திகதி: 2018.11.09

வெற்றி இலக்கங்கள்: 39 48 60 62 ஆங்கில எழுத்து: A

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 17,753,460/-

தொலைபேசி: 0112 333 546 - 47 web: www.dlb.lk

## கோடிபதி சனிதா

KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 365

வர்ணம்: செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2018.11.09

அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 101,803,848/-

W 12 42 74 79

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 429

வர்ணம்: செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2018.11.09

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,700,825/-

வெற்றி இலக்கங்கள்: 05 21 26 53 ஆங்கில எழுத்து: D

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▸ 879

சீட்டிழுப்பு திகதி ▸ 2018.11.08 வியாழக்கிழமை

V 25 28 56 57

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,642,284/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

நீல நிற டிக்கட்டுகள் 2018.11.10ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பிரதேச செயலக கணக்கு கிளையில் கடமையாற்றும்

**திருமதி பிரமிளா துசிகரன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி இரகுநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

**நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்**

## சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

யா /மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை ஒரு வருடத்திற்கு (01.01.2019 - 31.12.2019) நடத்துவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்கள் 10.11.2018 ஆம் திகதியிலிருந்து வ்ழங்கப்படும். பூரணப்படுத்திய படிவங்களை 23.11.2018 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

- சிற்றுண்டிச்சாலையில் பெண்கள் மட்டும் கடமையில் ஈடுபட முடியும்.
- கேள்விப் பத்திரங்கள் 23.11.2018 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்குத் திறக்கப்படும்.

மேலதிக விவரங்களைப் பாடசாலை நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**தலைவர், பாடசாலை அபிவிருத்திக்குழு,**
**யா/மானிப்பாய் மகளிர்கல்லூரி.**

(IN 8290) (14,17)

## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் பிரதேச செயலகத்தில் கணக்கு கிளையில் கடமையாற்றும்

**தில்லைராசன் தர்சிகா**

அவர்களின் அன்புத் தந்தை

**தியாகராசா தில்லைராசன்**

அவர்கள் 05.11.2018 திங்கட் கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்,**
**பிரதேச செயலகம், காரைநகர்.**

(CS/21112)(11,17)

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596**

(CS 18781/15/17)

## காசாளர், வெயிட்டர் தேவை

யாழ். நகரில் இயங்கும் சிற்றுண்டிச் சாலைக்கு காசாளர் மற்றும் வெயிட்டர் (உணவு பரிமாறுபவர்) தேவை.

**உடன் தொடர்பு கொள்ள - 078 495 7847**

## விற்பனைக்கு

தனிப்பாவனையிலுள்ள BCR - XXXX இலக்கமுடைய அப்பாச்சி (Gray நிறம்) மோட்டார் சைக்கிள் கோவில் வீதியில் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 665 1812**

## வேலையாள்கள் தேவை

மர அரிவு ஆலைக்கு பாட்டுவாள் றோதைவாள் என்பவற்றில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. சம்பள விவரம் நேரில்.

**077 301 5534**

(IN 8302) (14,17)

## வீடு விற்பனைக்கு

அவசர பணத் தேவைக்காக நந்தாவில் லேனில் 4¼ பரப்பில் அமைந்துள்ள மேல் மாடியுடன் கூடிய வீடு பெறுமதியிலும் குறைந்த விலைக்கு

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 884 3551**

## உதயன்

விளம்பரத்தொடர்புகளுக்கு

**advt@uthayan.com**

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 06 . 04 . 1946

அம்பாள் அடியில் 06 . 11 . 2018

# திருமதி பார்வதி சின்னத்துரை

**(பொன்னு அக்கா)**

நயினாதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி சின்னத்துரை 06.11.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவன் - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகளும், சோமு-ராமாசிப்பிள்ளைதம்பதிகளின்அன்புமருமகளும், சின்னத்துரையின்அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, செல்லாச்சி, டேவிற்ராஜா, கண்மணி, சுப்பையா மற்றும் கிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, காலஞ்சென்ற நாகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவாகரன் (சுவிஸ்), பத்மஜோதி (சுவிஸ்), காலஞ்சென்ற ஞானஜோதி (இந்தியா), நவஜோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரன் (சுவிஸ்), விமலேஸ்வரி ( சுவிஸ்), ஜெயலிங்கம் (இந்தியா), பாஸ்கர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சகானா, சங்கீத், அபிஷன் (சுவிஸ்), வினித், மிது (இந்தியா), அஸ்வின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**முதலாம் வட்டாரம்,**
**நயினாதீவு**

**தகவல்:**
**சோமு சின்னத்துரை**
**(குடும்பத்தினர்)**

(CS/21092)(11,17)

# 17th Year Remembrance

## In Loving and Undying Memory Of



Born 29 . 03 . 1950

Called To Rest 10 . 11 . 2001

## Late Mr. B.M. Edward

**(B.Sc (Hons), SLPS - 1)**

Seventeen long years have passed
We greatly miss you in every way
Anyway, your prayers and legacy
Will always lead us and strengthen us

**Sadly Missed & Fondly Remembered BY :**
**Family & Relatives.**
**69/2, Vembadi Road, Jaffna.**

# தள்ளாடுகிறது பங்குச் சந்தை

யாழ்ப்பாணம், நவ. 10

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் உறுதிப்பாடற்ற சூழல், கொழும்பு பங்குச்சந்தையிலும் எதிரொலிக்கின்றது. மகிந்த ராஜ பக்ச ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், திடீர் அதிகரிப்பை வெளிப்படுத்திய பங்குச் சந்தை அதன் பின்னர் வீழ்ச்சியடைந்தது. அதன்பின்னர் சிறிய அதிகரிப்பைக் காட்டியது. பங்குச் சந்தை தளம்பல் நிலையில் இருப்பதையே குறிகாட்டிகள் காட்டி நிற்கின்றன.

கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது இந்த வார முடிவில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டி 113.58 புள்ளி களால் வீழ்ச்சியடைந்து 5 ஆயி ரத்து 978.63 புள்ளியாகவும், ஸ்டாண்டர்ட் அண்ட் புவோர்ஸ் சிறி லங்கா 20 விலைச் சுட்டி 114.22 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்து 3 ஆயிரத்து 94.21 புள்ளியாகவும் காணப்பட்டது. கடந்தவாரம் மொத்த புரள்வாக ரூபா 9.9 பில் லியனாக பதிவாகியிருந்தபோதும் இந்த வாரம் ரூபா 2.1 பில்லியன் குறைவடைந்து ரூபா 7.8 பில்லிய னாக காணப்பட்டது.

கடந்த இரு வாரங்களில் வெளி நாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவி லான பங்குகளை விற்பனை செய்வதை அவதானிக்க முடிகின் றது. இந்த வாரம் மட்டும் ரூபா 3.9 பில்லியன் பெறுமதியான பங்கு களை வெளிநாட்டு முதலீட்டாளர் கள் விற்பனை செய்துள்ளனர்.

இது இலங்கையிலிருந்து வெளி நாட்டு முதலீட்டாளர்கள் வேறு பாதுகாப்பான நாடுகளுக்கு தங் கள் முதலீடுகளை இடம் நகர்த்து வதையே காட்டுகின்றது என்று பங்குச்சந்தை அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இத னால் இலங்கையின் நாணயப் பெறுமதியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளியல் வல்லுநர்களும் கருத்து வெளியிட் டுள்ளனர். (ற-5)

## வெளிநாடு பறக்கலாம் கோத்தா!

கொழும்பு, நவ. 10

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச வெளிநாடு செல்வதற்கு விதிக்க ப்பட்டிருந்த தடையை தற்காலிகமாக நீக்கிக் கொழும்பு சிறப்பு மேல்மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.


கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் டீ.ஏ.ராஜபக்ச நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அம்மப் பதில் ஊழல் இடம்பெற் றிருந்தது என்று குற்ற ச்சாட்டுகள் முன்வை க்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணைகள் நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்றது. முன் னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நீதிமன்றில் முன்னிலையாகியி ருந்தார்.

வழக்கு விசாரணைகளை அடுத்து அவர் வெளி நாடு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்காலிகமான ஒரு மாதத்துக்கு நீக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு எதிர்வரும் டிசெம்பர் 14 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், நீதி அமைச்ச ராக நியமிக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்த, சிறப்பு மேல் நீதிமன்றங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

தற்போது கோத்தபாய வெளிநாட்டுக்குச் செல்வதற்கு விதிக்கப் பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. (ற-5,10)



# நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற தினமும் தேன்

தேனில் உள்ள பூவின் மணம் போவதற்காக இரும்பைக் காய வைத்து அதை தேனில் வைப் பார்கள். இது காய்ச்சிய தேன். இது கொஞ்சம் நீர்த்திருக்கும். இதைஇரண்டுஆண்டுகளுக்குள் பயன்படுத்த வேண்டும். காய்ச்சாத தேன், மஞ்சளாக கெட்டியாக இருக்கும். இதை ஆண்டு கணக்காக வைத்திருந் தாலும் பழுதடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

அல்சர்நோய்குணமாகதினமும் சாப்பாட்டிற்கு முன் இரண்டு கரண்டி தேனைச்சாப்பிட்டுவர வேண்டும். அரை அவுன்ஸ் தேனுடன் அரை அவுன்ஸ் இஞ்சிச்சாறு கலந்து காலை நேரங்களில் தொடர்ந்து சாப்பிட்டுவர குருதிவிருத்தியும் ஏற்படும்.

நரம்புத்தளர்ச்சியும்நீங்கிவிடும். என்றும் இளமையுடன் இருக்க வேண்டுமெனவிரும்புபவர்கள் தினமும் தேனை அருந்த வேண் டும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத வர்கள் தினசரி ஒரு ஸ்பூன் தேன் சாப்பிடலாம்.

தேனுடன்எலுமிச்சம்பழச்சாறு கலந்து அருந்தினால் வாந்தி, குமட்டல், ஜலதோஷம், தலைவலி குணமாகும்.

தேனும், முட்டையும், பாலும் கலந்து சாப்பிட்டு வந்தால் ஆஸ்துமா உபாதையிலிருந்து தப்பிக்கலாம். தேனும், வெந்நீரும்கலந்து அருந்தினால் பருத்த உடல் மெலியும்.

ஊளைச்சதை குறையும். உடல் உறுதி அடையும். சூடானநீரில் ஒரு தேக்கரண்டி இஞ்சிச்சாறு, எலுமிச் சைச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்தீர்களானால் நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், தும்மல் போன்ற வற்றுக்கு நிவாரணம் அளிக்கும் மருந்து தயார்.

அடிக்கடி சளி பிடித்தால் இளஞ்சூடான பாலில் சிறிது மஞ்சள் தூள், ஒரு ஸ்பூன் தேன் கலந்து தினமும் பருகி வர நல்ல பலன் கிடைக்கும். உடல் மெலிந்தவர்கள் தினமும் பாலில்தேன்கலந்துசாப்பிட்டு வர உடல்வாகு சீராகும்.

எந்த வயதினராக இருந்தாலும் ஒரு நாளைக்கு ஒரு கரண்டிக்கு மேல் தேனைச் சாப்பிடக் கூடாது. அதேபோல, தேனை நக்கித்தான்சாப்பிடவேண்டும். நெய்யையும், தேனைசமஅளவு சேர்த்தால், அது விசமாக மாறிவிடும்.

மருந்து சாப்பிடும்போது சில சமயம் இவ்வி ரண்டையும் சேர்த்து சாப்பிட நேரிடும். அப்படி சாப்பி டும்போது ஒரு பங்கு தேனுக்கு கால் பங்கு நெய்க்கு மேல்கலக்கக்கூடாது.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி அந்தோனிமுத்து திரேசம்மா

திருமதி அந்தோனிமுத்து திரேசம்மா நேற்று (09.11.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**21, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 967 2764**

### நாகலிங்கம் தண்டாயுதபாணி

**(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், தென்மராட்சி பிரதேச செயலகம்)**



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தண்டாயுத பாணி நேற்று (09.11.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வசந்தாதேவி (முன்னாள் விஞ்ஞான ஆசிரியை, நுணாவில் சரஸ்வதி மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம் அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற இராஜநாயகம் லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற வர்களான பரராஜசேகரம், கமலாதேவி, பராசக்தி, மகாலக்ஷ்மி ஆகியோரின் அன்புச்சகோதரரும் மல்லிகாவின் (வசந்தா) அன்புத்தந்தையும் சாந்தா, பாலகாந்தன், பிறேமா, மஞ்சுளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக நுணாவில் கந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்து ச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மட்டுவில் எல்லை ஒழுங்கை, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி 077 308 6844**

**தகவல் : குடும்பத்தினர்.**

## *2018 வாக்காளர்...*

25ஆம் திகதி, 2018ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது. அடுத்த ஆண்டுக் கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் வரை யில் 2018ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டிய லின் அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-5)

## *பொலிஸ்...*

அரசமைப்பின் 43 ஆம் பிரிவுக்கு அமைய நியமிக்கப் பட்ட அமைச்சர்களும் அவர்களின் கீழ் வருகின்ற விட யங்களும் தொடர்பான சிறப்பு அரசிதழ் அறிவித்தல் அரச தலைவரால் நேற்று வெளியிடப்பட்டது. அதில் அமைச்சுகளுக்கான விடயங்கள் மாற்றப்பட்டுள்ளன.

போர் காரணமாக அந்தக் காலப்பகுதியில் பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கியது. மகிந்த ஆட்சிக் காலத்தில் பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குவதற்கு எதிராக ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகம் அழுத்தங்க ளைக் கொடுத்தது. 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் சிவில் திணைக்களம் கொண்டு வரப்பட்டது. இதுவரை அந்த நிலமை தொடர்ந்தது. தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மீண்டும் மாற்றப்பட் டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே தொடர்கின்றார். அவரின் பொறுப்பி லேயே பொலிஸ் திணைக்களம் செயற்படவுள்ளது.

முன்னர் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருந்த ரஞ்சித் மத்தும பண்டார, புதிய அமைச்சரவை சட்டவிரோதமா னது என்றும்; தனது கட்டளைகளையே பொலிஸ் திணைக்களம் ஏற்கவேண்டும் என்றும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார். இந்தநிலை யிலேயே பொலிஸ் திணைக்களம், சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரச நிர்வாக அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த அரச வங்கிகளும் அவற்றை நிர்வகிக்கும் நிறுவனங்கள் மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் இருந்த இலங்கை மத்திய வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன தலைமை அமைச்சரும், நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ச வுக்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

அதேவேளை, அரச நிர்வாக அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்பட்ட சிறிலங்கன் வானூர்திச் சேவை மற்றும் இலங்கை வானூர்திச் சேவை ஆகியன மீண்டும் நிமல் சிறிபால டி சில்வாவின் கீழுள்ள போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சின் கீழ் கொண் டுவரப்பட்டுள்ளன. (ற-5,10)

# நாடாளுமன்றம் கூடும்போது வாக்கெடுப்பை நடத்துங்கள்

## ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம்

கொழும்பு, நவ. 10

நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது நம்பிக்கை வாக்கெடுப்பை முன்னெடுப்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுத்து வந்தது. எதிர்வரும் 14ஆம் திகதியே நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால அரசிதழ் ஊடாக அறிவித்துள்ளார்.

அன்று பெரும்பான்மையை நிரூபிக்கும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தி வருகின்றது. நாடாளுமன்றம் கூடும் அன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கொள்கை விளக்க உரை மாத்திரமே இருக்கும் என்றும், வாக்கெடுப்பு நடத்தப்படாது நாடாளுமன்றம் மீண்டும் ஒத்திவைக்கப்படும் எனவும் அரசு கூறி வருகின்றது.

தற்போது ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில், நாடு தற்போது எதிர்கொள்ளும் நிச்சயமற்ற நிலைக்கு முடிவைக் காண்பதற்காக நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது வாக்கெடுப்பை நடத்துவதற்கு உடனடியாக அனுமதிப்பதன் மூலம் பெரும்பான்மையை நிரூபிக்க அனுமதிக்கவேண்டும். இந்த விடயத்தில் மேலும் தாமதங்கள் ஏற்பட்டால் இலங்கையின் மதிப்புக்குப் பாதிப்பு ஏற்படலாம். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருகை பாதிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-5)

# ஐரோப்பிய ஒன்றியம் அடக்கி வாசிக்கட்டும்!

## கொதிக்கின்றார் கோத்தா

கொழும்பு, நவ. 10

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் டீ.ஏ. ராஜபக்ச நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதில் ஊழல் இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகளுக்காக கோத்தபாய ராஜபக்ச நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

பன்னாட்டுச் சமூகம் என்று கருதும் சில தரப்புகள் தாங்கள்தான் நாடுகளை ஆட்சி செய்கின்றன என்று எண்ணிக்கொண்டிருக்கின்றன. அவர்களின் ஆட்சிமுறை, சட்டங்கள், நிறுவனங்களின் அடிப்படையில் ஏனைய நாடுகள் ஆட்சி செய்ய வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். அவர்களைவிட முற்றிலும் வேறுவிதமான அரசமைப் பொன்றே எமக்குள்ளது. எமது நாட்டின் அரச தலைவர் தெரிவு செய்யப்படுவது மக்களின் வாக்குகள் மூலமே. அவருக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தால் கருத்துகளை எவ்வாறு வெளியிட முடியும்?. இலங்கை சுயாதீனமான நாடு என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

(ஐ-5,10)

# செல்லாது! செல்லாது!

## வாக்கெடுப்புப் பயத்தில் அரசு

கொழும்பு, நவ. 10

நாடாளுமன்றத்தை குழப்ப சபாநாயகர் முயற்சித்து வருகின்றார். எதிர்வரும் 14ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அது செல்லுபடியற்றதாகவே கருதப்படும்.

இவ்வாறு சிவில் மற்றும் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

எதிர்வரும் 14ஆம் திகதி தலைமை அமைச்சர் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்த சபாநாயகருக்கு எந்த அதிகாரமும் இல்லை. மாறாக அன்று பெரும்பான்மை தொடர்பான வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சபாநாயகரால் அறிவிக்கப்படுமாக் இருந்தால் அது சட்ட விரோதச் செயலாகும். அவ்வாறு வாக்கெடுப்பு இடம்பெற்றாலும் அது செல்லுபடியற்றதாகவே கருதப்படும்.

ஆனால் அன்று தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதைச் சமர்ப்பிக்கலாம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒழுங்கு பத்திரத்தில் உள்வாங்கப்பட்டு 5 அல்லது 6 தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றார்.

**பைசர் முஸ்தபா**

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்ததாவது

மகிந்த தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்ற கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. அரசமைப்புக்கு அமைவாகவே தலைமை அமைச்சர் நியமனம் இடம்பெற்றுள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

சபாநாயகர் அவரது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின்படி செயற்பட முடியாது. அரசமைப்பின்ப்டியே சபாநாயகர் இயங்க வேண்டும். அரச தலைவரால் நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சரை நீக்கவேண்டும் எனின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை நடத்தி, அதன்மூலம் தலைமை அமைச்சரை நீக்க முடியும். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கும் அரசமைப்பில் வரையறைகள் உள்ளன. நாடாளுமன்றம் பிற்போடப்பட்டுள்ள போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுதல் அரசமைப்புக்கு முரணானது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது வாக்கெடுப்பு நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ஐ-5,10,31,61)

# நாடாளுமன்றை கலைப்பதே தீர்வாம்

## மைத்திரிக்கு கம்மன்பில ஆலோசனை

கொழும்பு, நவ.10

அரச தலைவரால் நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சரை ஏற்க முடியாது என்று சபாநாயகர் விடுத்துள்ள எழுத்து மூல அறிவிப்பு நாடாளுமற்றைக் கலைக்க வேண்டிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இவ்வாறுவ்வாறு தெரிவித்துள்ளார் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில. பிவித்துரு ஹெல உறுமயக் கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

அரச தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றைக் கலைத்து, மக்கள் ஆதரவைப் பெற்ற தலைமை அமைச்சரைத் தெரிவு செய்வதே தற்போதைய அரசியல் நெருக்கடிக்கான சிறந்த தீர்வாகும். அரசமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இரு தலைமை அமைச்சர்கள் என்ற பிரச்சினைக்கு முற்றுப்புள்ள வைக்க அரச தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ஐ)

### யாழ்ப்பாணம் பல்கலைக் கழக

# மாணவர் ஒன்றியத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்துக்கு நேற்றுப் புதிய நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதற்கு முன்னர் இருந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய நிர்வாகத்தின் காலம் நிறைவடைந்த நிலையில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தைச் சேர்ந்த ஆர். ரமேஸ் தலைவராகவும், கலைப்பீடத்தைச் சேர்ந்த எஸ்.ப்பில்ராஜ் செயலாளராகவும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கே. கௌரிதரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கிருஸ்ணமேனன் தலைமையிலான முன்னாள் மாணவர் ஒன்றியத்தினர், புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவ ஒன்றியத்திடம் பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளனர்.

புதிய மாணவர் ஒன்றியத்தின் முதலாவது செயற்பாடாக மழை வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-21)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரது பிரதிநிதிகள் அல்லர்

## நாமல் எம்.பியின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, நவ. 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினரும், தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் புதல்வருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்தியா ருடே ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதி கூடும்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள மாட்டோம். அதை எதிர்கொள்ளவேண்டிய நிலமை ஏற்பட்டால் அதற்கான பலம் எங்களுக்கு உள்ளது. போதியளவு ஆதரவு எங்களுக்கு உள்ளது என்பதை உறுதி செய்த பின்னரே நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம்.

ரணில் விக்கிரமசிங்க மேற்குலகின் பக்கம் சாய்ந்திருந்தார். அவர் இலங்கையின் நலன்குறித்து கவலைப்படவில்லை. அதுவே பிரச்சினைகளுக்கு முதன்மைக் காரணம். ரணில் பதவி நீக்கப்பட்டது தவறு என்றால் ஏன் நீதிமன்றுக்குச் செல்லவில்லை?.

தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட நாங்கள் தயாராகவுள்ளோம். ஆனால்துரதிஷ்டவசமாக அவர்கள் தங்கள் சொந்த சமூகத்துடனேயே சேர்ந்து செயற்படவில்லை. தமிழ்க் கட்சிகள் தங்கள் நலனை மையமாக வைத்தே செயற்படுகின்றன. அவர்கள் மக்களின் நலன் தொடர்பான அக்கறையுடன் செயற்படவில்லை. பெரும்பான்மையான தமிழ் கட்சிகள் தங்கள் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்றார். (ஐ-5)



# புளிய மரம்!

## ஆரோக்கியம் தரும் சஞ்சீவகரணி


திருமதி. கிருபாவதனி சிவதீபன்

புளியமரங்களைப் பயிரிடுவது தொடர்பான முயற்சியின் ஆரம்பங்கள் ஆபிரிக்காவிலேயே முதன் முதலில் கண்டுகொள்ளப்பட்டது. வெப்பமான சூழல் சார்ந்த பிரதேசங்களில் இவை அதீத வளர்ச்சியை வெளிக்காட்டுகின்றன.

குளிரைத் தாங்கும் சக்தியை இவை கொண்டிருப்பதில்லை. ஆனால் கடற்கரை ஓரங்களில் அதிக வளர்ச்சியைப் பதிவு செய்கின்றன. பராமரிப்பும், கவனிப்பும் அதிகம் தேவைப்படுவதில்லை. காடுகளில் தன்னெழுச்சியாக வளர்கின்றன.

**நடுகை முறை**

3 தொடக்கம் 4 மாத கால பருவத்தை உடைய புளியங்கன்றுகளை '6 x 6' மீற்றர் அளவுடைய இடைவெளியில் நட வேண்டும். சித்திரை தொடக்கம் வைகாசி மாதம் வரையான கால நீட்சியுள் 2 அடி நீளம், 2 அடி அகலம், 2 அடி ஆழத்தில் குழி எடுக்க வேண்டும். அதில் காய்ந்த இலை மற்றும் தழைகளை இட்டு தீயில் அவற்றை நன்றாக எரித்துச் சாம்பலாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இதன் பிற்பாடு அந்தக் குழியில் மேல் மண், மணல், கூட்டெரு என்பவற்றை சம விகிதத்தில் நிரப்ப வேண்டும். இந்தக் கலவையை ஆடி மாத காலம் வரை ஆறவிட்ட பின், புளியங்கன்றை நடுகை செய்யலாம். கன்றுகள் நன்கு துளிர்த்து வளரும் வரை நீர் பாய்ச்ச வேண்டும்.



பின்பு தேவை
கேற்ப நீர்ப்பாசனம் செய்யலாம்.
விதையை நட்டு அதிலிருந்து உருவாகும் புளிய மரங்கள் 6 தொடக்கம் 8 வருடங்களில் பலன் தரும். செடியாக நடப்பட்ட மரங்கள் காய்க்க 3 தொடக்கம் 4 வருடங்கள் போதுமானது.

மெதுவான வளர்ச்சியை உடைய புளியமரம் அதிக ஆயுளைக் கொண்டுள்ளது. இவை 100 ஆண்டுகள் வரை பயன் தரக்கூடியவை. நன்கு வளர்ந்த புளியமரம், ஒரு வருடத்துக்கு 160 கிலோ வரை புளியை சராசரி அறுவடையாகத் தரும். புளியமரம் 25 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. 8 தொடக்கம் 10 மீற்றர் சுற்றளவைக் கொண்டிருக்கும். உறுதியோடு பக்கக் கிளைகளைப் பரப்பி வளர்வதுடன் எளிதில் முறிவதில்லை.

புளிய மரம் 'பேபேசி' இனத்தைச் சார்ந்தது. 'அமிலம், சிந்தூரம், சிந்தகம், சஞ்சீவகரணி' போன்ற பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறது. 'சிசால்பினியேசி' குடும்பத்தை சேர்ந்தது. 'டேமரிண்டஸ் இண்டிகா' என்பது இதன் தாவரவியல் பெயர்.

புளியமரத்தின் 'இலை, பூ, பிஞ்சு, பழம், ஓடு, விதை, பருப்பு, மரம்' என அனைத்துப் பாகங்களுமே பயன்தருவிகள். தடித்த ஓட்டின் அமைவினுள் புளி பாதுகாக்கப்படுகிறது. அதன் உள்ளே கடினமான விதைகள் இருக்கும். இதன் கனி புளிப்புச் சுவை கொண்டது. தாய்லாந்தில் இனிப்பான பழங்களை நல்கும் புளிய மர வகைகள் உள்ளன.

புளியந்தேன் மற்றும் மகரந்தம் என்பன தேனீக்களுக்கான சிறந்த உணவாகும். புளியமரம் காணப்படும் இடங்களில் 'தேனீவளர்ப்பை' மிகச் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும்.

புளியமரத்[illegible] கடைக்காகவும் வளர்க்[illegible] [illegible] வெளியே [illegible] உதவுகிறது. [illegible] வேர் [illegible] இருப்பதால் [illegible] பரம்பலடைந்திருக்கும். இதன் காரணம் கொண்டே புளிய மரத்தின் கீழ் [illegible] வோருக்கு களைபபு ஏற்படுகிறது.

இவற்றை அண்மித்து வேறு எந்தச் செடிகளும் வளர்வதில்லை.

**மருத்துவப் பயன்**

ஆயுள்வேத மருத்துவ முறைமையில் வயிறு மற்றும் சமிபாட்டுக் கோளாறுகளுக்கு புளி பயன்படுத்தப்படுகிறது. மருந்துத் தயாரிப்புக்கென வருடத்தில் 90 ஆயிரம் கிலோ புளியை அமெரிக்கா இறக்குமதி செய்கிறது.

**புளியம் பூ, இலைகள்**

இவை வயிற்றைச் சுத்தபடுத்தி அங்குள்ள கிருமிகளை அழிக்கிறது. புளியம் இலை இரைப்பைப் பிரச்சினை மற்றும் உணவு சமிபாடடைவதில் உள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமைகிறது. இதயத்துடிப்பை பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது.

புளியம் இலைகளை மூட்டு வீக்கங்களின் மீது பற்றிட்டு வந்தால் அந்த வீக்கம் விரைவில் குறையும். புளியம் இலை, வேப்பிலை என்பவற்றறை இடித்துக் காய்ச்சி, பின்பு அதை வடிகட்டி புண்களைக் கழுவிவர அவை விரைவில் ஆறிவிடும்.

புளியம் இலையை அவித்து, அதே சூட்டோடு சுளுக்கு உள்ள இடத்தில் ஒற்றடம் இட்டும், அவித்த இலையை வைத்து கட்டிவரவும் சுளுக்கு குணமாகும். இளம் பச்சை நிறத்தில் இருக்கும் புளியங்கொழுந்து இலைகளை பாசிப்பருப்புடன் சேர்த்துக் கடைந்து சாப்பிட உடற் பலம் நன்கு வலுப்படும். புளியங்கொழுந்தைப் பறித்து பச்சையாக சாப்பிட கண்களைப் பற்றிய நோய்கள், புண்கள் ஆறும்.

பூக்களைச் சமைத்து உண்ணலாம். புளியம் பூவுடன் காரம், உப்பு சேர்த்து உண்ண நீர்க்கடுப்பு, மூலச்சூடு, சீதபேதி, வெப்ப வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் குணமடையும். புளியம்பூவை நெய் விட்டு வதக்கி துவையலாகச் செய்து சாப்பிட்டுவர பித்தம், வாந்தி, வாய்க் கசப்பு என்பன தீரும். புளியங்கொழுந்தை பக்குவபடுத்தி உண்வுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது குருதியை நன்கு சுத்திகரிக்கிறது.

**புளியம் பழத்தின் பயன்கள்**

புளியில் கல்சியம், விற்றமின் 'பி' நிறைந்துள்ளது. தவிர பொஸ்பரஸ், இரும்பு போன்றவைகளும் உண்டு. உணவில் மணமூட்டவும், சுவை ஊட்டவும் புளி பயன்படுகிறது. மாலை வேளையில் சிறிது புளியாகாரம் செய்து சாப்பிடுவதால் குடல் இயக்கம் மேம்படும். புளி பித்த நீரால் ஏற்பட்ட கோளாறுகளுக்குச் சிகிச்சையளிக்கப் பயனுள்ள மருந்தாகிறது.

நீர்த்த புளிச்சாறு தொண்டையில் ஏற்படும் புண்னை குணமாக்குகிறது. விற்றமின் 'சி' பற்றாக்குறையை புளியம் பழம் சரி செய்கிறது.

முக்கியமாக, தோலில் ஏற்படும் ஒவ்வாமையை குணமாக்கும். புளி சூட்டைத் தணிக்கும். புளியை குழம்புபோல் கரைத்து, அதனுடன் 2 பங்கு உப்புச் சேர்த்து காய்ச்சி கொதிக்க வைத்து, இளம்சூடான நிலையில் அடிபட்டதால் ஏற்பட்ட வீக்கத்தில் தடவிவர அது கரைந்துவிடும்.

புளியந் தண்ணீரில் கொப்பளித்தால் வாய்ப்புண்கள் குறையும். புளியுடன் சுண்ணாம்பு கலந்து, அதை நன்கு குழைந்து சூட்டோடு தேள் கொட்டிய இடத்தில் பூசினால் தேள் விசம் இறங்கும். புளி, உப்பு இரண்டையும் சம அளவு எடுத்து, அரைத்து உள் நாக்கில் தடவிவர அதன் வளர்ச்சி கரையும். புளியம்பழம், கரிசலாங்கண்ணி இரண்டையும் அரைத்து நெல்லிக்காய் அளவு 8 நாள்கள் சாப்பிட்டு வர அடிதள்ளல் குணமாகும்.

ஒக்ஸினேற்றத்துக்கு நல்ல ஆதாரமாக புளி இருப்பதால், புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்துக்கு உதவி புரிகிறது. புளி உடலில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைத்து ஆரோக்கியமான இதயத்தை ஊக்குவிப்பதற்கு உதவுகிறது.

புளியைத் தினமும் ரசத்தில் சேர்ப்பதால் மிளகாய், உப்பு, பூண்டு ஆகியவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தும். உணவில் அளவோடு புளியை சேர்த்துவர உணவு சமிபாட்டுச் சக்தி அதிகரிக்கும். மதுசாரம் அருந்தியதால் ஏற்பட்ட வெறி மற்றும் மயக்கத்துக்கு புளிக் கரைசல் உகந்தது. புளி மலத்தை இளக்கக் கூடியது. என்றாலும், அளவுக்கு அதிகமாக பயன்படுத்தி வந்தால் நரை, வயது முதிர்ந்த தோற்றம் போன்றவை விரைவில் ஏற்படும்.

**புளியம் விதை!**

விதை புரதம் நிறைந்தது. இந்தப் புரதத்தில் 'புரோலமின்', 'குளுட்டெலின்', 'அல்புமின்' ஆகியவை உள்ளன. புளியங்கொட்டையின் மேல் தோலைப் பொடித்து சீதக்கழிச்சலுக்கு உட்கொள்ளக் கொடுக்க அது தீரும். கசப்பான விதைத்தோல் வயிற்றுப்போக்கு, வயிற்றுக் கடுப்பைப் போக்கும். விதையிலிருந்து அரைத்த பசையைக் கொப்புளங்களுக்குப் பூசலாம்.

புளியோடு மாதுளம் பழத்தோலையும் பொடித்து உட்கொள்ளக் கொடுக்கலாம். புளியம் விதையில் உள்ள பருப்பை இடித்துப் பொடியாக்கி, பசும்பாலில் அரைக்கரண்டியளவு தூளையிட்டு, கற்கண்டு கலந்து குடித்து வரத் தாதுவிருத்தி உண்டாகும்.

**புளிய மரப்பட்டை!**

புளிய மரப்பட்டை, சிறிதளவு உப்பு என்பவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு எரித்துச் சாம்பலாக்கி, அதில் 100 தொடக்கம் 200 மில்லி கிராம் அளவைத் தேனில் கலந்து தினமும் இருவேளைகள் சாப்பிட உணவு சமிபாடடையும், வயிற்றுப்புண் குணமாகும். புளியம் பட்டையின் சாம்பலை நீரில் கலக்கி அது தெளிந்தவுடன், அந்த நீரைக்கொண்டு வாய் கொப்பளித்துவர தொண்டைப் புண் குணமாகும்.

புளியம்பட்டையை பொடி செய்து, அதை தேங்காய் எண்ணெயில் குழைத்து ஆறாத புண்களின் மீது பூசிவர அவை குணமாகும். புளிய மரப்பட்டையும் மருத்துவ குணங்கள் கொண்ட ஒரு 'டானிக்'. புளியமர வேர்களிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் குஷ்டரோகத்துக்கு உபயோகப்படுகின்றன. உணவு சமிபாடடையும் சக்தியை உண்டாக்கும்.

**தொழிலியல் பயன் தருவிகள்!**

புளியமரம் உறுதியானது. மரவேலை செய்யக் கடினமானது. சக்கரம், கொட்டாப்புளி, உலக்கை, செக்கு, உரல், கரும்பலகை முதலானவற்றைச் செய்யப் பயன்படுகிறது. புளியம் இலையைக் கொண்டு பட்டுத்துணிகளுக்குச் சாயமிடலாம். பழச்சதையிலிருந்து 'பெக்டின்' எடுக்கலாம். பழத்திலிருந்து புளிப்பொடி, புளிச்சத்து, புளி ரசம் என்பன தயாரிக்கப்படுகின்றன.

புளியம் விதையில் இருந்து பெறப்படும் பொடி துணிக்கு மெருகூட்டவும், சணல் நூல் தயாரிக்கவும், செயற்கை இழைகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. புளியம் விதையின் தோலில் இருந்து எடுக்கப்படும் 'டானின்' தோல் பதனிடலில் பயன்படுகிறது. புளியம் பருப்பிலிருந்து தயாரித்த பசையைக் கொண்டு பலகைகள் ஒட்டப்படுகின்றன. சிமெந்துக் கலவை போலவே இவை உறுதியாக ஒட்டும் தன்மை கொண்டவை.



புளியம் விதை எண்ணெய், வார்னிஷ், பெயிண்ட் தயாரிக்கவும், விளக்கு எரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. புளியைக் கொண்டு பித்தளை, செம்பு கலந்த உலோகப் பாத்திரங்களையும், இசைக் கருவிகளையும் துலக்கினால் அழுக்கு நீங்கி பளபளப்பான தோற்றம் கிடைக்கும்.

கட்டுரையாளர்:
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## நாடாளுமன்றத்...

தலைவர் வெளியிட்டுள்ளார்.

இது அரசமைப்புக்கு முரணானதா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறியும் நடவடிக்கையில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் கருத்துக்கு அமைவாகவே தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட அரசிதழ் அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் அறிவித்தால் தேர்தல் நடைபெறாது போகலாம் என்று கூறப்படுகின்றது. (ற-5.105)

## கூர்ந்து...

யின் உள்நாட்டு விவகாரம் என்பதால் இறுதி முடிவு எட்டப்படும்வரை எந்தத் தரப்புடனும் தொடர்புகொள்ளாது அமைதி காக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் இந்திய அயலுறவுத்துறை' அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார். (ற)

## எட்டு...

புதிய தலைமை அமைச்சர் அறிவிக்கப்பட்ட பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் மிகுதியாகவிருந்த அமைச்சுக்களுக்கு நேற்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

விமல் வீரவன்ச வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சராகவும்

உதய கம்மன்பில புத்தசாசன, சமய அலுவல்கள் அமைச்சராகவும்,

எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சராகவும்,

சீ.பி. ரத்னாயக்க தபால், தொலை தொடர்புகள் அமைச்சராகவும்,

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வர்த்தக, நுகர்வோர் அலுவல்கள் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சராகவும்,

எஸ்.எம். சந்திரசேன பெருந்தோட்ட கைத்தொழில் துறை அமைச்சராகவும்,

காமினி லொக்குகே தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சராகவும்,

மஹிந்த யாப்பா அபேவர்தன கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சராகவும் நேற்று அரச தலைவர் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர். (ற-5)

## ரணில்...

திண்ணக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்புக்கு அமைவாகவே தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் நீக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தைத் தக்க வைப்பதற்கும், நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றவுமே தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முறைமை பிழை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினால் அந்தக் கட்சி மூன்றாக உடையும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 105 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் ஒருவர் விலகியிருந்தாலும் எதிர்காலத்தில் மீண்டும் அவர் எம்முடன் இணையலாம். பெரும்பான்மை தொடர்பாக நாம் கவலையடைய வேண்டிய அவசியமில்லை. மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு மாத்திரமே கையெழுத்திட்டுள்ளன. ஐக்கிய தேசிய கட்சியினர் குறிப்பிடுவதைப் போன்று ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் தலைமை அமைச்சராகுவதற்கு ஆதரவளிப்போம் என்று அந்தக் கட்சிகள் தெரிவிக்கவில்லை. முஸ்லிம் கட்சிகளும் எமக்கு ஆதரவு வழங்கும். நாம் 113 அல்ல, 120 உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்போம்.

பன்னாட்டுச் சமூகம் கூறுவது போன்று இலங்கையில் அரசியல் நெருக்கடி இல்லை. அமெரிக்காவினதும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினதும் செல்லப் பிள்ளையான ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கியமை அவர்களைக் கவலையடையச் செய்துள்ளது. நாடாளுமன்றம் 11 நாள்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரிய விடயமல்ல - என்றார். (ற-5.71.61)

## ஐ.தே.கட்சி...

அதை ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அரசிதழில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று இரவு கையெழுத்திட்ட தகவல் வெளியானதும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அலரி மாளிகைக்கு உடனடியாக அழைக்கப்பட்டனர். அங்கு இரவிரவாகக் கூட்டம் நடைபெற்றது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது அரசமைப்புக்கு முரணானது என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கருத்துத் தெரிவித்தனர். இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடப்போகின்றோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய சூழல் ஏற்பட்டால், சஜித் பிரேமதாசவை தலைவராக்கும் யோசனையும் நேற்று இரவு இடம்பெற்ற கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-5)

## தேர்தல்...

கேடுகளை முன்னெடுப்பதற்காகவே என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தனது கீச்சகப் பக்கத்தில் இந்தத் தகவலை பகிர்ந்துள்ளார்.

"அமைச்சர்களை தொடர்ச்சியாக நியமித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றைக் கலைக்க உள்ளார். எதிர்வரும் தேர்தலில் அரச அதிகாரத்தைப் பிரயோகிக்க அவர் திட்டமிட்டுள்ளார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஜனநாயகம் என்ற சொல்லை இலங்கை உத்தியோகபூர்வமாக நீக்கிக் கொள்ள வேண்டும்" என்று அவர் கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். (ற-5)

## மைத்திரியின்...

தாக்கல் செய்வேன். நான் மட்டும் அல்ல பல சட்டத்தரணிகள் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இவ்வாறு அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக அரச தலைவரால் நாடாளுமன்றத்தை இப்போது கலைக்க முடியாது. அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும். உடனடியாக வழக்கு நடவடிக்கைக்குச் செல்லக் கூடாது என்பதற்காகவே வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இரண்டு தினங்கள் இதனால் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. நாளை மறுதினம் திங்கட் கிழமை உயர் நீதிமன்றத்தை நாடுவேன் - என்றார். (ற-5.105)

## கலைக்கப்பட்டது...

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு மைத்திரி மகிந்த தலைமையிலான அரச தரப்பு கடும் பிரயத்தனம் மேற்கொண்டிருந்தது. இந்த நிலையில் நேற்று அந்தப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பதை மைத்திரி மகிந்த இருவரும் ஒப்புக் கொண்டிருந்தனர். இதனையடுத்து நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்தார்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து நான்கரை ஆண்டுகளுக்கு அரச தலைவர் கலைக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனாலும் அரசமைப்பின் 33 (2) (இ) இன்படி அரச தலைவரால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். இந்த உறுப்புரைக்கு காப்பு வாசகங்களால் மட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. இதனைப் பயன்படுத்தியே அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார் என்று அரச தலைவர் செயலக அதிகாரிகள் இந்திய ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, 1981ஆம் ஆண்டு தேர்தல் சட்டத்தின் 10ஆவது சரத்திலும், அரசமைப்பின் 70ஆவது சரத்திலும், நாடாளுமன்றம் கலைக்கும்போது வேட்புமனுத் தாக்கல் திகதி, தேர்தல் திகதி என்பவற்றைக் குறிப்பிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமையை நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான திகதியாகத் தெரிவு செய்துள்ளார். தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 19ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

மைத்திரி - ரணில் கூட்டு அரசு கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி அரச தலைவர் தேர்தலுடன் மலர்ந்தது. அதன் பின்னர் ஏழாவது நாடாளுமன்றம் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி கலைக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெற்றது. எட்டாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெற்றது.

ரணில் மைத்திரி கூட்டரசே தொடர்ந்தது. இந்த ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவின் கை ஓங்கியதைத் தொடர்ந்து கூட்டரசுக்குள் பெரியளவில் விரிசல் விழ ஆரம்பித்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அது தோற்கடிக்கப்பட்டது. அதன் பின்னர் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திடீரென ஒத்தி வைத்தார்.

மீண்டும் நாடாளுமன்ற அமர்வுகள் மே மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகியது. கடந்த மாதம் 26ஆம் திகதி திடீரென திடுதிடுப்பென தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து தடாலடியாகத் தூக்கி எறிந்தார் மைத்திரிபால சிறிசேன. மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனம் அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்குமாறு வலியுறுத்தினார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 16ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தை முடக்கி அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டார்.

அரச தலைவரின் இந்த நடவடிக்கைக்கு பல தரப்பிலிருந்தும் கண்டனம் எழுந்தது. பன்னாட்டுச் சமூகம் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்தது. இந்த நிலையில் தனது முடிவை மாற்றிய அரச தலைவர், எதிர்வரும் 14ஆம் திகதி, அதாவது இரண்டு நாள்கள் முன்னராக நாடாளுமன்ற அமர்வை நடத்துவதாக அரசிதழ் அறிவிப்பு வெளியிட்டார்.

அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய விடாப்பிடியாக நின்றார். அரச தரப்பு, அன்றைய தினம் அரச தலைவரின் உரை மாத்திரமே இடம்பெறும் என்றும் வாக்கெடுப்பு நடக்காது என்றும் தெரிவித்து வந்தது. ஆனாலும், அன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று சபாநாயகர் பிடிவாதமாக இருந்தார்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் அரச தலைவர் முதன்முறையாக ஆலோசனை நடத்தினார். முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வாவுடன் நீண்ட ஆலோசனை நடத்தினார். இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த சரத் என். சில்வா, நாடாளுமன்றத்தைக் கலைக்க அரச தலைவருக்கு அதிகாரம் உள்ளது என்று கூறியிருந்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற தகவல் பரவியதும், அரச தகவல் திணைக்களம் மறுப்பு வெளியிட்டிருந்தது. இருப்பினும் இரண்டு நாள்களின் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. (ற-5.105)

## மைத்திரி...

நடத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதில் சறுகல் ஏற்பட்டுள்ளமை தொடர்பிலேயே இருவரும் ஆராய்ந்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று மதியம் இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சின்போது நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பதை இருவரும் வெளிப்படுத்தியுள்ளனர். தற்போதைய சூழலில் 104 ஆசனங்களே தமது வசம் உள்ளது என்றும், கட்சி தாவுவதற்கான வாய்ப்புக்கள் இனி இல்லை என்றும் கருத்துக்களைப் பரிமாறியுள்ளனர்.

சிறுபான்மைக் கட்சிகளுடன் பேச்சு நடத்திய போது, அவர்கள் நடுநிலமை வகிக்கவும் தயாராக இல்லை என்றும், எதிர்த்து வாக்களிப்பதில் விடாப்பிடியாக இருக்கின்றார்கள் என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்தவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். ஆளும் கட்சி 113 என்ற எண்ணிக்கையை எட்டுவது கடினம் என்பதை மைத்திரி, மகிந்தவுக்கு கூறியுள்ளார். அத்துடன் நேற்று (நேற்றுமுன்தினம்) நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் துமிந்த சில்வா உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. அவர்கள் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் மைத்திரிபால தெரிவித்துள்ளார்.

இதன்போது மகிந்த ராஜபக்ச, நீங்கள் (மைத்திரி) கூறியதன் அடிப்படையிலேயே பதவியை ஏற்றேன். இது தொடர்பில் நீங்களே முடிவு எடுங்கள் என்று கூறியுள்ளார்.

இதன் பின்னர் நேற்று மாலை கெப்பேக்கடுவ விவசாய ஆராய்ச்சி நிலையத்தில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையில் என்ன செய்வது என்று ஆராய்ந்துள்ளனர். நாடாளுமன்றத்தைக் கலைப்பதா அல்லது பொதுவாக்கெடுப்புக்குச் செல்வதா என்பது தொடர்பில் நீண்ட ஆலோசனை நடத்தியுள்ளனர். இறுதியில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை எடுத்துள்ளனர். (ற-5)

## நாடாளுமன்று...

அமர்விலேனும் பங்கேற்காத நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி தடாலடியாக தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை தூக்கி எறிந்து விட்டு, தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்தார். இரண்டு நாள்களின் பின்னர், எதிர்வரும் 16ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தை முடக்கும் அரசிதழ் அறிவிப்பை மைத்திரிபால வெளியிட்டார். பல தரப்பிலிருந்தும், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்குமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அதையடுத்து இரண்டு நாள்கள் நாடாளுமன்ற அமர்வை முன்நகர்த்தினார். எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் அரசிதழ் வெளியிடப்பட்டது.

அதற்கு முன்பதாகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. இதனால் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சர்கள் எவரும், நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி பக்கம் அமராத நிலை, நாடாளுமன்றத்துக்கே செல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. (ற-5)

## அச்சகத்...

அமைச்சின் கீழ் இதுவரை காலமும் அரச அச்சகத் திணைக்களம் இயங்கி வந்தது. நேற்றுக் காலை அரசிதழ் ஊடாக பொலிஸ் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்து தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டார் மைத்திரிபால சிறிசேன. நேற்றிரவு மற்றுமொரு சிறப்பு அரசிதழ் அறிவிப்பு வெளியிட்டு, அரச அச்சகத் திணைக்களத்தையும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார். (ற-5)



## றொனால்டோவின் அதிரடி வீண்

# யுவென்டாஸை வென்றது மன்செஸ்டர் யுனைற்ரெட்



ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணி யுவென்டாஸை வென் றது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. றொனால்டோ அவ்வப் போது மன்செஸ்டரின் கோல் கம்பங்களை நெருங்கி வந்தபோதிலும் கோலெதையும் பதிவுசெய்ய அவரால் முடியவில்லை. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவதுபாதியின் 65ஆவதுநிமிடத்தில்றொனால்டோ யுவென்டாஸின் சார்பாக கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்ற கோல் கணக்கில் யுவென்டாஸ் ஆதிக்கம் செலுத் திக் கொண்டிருந்த போது ஜுவென் மன்செஸ்டரின் சார் பாக கோலைப் பதிவுசெய்தார். இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிய வாய்ப்புள்ளது என்று கருதப்பட்டது. 89ஆவது நிமிடத்தில் லியனார்டோ 'சேம் சைட்' கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் மன் செஸ்டர் யுனைற்ரெட் அணி வெற்றிபெற்றது. (ம)

## யாழ். பல்கலையின் வீரர்களுக்கு கராத்தேயில் வெண்கலப்பதக்கம்




யாழ்ப்பாணம், நவ. 10

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கராத்தே தொடரில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வீரர்கள் இருவர் வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றினார்கள். மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான கராத்தே தொடரில், 50 கிலோ எடைப் பிரிவினருக்கான குமித் தேயில் ஜி.ஜி.ஒபயசேகர வெண்கலப் பதக்கத்தையும், 68 கிலோ எடைப் பிரிவினருக்கான குமித்தே போட்டியில் கவிந்து நெத்சர வெண்கலப் பதக்கதையும் கைப்பற்றினார்கள். (ம-23)



## ஹெட்மயர் சாதிப்பார் என்கிறார் சந்தர்ப்போல்

மேற்கிந்தியத் தீவுகளின் இளம் அதிரடி வீரரான ஹெட்மயர், பெரியளவில் சாதிப்பார் என்று நம் பிக்கை தெரிவித்தார் மேற்கிந்தி யத் தீவுகளின் முன்னாள் வீரர் சந்தர்ப்போல்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஹெட்யமர் அதிரடி ஆட் டத்தை வெளிப்படுத்தினார். எனி னும் அதன் பின்னர் ரி20 தொடர் களில் தொடர்ச்சியாகத் தடுமாறு கிறார்.

இதனால் ஹெட்மயர் தொடர்பில் எதிர்மறை விமர்சனங்கள் முன் வைக்கப் புட்டுவரும் நிலையில் அவர் பெரியளவில் சாதிப்பார் என்று தெரிவித்தார் சந்தர்ப் போல்.

'ஹெட்மயர் மிகச் சிறந்த வீரர். அவரிடம் சிறப்பான தலைமைத் துவம் உள்ளது. 19 வயதுக்குட் பட்ட அணியை சிறப்பான முறை யில் வழிநடத்தி கிண்ணம் வெல்லவைத்தார். அனுபவம் சேரச்சேர ஹெட்மயர் சிறந்த வீர ராக உருவெடுப்பார்" என்று சந் தர்ப்போல் மேலும் தெரிவித் தார். (ம)




## வடக்கு மாகாணத்தின் வீராங்கனை பூப்பந்தாட்டத்தில் மகுடம் சூடினார்

யாழ்ப்பாணம், நவ. 10

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலை யம் தீபாவளித் திருவிழாவை முன்னிட்டு நடத்திய பூப்பந்தாட்டத் தொடரில், பெண் களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த ஜெய் காருண்யா கிண்ணம் வென்றார்.


அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளளகரங்கில் அண்மையில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் வடக்கு மாகாண வீராங்கனைகளான கம்சாயினி, ஜெய் காருண்யா இருவரும் மோதினார்கள். 2:0 என்ற நேர்செற் கணக்கில் ஜெய் காருண்யா வெற்றிபெற்றார். (ம-23)

## ஸ்ராக்குக்கு கட்டாய ஓய்வு

ஆஸ்திரேலிய அணியின் அடுத்த இரண்டு ரி20 தொடர்களில் இருந்து முன்னணி வேகப்பந்து வீச் சாளர் ஸ்ராக்குக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள் ளது. தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகி றது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் எதிர்வரும் 17ஆம் திகதி ரி20 ஆட்டமொன்று நடை பெறவுள்ளது. அதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையில் மூன்று ஆட்டங் களைக் கொண்ட ரி20 தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடர்களுக்கான ஆஸ்திரலிய் அணியில் இருந்து ஸ்ராக்குக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்படும் என்று தகவல் வெளிவந்துள்ளது. (ம)



# காலியில் கவிழ்ந்தது இலங்கை




இலங்கைக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 211 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி. காலி மைதானம் இலங்கை அணிக்குச் சாதகமானது. இதனால் இந்த மைதானத்தில் இங்கிலாந்தால் இலங்கை அணியை வீழ்த்துவது கடினம் என்று கருதப்பட்ட நிலையில் அதை மிகமிக இலகுவாகச் சாதித்தது இங்கிலாந்து அணி.

கடந்த 6ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 342 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து. அதிகபட்சமாக போக்ஸ் 107 ஓட்டங்களையும், கரன் 48 ஓட்டங்களையும், ஜெனிங்ஸ் 46 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 5 இலக்குகளையும், லக்மல் 3 இலக்குகளையும், தனஞ்சய, கேரத் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 203 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மத்தியூஸ் 52 ஓட்டங்களையும், சந்திமல் 33 ஓட்டங்களையும், டிக்வெல்ல 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொயின் அலி 4 இலக்குகளையும், ரசிட், லீச் இருவரும் தலா 2 இலக்குகளையும், அண்டர்சன், கரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்று இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணி மூன்றாவது நாளான நேற்றுமுன்தினம் 6 இலக்குகள் இழப்புக்கு 322 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஜெனிங்ஸ் 146 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 62 ஓட்டங்களையும்போக்ஸ் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணிக்கு 462 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவது இன்னிங்ஸுக்காக இலக்குச் சரிவில்லாமல் 15 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றிருந்த போது நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவுக்கு வந்தது. கருணாரத்ன 7 ஓட்டங்களுடனும், சில்வா 8 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.


இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இலங்கை அணி. அணி 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கவுசால் சில்வா. 26 ஓட்டங்களுடன் மொயின் அலியிடம் வீழ்ந்தார் கருணாரத்ன. தனஞ்சய டி சில்வாவால் முடிந்தது 21 ஓட்டங்கள் மட்டுமே. குசல் மெண்டிஸ், மத்தியூஸ் இணைந்து இலங்கை அணியின் எழுச்சிக்காகப் போரிட்டனர். அரைச்சதம் கடந்தார் மத்தியூஸ். 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குசல் மெண்டிஸ். 53 ஓட்டங்களுடன் மத்தியூஸின் இன்னிங்ஸ் முடிந்தது. அணித் தலைவர் சந்திமல் ஓர் ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். தடுமாற்றம் தொடர்ந்தது. முடிவில் 250 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இலங்கை அணி. (ம)


# பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் அன்டர்சனுக்கு கடும் எச்சரிக்கை

ஆடுகளத்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்த முயன்றமைக்காக இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் அன்டர்சனுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்தது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை.

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின மூன்றாம் நாளின்போது 39ஆவது பந்துப்பரிமாற்றத்தை அன்டர்சன் வீசினார். இந்தப் பந்துப்பரிமாற்றத் தில் ஆடுகளத்தின் இயல்பான தன்மையைக் குலைக்கும் வகையில் அன்டர்சன் ஆடுகத்தில் நடமாடுகிறார் என்று நடுவர் எச்சரித்தார். இந்த எச்சரிக்கையை ஏற்க மறுத்த அன்டர்சன் பந்தை நிலத்தில் வேகமாக வீசினார். இது பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையில் குற்றமாகும். இதனால் அவருக்குக் கடும் எச்சரிக்கை வழங்கியது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை.

அத்துடன் அண்டர்சனுக்கான தடைப்புள்ளியாக ஒரு புள்ளியையும் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை வழங்கியது. இதனால் அடுத்தடுத்த ஆட்டங்களில் அன்டர்சன் இறுக்கமாகக் கண்காணிக்கப்படுவார். ஒட்டுமொத்தமாக ஐந்து தடைப்புள்ளிகளைப் பெற்றால் அவர் ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)





# விடைபெற்றார் ரங்கன கேரத்

பன்னாட்டுகிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெற்றார் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரங்கன கேரத்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களான சங்கக்கார, மகேல ஜெயவர்த்தன, டில்சான் ஆகியோரின் ஓய்வின் பின்னர் இலங்கை அணியின் முக்கிய துருப்புச் சீட்டாகவும், அனுபவ முதிர்ச்சியுடைய வீரராகவும் கேரத் திகழ்ந்தார். தற்போது 40 வயதைக் கடந்துள்ள கேரத்தின் ஓய்வு தொடர்பில் 2016ஆம் ஆண்டிலேயே பெரியளவில் பேச்சுக்கள் இருந்தன. எனினும் அணியில் அனுபவ வீரர்கள் இல்லாத காரணத்தால் அவர் தொடர்ந்து விளையாடி வந்தார். இலங்கை அணியின் வெளிநாட்டுப் பயணங்களில் அணியின் வெற்றிக்குக் கேரத்திடம் இருந்து கிடைத்த பங்களிப்புக் குறைவாக இருந்த போதிலும், இலங்கை ஆடுகளங்களில் நடைபெறும் ஆட்டங்களில் அணியின் வெற்றிக்கு கேரத் அளப்பெரிய பங்களிப்பை வழங்கி வந்தார். இந்த நிலையில் இங்கிலாந்துக்கு எதிராக நேற்று முடிவடைந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் பன்னாட்டு அரங்கில் இருந்து கேரத் ஓய்வு பெற்றார்.

நீண்டகாலமாக இலங்கை டெஸ்ட் அணியின் ஓர் அங்கமாக இருந்து வந்தமைக்காக இலங்கை கிரிக்கெட் சபை கேரத்துக்கு நன்றி தெரிவித்துள்ளது. அவர் தொடர்பான செய்திகளையும், ஒளிப்படங்களையும் தனது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளது அது. எனினும் ஒரு ஜாம்பவானின் கிரிக்கெட் வாழ்க்கை தோல்வியுடன் முடிவுக்கு வந்தமை துரதிஸ்டமே.

93 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள கேரத் 433 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். 34 தடவைகள் ஐந்து இலக்குகளையும், 9 தடவைகள் 10 இலக்குகளையும் கேரத் வீழ்த்தியுள்ளார். (ம)

# தென்னாபிரிக்காவுக்கு ஆஸி. பதிலடி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 7 ஓட்டங்களால் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது ஆஸ்திரேலிய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 231 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹறி 47 ஓட்டங்களையும், லின் 44 ஓட்டங்களையும், பின்ஞ் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரபாடா 4 இலக்குகளையும், பிரிட்டோரியஸ் 3 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 2 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 9 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதையடுத்து 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது ஆஸ்திரேலிய அணி. அதிகபட்சமாக மில்லர் 51 ஓட்டங்களையும், பிளாசிஸ் 47 ஓட்டங்களையும், மார்க்ரம் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரொய்னிஸ் 3 இலக்குகளையும், ஸ்ராக், ஹசில்வூட் இருவரும் தலா 2 இலக்குகளையும், கம்மின்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)



## இந்திய அணியில் பந்துவீச்சாளர்களுக்கு கட்டாய ஓய்வு

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நாளை நடைபெறவுள்ள மூன்றாவது ரி20 ஆட்டத்துக்கான இந்திய அணியில் இருந்து பந்துவீச்சாளர்கள் மூவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலிரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை இந்திய அணி உறுதி செய்துவிட்ட நிலையில் இறுதி ரி20 ஆட்டத்துக்கான அணியில் இருந்து பும்ரா, உமேஸ் யாதவ், குல்தீப் யாதவ் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இருந்து புவனேஸ்வர் குமாரும் விடுவிக்கப்படலாம் என்று கணிப்புக்கள் உள்ளன. (ம)

காணி தேவை
தென்னம் தோட்டம் செய்வதற்கான காணி தேவை.
(CS 21095) (04.17)
077 729 5428

வேலை வாய்ப்பு
உருக்கு அலுமாரி செய்வதற்கு அலுமாரி வேலை தெரிந்தவர்கள். வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.
(CS 21066) (04.17)
077 905 0186/077 226 9950

A/L பொருளியல் 6
- அரசாங்கப் பொருளியல் -
புதிய பாடத்திட்ட நூல் : வர்ணப்பக்கங்களுடன்
வங்கியாளர் & போட்டிப் பரீட்சைகளுக்குமுரியது
A/L 2015, A/L 2016 பரீட்சைகளில் 99 புள்ளிகளும்
2017 A/L, 2018 A/L பரீட்சைகளில் 100 புள்ளிகளும்
பெற வைத்த நூல்களின்
புள்ளிகள் 100/100
ஆசிரியர்:- வே.கருணாகரன்
ரூபா 350
பூபாலசிங்கம் புத்தகசாலை / அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(CS21101)(11.17)

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை
ஆரம்பம் 05.12.2018 யாத்திரீகர் 10 நாள்கள் 16
தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.
மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர.வாகன வசதி செய்து தரப்படும்)
வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.
தொடர்புகளுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
sriranganathan1944@gmail.com / sriranganathan2601@gmail.com
T.P - 077 768 0102/ 077 736 2154

# இந்தியா - தீவுகள் இறுதி ரி20 நாளை



இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி20 தொடரின் இறுதியாட்டம் நாளை நடைபெறவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட், ஒருநாள் தொடர்களை இந்திய அணி கைப்பற்றியது. ரி20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரிலும் முதலிரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்திய அணி கிண்ணம் வெல்வதை உறுதி செய்துள்ளது. இந்த நிலையில் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. (ம)

## கூடைப்பந்தாட்ட அணித் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 10

இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் மூத்த பிரிவினருக்கான 52ஆவது கூடைப்பந்தாட்டத் தொடர் இந்த மாதம் இறுதியில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்றுவதற்கான யாழ்ப்பாண மாவட்ட அணித் தெரிவு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இந்த அணித் தெரிவு இடம்பெறவுள்ளது. பெண்கள் அணித் தெரிவு மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரையும், ஆண்கள் அணித் தெரிவு மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் இடம்பெறவுள்ளன. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.